# தமிழரசு

ஜனவரி 2005




ACE









# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
மார்கழி – தை
மலர்: 36 இதழ்: 7
ஜனவரி 2005
விலை ரூ.10

**இந்த இதழில்...**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ........ 2

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்கு மேலும் ரூ.396 கோடி மதிப்பிலான உதவிகள்
*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 29.1.2005)* ........ 3

★ கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள்
*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 3.1.2005)* ........ 6

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி ........ 9

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள் ........ 10

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட ரூ.4,800 கோடி நிதி வழங்க வேண்டும்.
*(மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை)* ........ 12

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் ........ 17

★ சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குச் சென்னை மாநகராட்சியின் நிவாரணப் பணிகள் ........ 31

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் நிவாரணப் பணிகள் ........ 33

★ சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலேசிய நாட்டின் நிதிஉதவி ........ 35

★ பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் உதவி ........ 36

★ அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை மற்றும் நிறைவுரை ........ 37

★ காஞ்சிபுரம் மாவட்டம் – சுனாமி பாதித்த பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள் ........ 45

★ தமிழுக்கு அதிகாரம் தந்த தமிழன் – (கவிதை) கவியரசர் இளந்தேவன் ........ 49

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண சீரமைப்புப் பணிகள் ........ 51

★ பெற்றோரை இழந்த பெண்களின் பெயரில் வைப்புநிதி
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 4.1.2005) ........ 56

★ கடலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் மின்னல்வேக நிவாரணப் பணிகள் ........ 57

★ போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 25.12.2004)* ........ 65

★ கடலோரத்தில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ.5,000 கோடி வழங்க வேண்டும்
*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிக் குழுவிடம் வலியுறுத்தல்)* ........ 67

★ சென்னை மாவட்டப் பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள் ........ 69

★ சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுத் தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி ........ 73

★ பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி
*(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 18.1.2005)* ........ 76

**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு
இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் பக்க அட்டை : சுனாமி பேரலை பாதித்த மாவட்டங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார்.

*ஆசிரியரும் வெளியிடுபவரும்:* **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., ஆணையர் மற்றும் இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# புத்தாண்டு புத்தெழுச்சியை அளிக்கட்டும்! புது மலர்ச்சியைப் படைக்கட்டும்!!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
**புத்தாண்டு வாழ்த்துச் செய்தி**

புத்தாண்டு மலர்கின்ற இந்தத் திருநாளில் எல்லோருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நடந்து முடிந்த ஆண்டு நம் நினைவை விட்டு அகலாத ஆண்டாக நம்மைக் கடந்து சென்றிருக்கிறது.

சாதனைச் சரித்திரங்கள் பல படைக்கச் சாதகமாக இருந்த அதே 2004–ஆம் ஆண்டுதான், விடைபெற்றுச் செல்கின்ற வேளையில் வேதனையை விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறது. நீலக்கடல் அருகே நிம்மதியாக வாழ்ந்த மக்கள் ஆழிப் பேரலைகளால் அழிக்கப்பட்ட அவலம் நடந்திருக்கிறது. உயிர் நீத்த மக்களுக்காக உள்ளம் உருகும் அதே வேளையில், துயர்ப்படும் மக்கள் மறுவாழ்வு பெற அனைத்து உதவிகளையும் அரசு ஆற்றி வருகிறது.

எதிர் நிற்க இயலாத இயற்கை பேரிடரால் உற்றார் உறவினர்களை மட்டுமல்லாமல் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு வாடி நிற்கும் நம் அன்புச் சகோதர சகோதரிகளின் வாட்டம் போக்க நம் அன்பும், ஆதரவும் உதவியும் தேவை. எனவே, என் அருமை தமிழகப் பெருமக்கள் அனைவரையும் பேரிடர் தீர்க்கும் இந்தப் பெரும்பணிக்கு வாரி வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாண்டு என்னருமைத் தமிழக மக்களுக்குப் புதிய நம்பிக்கை வழங்குகின்ற புத்தாண்டாக மலரட்டும்!

புத்தாண்டில் பூக்கின்ற புதிய நம்பிக்கை, புத்தெழுச்சியை அளிக்கட்டும்; புது மலர்ச்சியைப் படைக்கட்டும்; புதுவளர்ச்சியை வழங்கட்டும்!

உறுதி கொண்ட உள்ளத்தால் ஊழை வெல்லும் ஊக்கத்தால், ஓய்வறியா உழைப்பால், புத்தம் புதிய பொற்காலத்தைத் தமிழகத்தில் உருவாக்குவோம்.

என் அன்புக்கு உரிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்கு மேலும் ரூ.396 கோடி மதிப்பிலான உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 29.1.2005

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை 26.12.2004 அன்று , சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்கின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, இந்தப் பேரிடரில் கடலோரக் கிராமங்களில் வசித்து வந்த மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுத் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங் களையும் முற்றிலுமாக இழந்துவிட்டார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாகப் பார்வையிட்டதுடன், பாதிக்கப் பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண தொகுப்பு உதவிகளை 28.12.2004 அன்றே அறிவித்து நிவாரண உதவிகள் வழங்கும் பணிகளை 30.12.2004 அன்று நான் துவக்கி வைத்தேன்.

கடலோர மீனவக் குடும்பங்களின் துயர நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்றுக் கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட 28.12.2004 அன்றே நான் ஆணையிட்டேன்.

இதன்படி, பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது வள்ளங்களுக்கான வலைகளை மாற்றுவதற்காக வள்ளம் ஒன்றுக்கு 20,000 ரூபாய் என்ற வீதத்தில் 20 கோடி ரூபாய், கட்டுமரங்களுக்கான மீன்பிடி வலைகள் மாற்றுவதற்காக கட்டுமரம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் என்ற வீதத்தில் 20 கோடி ரூபாய்; வள்ளங்களைப் பழுதுபார்ப்பதற்காகவும் அல்லது புதுப்பித்துக் கொள்வதற்காகவும், வள்ளம் ஒன்றுக்கு 15,000 ரூபாய் என்ற வீதத்தில் 15 கோடி ரூபாய், கட்டுமரங்களைப் பழுது பார்ப்பதற்காக அல்லது புதுப்பித்துக் கொள்வதற்காக 5,000 ரூபாய் என்ற வீதத்தில் 10 கோடி ரூபாய் என மொத்தம் 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட நான் ஆணையிட்டேன்.

இதுவன்றி பாதிக்கப்பட்ட மீன்பிடி படகுகளின் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் மோட்டார் இயந்திரங்களைப் பழுதுபார்க்க ஒரு மோட்டார் இயந்திரத்திற்கு 5,000 ரூபாய் வீதம் 78 இலட்சம் ரூபாய் உதவியினை வழங்கிடவும் ஆணையிட்டேன்.

பின்னர், சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் மற்றும் பொதுச் சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளைச் சீர்படுத்தவும் தேவையான 4,800 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்கும்படி பாரதப் பிரதமர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு அளித்த கோரிக்கை மனுவில் நான் கோரியிருந்தேன். இதைத் தவிர, கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவு (Groynes) ஆகியவை கட்டுவதற்காக மேலும் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு அளிக்கவும் கோரியிருந்தேன். இதில், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரத்தைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில், முழுமையாகச் சேதமடைந்த அல்லது காணாமல் போன அவர்களது கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகு ஆகியவற்றிற்கு மாற்றாகப் புதிய கண்ணாடி

இழை கட்டுமரங்களும், வள்ளங்களும் மற்றும் விசைப்படகுகளும் வாங்க முழு மானியம் வழங்கப்பட வேண்டும் என்று நான் கோரியிருந்தேன். பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது வீடு, உடைமைகள் மற்றும் பிழைப்பு ஆதாரமான படகு, வலைகள் ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இழந்துவிட்ட காரணத்தால் வங்கிக் கடன் சுமையை அவர்களால் ஏற்க இயலாது என்பதால் முழு மானியம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பாக 15.1.2005 அன்று சென்னையில் மத்திய விவசாயத் துறை அமைச்சருடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கண்ணாடி இழை கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகுகள் ஆகியவை முழு மானியத்துடன் வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், சேதமுற்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை மீளக் கட்டுவதற்கும், முகத் துவாரங்களையும், துறைமுகங்களையும் தூர் வாரி ஆழப்படுத்தவும் தமிழக அரசு கோரியுள்ள நிதி உதவியை முழுமையாக வழங்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்தினேன்.

மீனவர்கள் மறுவாழ்வுக்கும், மீன்பிடித் துறைமுகங்களை மீளக் கட்டுவது போன்ற உள்கட்டமைப்புக்காகவும் கோரப்பட்ட மொத்தத் தொகை 1030.93 கோடி ரூபாய் ஆகும். இதில் மீனவர் மறுவாழ்விற்காகக் கோரப்பட்ட மானியத் தொகை 907.53 கோடி ரூபாய் ஆகும். ஆனால், 19.1.2005 அன்று மத்திய அரசு வெளியிட்டுள்ள நிவாரண உதவி அறிவிப்பில் மீனவர்கள் மறு வாழ்விற்காக அறிவிக்கப்பட்ட மானியத் தொகை சுமார் 346 கோடி ரூபாய் ஆகும். மீதமுள்ள தொகை வங்கிகளின் மூலம் மீனவர்களுக்குக் கடனாக வழங்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

23.1.2005 அன்று மத்திய விவசாயத் துறை அமைச்சருடன் நடத்திய கலந்தாலோசனையின் போதும் மீனவர் மறுவாழ்விற்கு அளிக்கப்படும் உதவி முழு மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்.

மத்திய அரசு மீனவர்களுக்கான நிவாரணத் திட்டம் அறிவிப்பதற்கு முன்னதாகவே, அதாவது 28.12.2004 அன்றே 65 கோடி ரூபாய்க்கான நிவாரணத் தொகுப்பினை நான் அறிவித்தேன். அதன் அடிப்படையில் வாழ்வாதார நிவாரண உதவிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கான வாழ்வாதார நிவாரணங் களுக்காகக் கீழ்க்காணும் கூடுதல் தொகுப்பு உதவிகளை வழங்கிட தற்போது நான் ஆணை யிட்டுள்ளேன்.

1. பாதிக்கப்பட்ட மீனவர்கள் முழுமையாகச் சேத மடைந்த தங்களது மரத்திலான கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரங்களையோ அல்லது கண்ணாடி இழையிலான கட்டுமரங்களையோ தங்களது விருப்பப்படி வாங்கிக் கொள்ள அரசு மானிய உதவி வழங்கும். இதன்படி,

அ) புதிய மரக் கட்டுமரங்களை வாங்க விரும்பும் மீனவர்களுக்கு மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுமையும் அரசு மானியமாக வழங்கப்படும்.

அல்லது

ஆ) சேதமுற்ற மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாகக் கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்குக் கண்ணாடி இழை கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த மானியம் கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவற்றின் மொத்த விலை 1.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் வழங்கப்படுகிறது.

2. அதேபோல முழுமையானச் சேதமடைந்த வள்ளங்களுக்குப் பதிலாக புதிய வள்ளங்கள் வாங்க அரசு மானியம் வழங்கும். இதன்படி, முழுமையாகச் சேதமடைந்த மரம் மற்றும் கண்ணாடி இழை வள்ளங்களுக்குப் பதிலாக புதிய வள்ளங்கள், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கப்படும். இந்த மானியம் வள்ளம், மோட்டார் இயந்திரம் மற்றும் உரிய வலை ஆகியவற்றின் மொத்த விலை 1.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் வழங்கப்படுகிறது.

3. முழுமையாகச் சேதமடைந்த விசைப்படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப்படகுகள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, அதன் மொத்த விலையில் 35 சதவிகித மானியம் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை 5 இலட்சம் ரூபாய் ஆக இருக்கும்.

பகுதி சேதமடைந்த கட்டுமரம் மற்றும் வள்ளம் ஆகியவற்றைப் பழுது நீக்கிச் சீரமைக்க ஏற்கெனவே உதவித் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். அதன் தொடர்ச்சியாகப் பின்வரும் உதவிகளை வழங்க நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

1. பகுதி சேதமடைந்த மரத்திலான கட்டுமரங்களைச் சீரமைக்க 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கிட ஏற்கெனவே நான் ஆணையிட்டிருந்தேன். தற்போது சில கட்டுமரங்களைச் சீரமைக்க 10,000 ரூபாய் வரை தேவைப்படுகிறது என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர். இந்தக்

# தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் மூலம் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 6.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் வாஷிங்டன் நகரிலுள்ள Global Peace Initiative அமைப்பின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே.ஏ. பால் மற்றும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பிஷப் டாக்டர் எம். பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து தமிழகத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருட்களை அளித்தார்கள்.

26.12.2004 அன்று தமிழகத்தில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக உதவிகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். இவரது வேண்டுகோளை ஏற்று, பல்வேறு தரப்பினர் தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகின்றனர். இவ்வகையில், தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக அமெரிக்க நாட்டின் வாஷிங்டன் நகரிலுள்ள Global Peace Initiative என்னும் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே.ஏ.பால் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பிஷப் டாக்டர் எம். பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் நிவாரணப் பொருட்களை நேரில் வழங்கினார்கள்.



இந்த நிகழ்வின்போது, பிரபல உலக முன்னாள் குத்துச் சண்டை சாம்பியன் திரு. இவாண்டர் ஹோலிஃபீல்ட் (Mr. Evander Hollyfield, Former World Heavy Weight Champion), Global Peace Initiative அமைப்பின் செயல் இயக்குநர் திரு. தவே மெக்கியுடே (Mr. Dave Macquade, Executive Director), தேசிய இயக்குநர் டாக்டர் கே. டேவிட் ராஜு, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் டி. கமால் ஷெரீஃப், சென்னை, வெல்நெஸ் பவுண்டேஷனின் தலைவர் டாக்டர் விஜய் ஜி. பிரபாகர் மற்றும் செயலாளர் டாக்டர் கே. மயில்வாகனன் ஆகியோர் உடனிருந்தனர். ❖

---

கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, கட்டுமரங்கள் பழுது நீக்க நிவாரண உதவித் தொகைக்கான உச்ச வரம்பை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க தற்போது நான் ஆணையிட்டுள்ளேன்.

2. பகுதி சேதமடைந்த விசைப்படகுகளைச் சீரமைக்க அதன் சேத மதிப்பீட்டில் 60 சதவிகிதம் மானிய உதவி வழங்கப்படும். வழங்கப்படும் மானியத்தின் அதிகபட்ச அளவு 3 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

விசைப்படகுகள் பழுது நீக்கம் செய்வதற்கும், கண்ணாடி இழை கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகு ஆகியவற்றைப் புதிதாக வாங்குவதற்கும் மானியம் போக எஞ்சியுள்ள தொகைக்கான வங்கிக் கடன் பெற்றுத்தர மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. இந்த வங்கிக் கடன் 1½ ஆண்டுகளுக்குப் பிறகு தவணை முறையில் 5 சதவிகித வட்டியுடன் 7 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்கிட வேண்டும் என்று மத்திய அரசிடம் நான் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன். இதனை ஏற்று, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எவ்வித கடன் சுமையும் ஏற்படாத வண்ணம் முழு மானியத்துடன் கூடிய உதவித் திட்டத்தை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று நான் கோரியுள்ளேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறுவாழ்வுக்காக இன்று நான் அறிவித்துள்ள இந்தத் தொகுப்பு உதவிகளுக்கு மொத்தம் 396 கோடி ரூபாய் செலவாகும். 28.12.2004 அன்று நான் அறிவித்த 65 கோடி ரூபாய் நிதி உதவியுடன், இன்றைக்கு அறிவிக்கப்பட்டுள்ள உதவியையும் சேர்த்து மொத்தம் 461 கோடி ரூபாய் செலவில் மீனவர்கள் தங்களது வாழ்வாதாரங்களைப் பெற்று புது வாழ்வு தொடங்குவதை நான் உறுதி செய்துள்ளேன்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களது புதிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் தொடங்கும் வகையில் அவர்களது பிழைப்பு ஆதாரங்களை உறுதி செய்திட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் இந்தத் தொகுப்பு உதவிகளை நான் அறிவித்துள்ளேன். சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடித் தொழிலைப் புதிய உற்சாகத்துடன் மேற்கொண்டு, ஒரு புது வாழ்வு காண இந்தத் தொகுப்பு உதவித் திட்டம் பயனுள்ளதாக அமையும் என்று நான் நம்புகிறேன். ❑

# கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 3-1-2005



26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைத் திடீரென பெரும் சீற்றத்துடன் சுனாமி பேரலைகள் தாக்கியதின் விளைவாக, அப்பகுதியிலுள்ள கடலோரக் கிராமங்களில், எண்ணிப் பார்க்கவும் இயலாத உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டன. பாதிக்கப்பட்ட இடங்களில் போர்க்கால அடிப்படையில் தேடுதல் பணிகளும், மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிட 133 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு தொகுப்பு உதவித் திட்டங்களை நான் அறிவித்து, நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து வழங்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இரண்டு செட் சீருடைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்க நான் ஆணையிட்டேன். இதுவன்றி, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த, நிராதரவாக நிற்கும் அனைத்துக் குழந்தைகளையும் தமிழக அரசே தத்தெடுத்துப் பாதுகாக்கவும், சுனாமி பேரலைகள் திடீரென தாக்கியதன் காரணமாக அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிட, அவர்களுக்கு உளவியல் ரீதியான அனைத்து ஆலோசனைகள் வழங்கிட அந்தப் பகுதிகளுக்கு உளவியலாளர்களை (counsellors) அனுப்பிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

பொருளீட்டி குடும்பத்தைக் காத்து வந்த குடும்பத் தலைவர்கள் பலர் இந்தப் பேரழிவில் உயிர் இழந்து விட்டனர். இதனால் அவர்களைச் சார்ந்திருந்த குடும்பங்கள் தற்போது ஆதரவற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, கணவரை இழந்த பெண்களும், மகனை இழந்த வயது முதிர்ந்த பெற்றோரும் பிழைப்புக்கு வழியின்றி உள்ளனர்.

இந்தப் பேரழிவால் உயிர் இழந்த ஒவ்வொருவருக்கும் நிவாரண உதவியாக ஒரு இலட்சம் ரூபாய் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கிட நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். எனினும், குடும்ப வருவாயை ஈட்டி வந்த உறுப்பினர் இறந்து விட்ட நிலையில், அக்குடும்பங்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று நான் முடிவெடுத்துள்ளேன். இதன்படி, அரசு தற்போது ஆதரவற்றோருக்காகச் செயல்படுத்தி வருகின்ற ஒய்வூதியத் திட்டங்களான முதியோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஒய்வூதியத் திட்டம் ஆகிய உதவித் திட்டங்களில் அந்தந்த திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகைகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டங்களின் கீழ் உதவி வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும், இவர்களுக்கு நாள்தோறும் இலவச சத்துணவும், மாதந்தோறும் இலவச அரிசியும் வழங்கப்படும். அதாவது சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதந்தோறும் 2 கிலோ அரிசியும், உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதந்தோறும் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். இதுவன்றி, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும்,

ஆண்டுக்கு இரு முறை இலவசமாக வழங்கப்படும். பாதிக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்திட இந்த உதவிகள் பயனுள்ளதாக இருக்கும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள இத்தகைய முதியோர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களை உடனடியாகக் கண்டறிந்து, மேற்காணும் திட்டங்களின் கீழ் அவர்களுக்கு உதவி அளிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இத்திட்டங்களின் பயன்கள் ஒரு வார காலத்திற்குள் சென்றடைந்து அவர்கள் உடனடியாக இந்த உதவித் தொகையினைப் பெறுகின்ற வண்ணம் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த உத்தரவு உடனே செயலாக்கம் பெற்று உதவித் தொகைகள் பாதிக்கப்பட்டோருக்குச் சென்றடையத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வருவாய் நிருவாகத் துறை சிறப்பு ஆணையர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளேன்.

# பெற்றோரை இழந்த இளம் பெண்களுக்கு ரூ. 5 இலட்சம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 3–1–2005

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவிலான சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், தமிழகத்தின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களும், நகரங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எவரும் நினைத்துப் பார்க்கவும் இயலாத மிகக் கடுமையான உயிர் சேதத்தையும், பொருட் சேதத்தையும் கடலோரக் கிராமங்கள் சந்தித்தன. இது பற்றிய விவரம் எனக்குக் கிடைத்த உடனேயே தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மின்னல் வேகத்தில் மேற்கொள்ள தமிழக அரசின் நிருவாக இயந்திரத்தை நான் முடுக்கி விட்டேன். போர்க்கால அடிப்படையில் தேடும் பணிகளும், மீட்புப் பணிகளும் எனது உத்தரவின் பேரில் விரைந்து மேற்கொள்ளப் பட்டன.

கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் தங்களது உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டன. அவர்கள் மீண்டும் புதிதாக வாழ்க்கை தொடங்குவதற்கு ஏதுவாக பல்வேறு நிவாரண உதவிகளை நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன்.

இந்தப் பேரழிவால் மூவாயிரத்திற்கும் அதிகமான நபர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். படுகாயம் அடைந்தவர்களில் பலர் தங்கள் கண்களை இழந்துள்ளனர். மேலும், கை, கால் போன்ற உடல் உறுப்புகளையும் இழந்துள்ளனர். இவ்வாறு உடல் உறுப்புகளை இழந்துள்ள அனைவருக்கும் கருணைத் தொகையாக நபர் ஒருவருக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும். மேலும், இவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும் அரசு மருத்துவமனைகள் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டுப் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு மேல் உள்நோயாளியாகச் சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபாய் வழங்கப்படும்.

இந்தப் பேரழிவால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளை அரசே தத்தெடுத்து அரசு காப்பகங்களில் அவர்கள் பராமரிக்கப்படுவர் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகையான 2 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அக்குழந்தைகள் 18 வயது அடையும் போது, அவ்வைப்பீட்டின் முதிர்வுத் தொகை அக்குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று ஏற்கெனவே நான் அறிவித்திருந்தேன். அரசு சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் இக்குழந்தைகளுக்கு வழங்கப்படும். இதைத் தவிர அவர்களுக்குப் பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து கிடைக்கும் ரூபாய் ஒரு இலட்சத்துடன் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் பெற்றோர்களை இழந்து அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படும். இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை இந்தக் குழந்தைகள் 18 வயது நிரம்பியவுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இது

அவர்களது பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

சுனாமி பேரழிவால் 14 வயதிலிருந்து 18 வயதில் உள்ள இளம் பெண்கள் அனாதையாக்கப்பட்டுள்ளனர். இயற்கைப் பேரிடரால் எதிர்காலம் கேள்விக் குறியாக ஆக்கப்பட்டுள்ள இந்த இளம் பெண்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து, அவர்களுக்கு வளமான ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது. இத்தகைய இளம் பெண்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசு சேவை இல்லங்களில் உடனடியாகச் சேர்க்கப்படுவர். கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் புதியதாக அரசு சேவை இல்லங்கள் உடனடியாகத் துவங்கப்படும். அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் மற்றும் உடைகள் வழங்கப்படும். அவர்கள் சேவை இல்லங்களில் தங்கி தங்களது கல்வியைத் தொடர்ந்து கற்க வகை செய்யப்படும். இப்பெண்கள் தங்கள் சொந்தக் காலிலே நிற்பதற்கு வழிவகை செய்யும் வகையில் அவர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படும். இதன் மூலம் அவர்கள் ஏற்ற சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள இயலும். மேலும், அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதைப் போலவே இவர்கள் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்பட்டு, இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை இந்த இளம் பெண்கள் 18 வயது நிரம்பியவுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இது அவர்கள் சொந்த தொழில் தொடங்கவோ அல்லது உயர்கல்வி கற்பதற்கோ பயன் உள்ளதாக அமையும்.

ஆழிப் பேரலையின் தாக்குலால் நிராதரவாக ஆக்கப்பட்டுள்ளவர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க எனது அரசு ஆயத்தமாக உள்ளது. ★

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் பணியாற்றிட

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, சென்னை மாநகரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், அதன் பிரிவு அலுவலகங்கள், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றம் பிரிவு அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் சனிக்கிழமை களிலும் பணியாற்றிட உத்தர விட்டுள்ளார்கள். பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இந்த நடைமுறை 1.1.2005 முதல் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் வாகன ஒட்டுநர் உரிமம் வழங்குதல், உரிமம் மாற்றி வழங்குதல், முகவரி மாற்றம் முதலான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பொதுமக்கள், குறிப்பாக தனியார் அலுவலகங்களில் பணியாற்றுவோர் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகியோர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்குச் சென்று இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனில், தங்களது அலுவலகங்களில் விடுப்பு மேற்கொண்டுதான் இந்தப் பணிகளைக் கவனிக்க முடிகிறது என்றும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் பணியாற்றினால் தங்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்றும் தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கைகள் விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளைக் கவனமுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பொதுமக்கள் நலன் கருதி, சென்னை நகரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், அதன் பிரிவு அலுவலகங்கள், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றம் பிரிவு அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் 1.1.2005 முதல் சனிக்கிழமைகளிலும் பணியாற்றிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, இந்த அலுவலகங்கள், பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து அல்லாத (non-transport category) ஏனைய வாகனங்களுக்கான, பழகுவோர் வாகன ஒட்டுநர் உரிமம் (Learners Driving Licence) வழங்குதல், வாகன ஒட்டுநர் உரிமம் (Driving Licence) வழங்குதல், நகல் வானக ஒட்டுநர் உரிமம் (Duplicate Driving Licence) வழங்குதல், வாகன ஒட்டுநர் உரிமங்களைப் புதுப்பித்தல் (Renewal of Driving Licence), வாகன ஒட்டுநர் உரிமங்களில் முகவரி மாற்றம் (Change of address), பதிவுச் சான்றிதழில் வாகன உரிமை மாற்றித் தருதல் மற்றும் முகவரி மாற்றம் (Change of address and transfer of ownership in Registration Certificate), பதிவுச் சான்றிதழில் அடைமான ஒப்பந்தம் ரத்து செய்தல் மற்றும் அடைமான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தல் (Endorsement of hypothecation agreement and cancellation of hypothecation agreement in Registration Certificate - non transport category) முதலான பணிகளைச் சனிக்கிழமைகளிலும் மேற்கொள்ளும்.

இந்தப் புதிய நடைமுறையைப் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். □



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

# செல்வி **ஜெ ஜெயலலிதா**

# அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி

மங்கலப் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் உலகத் தமிழர்கள் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற வள்ளுவப் பெருமானின் வாக்குக்கு இணங்க, இந்த உலகம் உழவர் பெருமக்களின் பின் செல்கின்றது. அந்த உழவர் பெருமக்கள் தங்கள் உழைப்பின் பயனைப் பெற்று உவகை அடையும் நாள் இந்தப் பொங்கல் திருநாள்.

இயற்கைப் பேரிடர் கடலோரத் தமிழகத்தைச் சிதைத்து விட்ட வேளையிலே பிறந்திருக்கிறது. இந்தத் தைத் திங்கள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். பிறக்கின்ற தைத் திருநாள் தமிழர்க்குப் புது வாழ்வு அளிக்கின்ற திருநாளாக மலரட்டும்; புதிய நம்பிக்கையை அளிக்கின்ற திருநாளாக மலரட்டும்.



இயற்கைக்கு அஞ்சி வாழாமல் இயற்கையை வென்று வாழ்வதில் தான் மானுடத்தின் வெற்றி அமைந்திருக்கிறது. மனிதகுல வரலாறு நமக்குக் கற்றுத் தருகின்ற மகத்தான பாடம் இதுதான். எனவே, நம்பிக்கை கொள்வோம்! இயற்கைப் பேரிடரால் நிலை குலைந்த மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப ஏற்ற பணிபுரிவோம்!

**இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் தாண்டி, புதியதொரு பொற்காலத்தைத் தமிழகம் காண உழைப்போம்!**

பொங்கட்டும் பொங்கல்!
பூக்கட்டும் புதுவாழ்வு!
மங்கலப் பொங்கல் நாள்
மகிழ்ச்சிதனைப் பெருக்கட்டும்!

என்று மனமார வாழ்த்தி, என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பொங்கல் திருநாள் நல் வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வேண்டுகோள்

இந்தோனேசியக் கடற்கரைக்கு அப்பால் ஆழ்க்கடல் படுகையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து எழுந்த ராட்சத சுனாமி அலைகள் (tsunami waves) 26.12.2004 அன்று தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளைக் கடுமையாகத் தாக்கின. இதனால் தமிழகக் கடலோரப் பகுதிகள் சொல்லவொண்ணா பேரழிவுகளுக்கும், இன்னல்களுக்கும் இலக்காயின. இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு திடீரெனவும், கடும் சீற்றத்துடனும் பேரலைகள் உருவெடுத்து பேரழிவை ஏற்படுத்தி உள்ளன. இப்பேரழிவின் காரணமாகத் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளின் பொருளாதாரம் முற்றிலுமாகச் சீரழிந்து விட்டது. சென்னை தொடங்கி கன்னியாகுமரி வரை தமிழகத்தின் கடற்கரை நெடுகிலும் வாழ்ந்து வரும் மீனவச் சமுதாயத்தினரின் வாழ்க்கையை இது சீரழித்து விட்டது. இலட்சோப இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை இழந்து விட்டனர். தமிழக அரசின் ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் முடுக்கி விடப்பட்டு, போர்க்கால அடிப்படையில் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவம், கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியவையும் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இப்பேரழிவினால் பல நூறு கோடி ரூபாய் அளவுக்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட வர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், அவர்களுக்கு மீண்டும் குடியிருப்புகள் கட்டித் தரவும், தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு நெஞ்சை உருக்கும் இந்தச் சோகச் சம்பவத்தால் துன்புற்று, மனம் இரங்கும் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவும் தேவைப்படுகிறது.

பல தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகள், நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், கொடையுள்ளம் கொண்ட மனிதநேயப் பண்பாளர்கள் மற்றும் இந்தத் துயரச் சம்பவத்தால் கலக்கமுற்று மனமுருகிய பொதுமக்கள் ஆகியோர் முன்வந்து உதவியும், ஆதரவும் அளித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நிதித் தட்டுப்பாடு காரணமாக நிவாரணப் பணிகள் தடைப்பட்டு விடாமல் தொய்வின்றித் தொடர்ந்து மேற்கொள்ளப்பட ஏதுவாக அனைத்து நன்கொடைகளும் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"–க்கு அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.** இவ்வாறு வழங்கப்படுகின்ற அனைத்து நன்கொடைகளுக்கும் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80(G)– ன் கீழ் 100 சதவிகிதம் வரி விலக்கு அளிக்கப்படும்.

"முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"–க்கு அளிக்கப்படும் நன்கொடைகள், காசோலையாகவோ, வரைவோலையாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்படலாம்.

**இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்**
**முதலமைச்சரின் பொது நிவாரண நிதி,**
**நிதித்துறை, தமிழ்நாடு அரசு,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை – 600 009.**

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்



# வேண்டுகோள்

**26**.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமும், மறுவாழ்வும் அளிப்பதற்காக நிதி உதவியும் ஆதரவும் நல்குமாறு பொதுநல சிந்தையுள்ள குடிமக்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகள், நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் கொடையுள்ளம் படைத்தோர் ஆகியோர் அனைவருக்கும் 28.12.2004 அன்றே நான் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

நிவாரணப் பணிகளுக்காக அனைத்து தரப்பினரிடமிருந்தும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதியுதவிகள் வந்த வண்ணம் உள்ளன. நிதியுதவி நல்கிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நிதியுதவிகள், காசோலைகள்/கேட்பு வரைவோலைகள் மூலமாகப் பெறப்படுகின்றன. வங்கிகள் மூலமாகவும், கணினி வழியாகவும் (on-line) இந்த நிதியுதவி நல்கிட உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, வணிக வங்கிகள் மூலமாகவும் மற்றும் கணினி வழியாக (on-line) செலுத்த தமிழ்நாடு அரசின் இணையதள முகவரியான "www.tn.gov.in" மூலமாகவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதியுதவி அனுப்ப தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வங்கி மூலம் நிதியுதவி அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள், பின்வரும் வணிக வங்கிகளின் எந்த ஒரு கிளையிலும் தொகையைச் செலுத்தலாம். இவ்வாறு அளிக்கப்படும் தொகைக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது.

1. **பாரத ஸ்டேட் வங்கி**
2. **இந்தியன் வங்கி**
3. **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
4. **கனரா வங்கி**
5. **சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா**
6. **யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா**
7. **சிண்டிகேட் வங்கி**
8. **பாங்க் ஆஃப் இந்தியா**
9. **பஞ்சாப் நேஷனல் வங்கி**
10. **பாங்க் ஆஃப் பரோடா**
11. **வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழக வங்கி (HDFC Bank)**
12. **இந்திய தொழில் கடனுதவி முதலீட்டுக் கழக வங்கி (ICICI Bank)**

இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அனைத்து வங்கிகளும், நீங்கள் வழங்கும் தொகை, முதலமைச்சர் பொது நிவாரண நிதியைச் சென்றடைவதை உறுதி செய்யும்.

கணினி வழியாக (on-line) நிதியுதவி அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள், தமிழ்நாடு அரசின் "www.tn.gov.in" என்ற இணையதள முகவரியின் முதன்மைப் பக்கத்திற்குச் சென்று, அதில் கண்டுள்ள அறிவுரைகளின்படி தொகையை அளிக்கலாம். இதற்கான ஒப்புகை, நிதியுதவி அளிப்பவரின் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இத்தகைய நன்கொடையாளர்களுக்கு அலுவல் முறையிலான ரசீதும் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் அனைத்துத் தொகைகளுக்கும் வருமான வரிச் சட்டத்தின் 80(G) பிரிவின் கீழ் 100 சதவிகித வரிவிலக்கு அளிக்கப்படும்.

**ஜெ ஜெயலலிதா**
**தமிழக முதலமைச்சர்**

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட ரூ.4,800 கோடி நிதிவழங்க வேண்டும்

## மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் கோரிக்கை



26.12.2004 அன்று, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன்னெப்போதும் இல்லாத அளவிலான பேரிடர் ஒன்று திடீரெனப் பெரும் சீற்றத்தோடு தாக்கியது.

இதனால் கடற்கரைப் பகுதிகள் நெடுகிலும் அமைந்திருந்த கிராமங்களும், நகரங்களும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாகப் பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இலட்சோபலட்ச மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். இந்தப் பேரிடர் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளின் பொருளாதாரத்தையே முற்றிலுமாக நசித்துவிட்டது. மீனவர்களின் வாழ்க்கையே சீரழிந்து விட்டது. அவர்கள் வீடுகள், உடைமைகள், பிழைப்பு ஆதாரங்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர்.

26.12.2004 அன்று ஏற்பட்ட பேரழிவு பற்றிய விவரங்களை அறிந்த உடனேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாநில அரசின் ஒட்டு மொத்த அரசு இயந்திரத்தையும் முடுக்கி விட்டு தேடுதல் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாநில அரசுக்கு உதவியாக இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படை ஆகியனவும் ஈடுபடுத்தப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பாதிக்கப்பட்ட பகுதிகளை 26.12.2004 அன்றே ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார். மீண்டும், 27.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.12.2004 அன்று பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடனடியாக ரூ.5,000 அளவுக்கு நிவாரணத் தொகுப்புதவித் திட்டத்தை அறிவித்தார். மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்று வாழ்க்கை நடத்த இயலும் வகையில் ரூ.65 கோடி செலவில் உடனடி நிவாரணத் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதுதவிர இந்தப் பேரழிவால் இறந்துவிட்ட ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் ரூ. 1 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கிடும் முதற் கட்டப் பணியை 30.12.2004 அன்று தானே நேரடியாகத் தொடங்கி வைத்தார். சுனாமி அலைகள் தங்கள் வீடுகளுக்குள் புகவில்லை என்றாலும், அப்பேரலையினால் தங்களது பிழைப்பாதாரத்தை இழந்து விட்ட மீனவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு அத்தகைய மீனவர்களுக்கு நிவாரண தொகுப்பு உதவித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பமும் சுமார் ரூ.3,000 நிதியுதவிபெறும். இத்துயரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவிநியோக முறையிலிருந்து இன்றியமையாப் பொருள்கள் வாங்க இயலும் பொருட்டு இப்பேரழிவால் தங்கள் குடும்ப அட்டைகளை இழந்துவிட்ட அனைவருக்கும், உடனடியாகக் குடும்ப அட்டைகளை வழங்கிட

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றும் 2005 ஜனவரி மாதத்திலிருந்து பொது விநியோக முறையிலிருந்து 10 லிட்டர் மண்ணெண்ணெயைக் கூடுதலாகவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இப்பேரழிவினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்கு விரைவில் திரும்ப இயலும் வகையில் அவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், இரு ஜோடி சீருடைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு வகை செய்யும் தனித் தொகுப்பு உதவித் திட்டம் ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கள் கல்விச் சான்றிதழை இழந்தவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் நகலை இலவசமாக வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட பேரழிவால், பெற்றோர்களையும் உற்றார்களையும் இழந்து அநாதைகளாகிவிட்ட சிறார்களுக்கென தனி தொகுப்புதவித் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததுடன், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அத்தகைய சிறார்களுக்காகக் காப்பகங்கள் ஏற்படுத்தவும் ஆணையிட்டுள்ளார்கள்.

வளர் இளம்பெண்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவர்களை மாநில அரசு நடத்தும் கருணை இல்லங்களில் சேர்ப்பதற்கும் கன்னியாகுமரி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக இரண்டு கருணை இல்லங்களைத் திறப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் சிறப்புத் தொகுப்புதவித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார். இவ்வளர் இளம்பெண்களுக்கு இந்த இல்லங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். வீடிழந்த ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் வளர் இளம்பெண்களின் எதிர்காலப் பாதுகாப்புக்காக அவர்கள் ஒவ்வொருவரின் பெயரில் மாநில அரசு ரூ. 5 இலட்சம் வைப்பீடு செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். சுனாமிப் பேரழிவினால் அநாதைகளாகிவிட்ட அனைவரும் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் அரசின் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் உடனடியாகக் கொண்டு வரப்படுவர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அண்மையில் பேரழிவினால் பெரும் எண்ணிக்கையிலானோர் காயமுற்றுள்ளதால் தங்கள் கண்களையும், கை கால்களையும், இழந்து விட்டவர்களுக்கு ரூ.25,000–ம் மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேலாக அகநோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ரூ.5,000–ம் அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.262.36 கோடி மொத்த செலவாகக் கூடிய உடனடி நிவாரணத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்க இயலும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு, தமிழ்நாட்டுக்காக உடனடியாக ரூ.250 கோடியை வழங்கியுள்ளது. சுனாமியால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காகத் திரு. ஏ.கே. ஸ்ரீ வத்சவா தலைமையிலான மத்தியக் குழு ஒன்று 4.1.2005 முதல் 6.1.2005 வரை மாநிலத்தைப் பார்வையிடும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

26.12.2004 அன்று தாக்கிய சுனாமிப் பேரலையால் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட பெரும் சேதம் பற்றிய துரித மதிப்பீடு ஒன்றை மாநில அரசு மேற்கொண்டது. இம்மதிப்பீட்டின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 3.1.2005 அன்று நடைபெற்ற விரிவான ஆய்வுக் கூட்டத்தில் அறிக்கை ஒன்றை முடிவு செய்தார். பாதிக்கப்பட்ட இலட்சக்கணக் கான குடும்பங்கள், ஓரளவுக்குத் தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இயலும் வகையில் இந்த அறிக்கையில் ரூ.4,800 கோடி உதவியும், 54,000 டன் உணவுத் தானியமும் அளிக்குமாறு கோரப்பட்டது. எந்தெந்த தலைப்புகளின் கீழ் உதவித்தொகை கோரப்பட்டது. அறிக்கையில் எவ்வளவு தொகை கோரப்பட்டது என்பன போன்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேடுதல் மீட்பு மற்றும் நிவாரணம் | ரூ.204.95 கோடி |
| தற்காலிக நிவாரணத் தொகுப்புதவி | ரூ.90 கோடி |
| பொதுச்சுகாதாரம் – கொள்ளை நோய்களைத் தடுத்தலும், காயமுற்றவர்களுக்குச் சிகிச்சையளித்தலும் | ரூ.71.45 கோடி |
| வாழ்வாதார இழப்பை ஈடு செய்யும் பிழைப்பு தொகுப்புதவித் திட்டம் | ரூ.261.36 கோடி |
| தற்காலிக வீட்டு வசதி | ரூ.250 கோடி |
| நிரந்தர வீட்டு வசதி | ரூ.750 கோடி |
| சமூக சொத்துகள் புனரமைப்பு | ரூ.709.22 கோடி |
| மீனவர்களுக்கு மறுவாழ்வு அளித்தலும் மீளவும் வாழ்வாதாரங்களுக்கு வகை செய்தலும் | ரூ.1054 கோடி |

ஏனையோருக்கு மீளவும் வாழ்வாதாரங்களுக்கு வகை செய்தல் ரூ.130.62கோடி

கடற்கரையோரப் பகுதியைப் பாதுகாத்தல் கடல் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கான திட்டம் ரூ.449 கோடி

கடற்கரையோரம் நெடுகிலும் உயிரின வாழ்க்கைச் சூழலை மீளவும் உருவாக்குதலும் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தலும் ரூ.200 கோடி

அடிப்படைக் கட்டமைப்பு புனரமைத்தல் பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் ரூ.628.88 கோடி

இப்பேரழிவினால் வாழ்வாதாரங்களையும் தங்கள் வீடுகளையும் இழந்து விட்டவர்களுக்கு உடனடியாக மறுவாழ்வு அளிப்பது தொடர்பாகவே, கோரிக்கை மனுவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களைத் தேடுதல், மீட்டு வருதல், பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுதல், ஆகியவை தொடர்பாக எந்த முயற்சியையும் தமிழ்நாடு அரசு விட்டு வைக்கவில்லை. உணவு மற்றும் புகலிடம் அளித்தல், மருத்துவ வசதிகள் அளித்தல், தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்குப் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்தல், குடிநீர் வழங்கல் முதலியவற்றுடன் உடனடியாக நிவாரண முகாம்களை அமைப்பதும் இதில் அடங்கும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தேவைப் படக்கூடிய நிதி ஆகியவை பற்றி இந்தக் கோரிக்கை மனுவில் விவரிக்கப்பட்டுள்ளது.

இப்பேரழிவு காரணமாக இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்துவிட்டவர்கள் அனைவருக்கும் முறையாக மறுவாழ்வு அளிப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் குறித்துத் திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்கு சிறிது காலம் பிடிக்கும். வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி மீளவும் தங்களுடைய வாழ்க்கைத் தொழிலை தொடங்குகிற வரையில், அவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு ஏதுவாக அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வாழ்வாதார தொகுப்பு உதவி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தங்களுடைய வாழ்வாதாரத்தை முற்றிலுமாக இழந்துவிட்டவர்களுக்கு ரொக்க நிதியுதவி வழங்க வகை செய்யும்.

சுனாமி பேரலைகள், காரை வீடுகளைக் கூட அடியோடு தரைமட்டமாக்கியுள்ளன. குடிசைகளோ இருந்த இடம் தெரியாமல் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. மறுவாழ்வு திட்டத்தில், வீட்டு வசதி ஒரு முக்கியமான கூறாகும். தற்காலிக நிவாரணத் திட்டத்தில் முதல் கட்டமாக உடனடி உதவிக்காகச் சிறிது தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. வீடு இழந்தவர்களுக்கு உடனடியாகத் தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க, தற்காலிகத் தங்குமிட வசதிகளை விரைவிலேயே உருவாக்கத் தற்போது திட்டமிடப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முறையாகத் திட்டமிட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகள் உருவாக்கப்படும். இடம் பெயர்ந்து சென்றவர்கள், இப்புதிய வீடுகளில், சுனாமி பேரலை பற்றிய அச்சமின்றி, கண்ணியத்துடன் வாழ இயலும்.

ஆழிப்பேரலைகள், கடற்கரை நெடுகிலும் அமைந்திருந்த சமுதாயச் சொத்துக்களைச் சேதப்படுத்தி விட்டன. கடற்கரையோரப் பகுதிகளில் சாலைகள், சத்துணவு மையங்கள், சமுதாயக் கூடங்கள் முதலியவை போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்கு வதற்கான முக்கிய திட்டமொன்று தொடங்கப்படும்.

இத்திட்டம், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், தங்களுடைய வாழ்க்கையை மீண்டும் தொடங்கு வதற்கான உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும்.

தற்போது நம் முன் உள்ள முக்கியமான சவால், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீண்டும் வாழ்வா தாரங்களை அளிப்பதுதான். சேதமோ மிக அதிகம். மீனவர், தங்களது வள்ளங்கள், கட்டுமரங்கள், எப்.ஆர்.பி. படகுகள், இயந்திரப் படகுகள் முதலியவற்றை இழந்துள்ளனர். அவர்கள் விலை உயர்ந்த வலைகள் உட்பட சாதாரண வலைகளையும் இழந்துள்ளனர். மணலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மற்றும் வலைகளையும் கூட அழிக்கும் அளவுக்கு ஆழிப்பேரலையின் சீற்றம் இருந்தது. இப்பேரலை கடற்கரையோரப் பகுதிகளின் பொருளாதாரத்தையே முற்றிலுமாகச் சீரழித்து விட்டது. மீனவர்கள் மீண்டும் தங்களுடைய பழைய வாழ்க்கைத் தொழிலைத் தொடர இயலும் வகையில், பெரும் திட்டமொன்று தொடங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், மீனவர்களுக்கு மறு வாழ்வு அளித்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் புனரமைப்பதற்கும் வகை செய்கிறது. அதேபோன்று, மீனவர் அல்லாத ஏனையோரின் வாழ்வாதாரங்களைப் புனரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

26.12.2004 ஆம் நாளன்று நிகழ்ந்ததைப் போன்று மீண்டும் கடலோரப் பகுதிகளில் பேரழிவுகள் ஏற்படாமல் உறுதி செய்யும் பொருட்டு, கடல் சுவர்கள், கடலரிப்புத் தடுப்பு அரண் கடற்கரைப் பாதுகாப்பு ஆகியவை உள்ளிட்ட பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை சுனாமி பேரலைகள், நமக்கு உணர்த்தியுள்ளன. மோசமான வடிகால் வசதி மற்றும்

வெள்ளப்பெருக்கு ஆகிய பிரச்சினைகளிலிருந்து நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பாதுகாப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், சுனாமி பேரலைகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையாக, கடற்கரையோரம், காப்புப் பகுதிகளை (Shelter belts) ஏற்படுத்தவும், சதுப்பு நிலக் காடுகள் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுனாமி பேரலை தாக்கியதால் முற்றிலுமாகச் சிதைந்துபோய்விட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் புனரமைப்பதும் கோரிக்கை மனுவில் இடம் பெற்றுள்ளது. இதில், சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், மின் வழங்கல் ஏற்பாட்டு முறைகள் ஆகியவற்றைப் புதுப்பித்தலும் அடங்கும்.

கடற்கரையோரப் பொருளாதாரத்திற்குக் குறிப்பாக, மீனவர்களின் பொருளாதாரத்திற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட சேதத்தினால் எழுந்துள்ள சூழ்நிலை குறித்தும் இந்தக் கோரிக்கை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வணிக வங்கிகளிடமிருந்தும் கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் மீனவர்கள் வாங்கிய கடன்களில் எஞ்சியுள்ள நிலுவைத் தொகைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்வதற்கான கோரிக்கையும் இந்தக் கோரிக்கை மனுவில் இடம் பெற்றிருக்கிறது. மீன்பிடி வலைகள், மோட்டார்கள், இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் கண்ணாடி இழைப் படகுகளுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான சுங்கத் தீர்வையையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமெனவும் அவற்றை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான ஆயத்தீர்வைகளையும் தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் அரசிடம் கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கை மனுவை, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் மத்திய உள்துறை அமைச்சருக்கும் அனுப்பியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட இந்த சீற்றத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்துப் பேரிடர் நிவாரண நிதியின் (CRF) வழக்கமான விதிமுறைகளை இதற்குப் பின்பற்ற முடியாது என்றும் இதற்கென சிறப்பு தொகுப்புதவித் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஏற்கெனவே 27-12-2004ஆம் நாளான்று மத்திய உள்துறை அமைச்சருடன் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்தபோது இது குறித்துக் குறிப்பிட்டதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தன்னுடைய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இது குறித்து கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர், மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் உறுதி யளித்திருந்தார். ❖




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 19-1-2005 அன்று, தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் யேல் பல்கலைக்கழகம் இல்லினாய்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் சிங்கப்பூர் நான் யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சென்னையில் அமைந்துள்ள கிரேட் லேக்ஸ் மேலாண்மைப் பயிலகத்தின் (GREAT LAKES INSTITUTE OF MANAGEMENT) புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், **20.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருகாட்டுப்பள்ளி, கிளாமங்களம், பாப்பாநாடு, திருமங்கலக்கோட்டை, கீழையூர் மற்றும் தஞ்சாவூர் சண்முகா நகர் ஆகிய இடங்களில் 2 கோடியே 73 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பல்வேறு புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரத்தநாடு சிறப்பு ஊராட்சியில் 45 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வணிக வளாகம் ஒன்றும், 9 இலட்சம் ரூபாய் செலவில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருக்காட்டுப்பள்ளி சிறப்பு ஊராட்சியில் 50–ஆம் எண் சாலை, மார்க்கெட், குடமுருட்டி கரை, மார்க்கெட் சந்து மற்றும் பழமானேரி ஆகிய ஐந்து இடங்களில் 37 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் ஐந்து வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒரத்தநாடு வட்டம் கிளாமங்களத்தில் 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் தங்கும் விடுதிக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. மேலும், 59 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பாப்பாநாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் கட்டடமும் 30 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் திருமங்கலக்கோட்டை கீழையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் கட்டடமும் கட்டப்பட்டுள்ளன. இதுவன்றி, தஞ்சாவூர் சண்முகா நகரில் 60 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கூட்டுறவு திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மொத்தம் 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மேற்படி கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர்.வைத்திலிங்கம், தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள்



26.12.2004 அன்று, சுனாமி என்னும் ஆழிப் பேரலை ஏற்படுத்திய பாதிப்புகளைக் களைய, மின்னல் வேக நடவடிக்கையில் தமிழக அரசு ஈடுபட்டது. நிவாரண உதவிகள், மீட்புப் பணிகள், சுகாதாரப் பணிகள், உணவு வழங்கல் என அத்தனை உதவிகளையும் உடனடியாகச் செய்து முடிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஆட்சித் தலைவர்களும் களத்தில் இறங்கினார்கள்.

வெகுநேர்த்தியாகத் திட்டமிட்டு நடவடிக்கையை மேற்கொண்டனர். பெரும் பாதிப்புக்குள்ளான நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீரமைப்புப் பணிகள் விரைந்து நடந்தன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உதவி**

நாகப்பட்டினம் மாவட்டத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 26, 27 & 30.12.2004 ஆகிய நாட்களில், வருகை புரிந்து மரணம் அடைந்த குடும்பங்களுக்கு கீழ்க்கண்ட நிவாரண உதவியை வழங்கினார்கள்.

1) உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாயும், வீடுகட்ட, பாத்திரங்கள் மற்றும் இதரச் செலவினங்களுக்கு ரூ.4,000/– தலா ஒரு வேட்டி, சேலை, 60 கிலோ அரிசி மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்கியுள்ளார்கள்.



2) முதல் கட்டமாக நம்பியார் நகரில் 49 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரிடமும் நேரில் பேசி குறைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வருகையின் போது தலைமைச் செயலர், நிதி துறைச் செயலர், வருவாய் நிர்வாக ஆணையர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் ஆகியோர் உடன் இருந்தனர்.

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் 11 கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பு**

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கடல் கொந்தளிப்பால் ஏற்பட்ட பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுவீச்சில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள 11 கண்காணிப்புக் குழுக்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் 77 பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு ஒவ்வொரு குழுவினரும் சென்று மேற்கொண்ட நிவாரணப் பணிகள் குறித்து ஒவ்வொரு குழுவினருடன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த 77 கிராமங்களில் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் 82 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தக்க சமயத்தில் உணவு வழங்குதல், மருத்துவ வசதி செய்து கொடுத்தல் மற்றும் அவர்களின் தேவை அறிந்து அவர்களுக்கு உடனுக்குடன் தேவைகள் பூர்த்தி செய்யும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒவ்வொரு குழுவினரையும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

குழுக்களிடம் ஆலோசனை நடத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு கூடுதலாக ஜே.சி.பி. பொக்லைன் எந்திரங்கள், டிப்பர்கள், புல்டோசர்கள் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு தொடர்புடைய துறைகளுக்கு உத்தரவிட்டார்.

நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வர்களுக்கு சுகாதார வசதிகள் எந்த நேரமும் கிடைக்கின்ற வகையில் டாக்டர்கள் இருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார். பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், மின் வசதி கிடைப்பதற்கு கண்காணிப்புக் குழுவினர் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பாதிக்கப்பட்ட கிராமங்களில் வீடுகளை இழந்தவர்களை அவர்களுடைய விருப்பத்தின் பேரில் தக்க இடத்தில் இடங்களைத் தேர்வு செய்து தற்காலிகமாகத் தங்கவைக்க இருப்பிடங்களை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடங்களை அமைத்து அவர்களுக்கு குடிநீர், கழிப்பிட வசதி, சுகாதார வசதி மற்றும் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டும். இதில் தனிக் கவனம் இருக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அனைத்து நிவாரணங்களும் பாதிக்கப் பட்ட மக்களுக்குச் சென்றடைய வேண்டும். இதை ஒவ்வொரு குழுவினரும் உறுதி செய்ய வேண்டும். நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் குழுவினர் நடவடிக் கைகள் எடுக்க விரைந்து செயல்பட வேண்டும். நாகை மாவட்டம் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி உள்ளது. நிவாரணப் பணியில் ஈடுபடுகின்ற அனைத்துத் துறையினரும் சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக செய்தி விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் 7. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் அவர்கள் 8. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. சிந்து ரவிச்சந்திரன் அவர்கள் 9. மருத்துவப் பணிகள் கழகத் தலைவர் திரு. பரஞ்ஜோதி அவர்கள் 10. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. எம். ரவிச்சந்திரன் அவர்கள் 11. திருமதி. கோகுல இந்திரா, எம்.பி., அவர்கள் ஆகியோர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டது. திரு. டி.டி.வி. தினகரன், எம்.பி., திரு. ஆர். காமராஜ், எம்.பி., மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.



அமைக்கப்பட்ட குழுவில் இடம் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திருமதி. பதர்சயீத், வக்ஃபு வாரியத் தலைவர் 2. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், எம்.பி., அவர்கள் 3. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம. வேலுச்சாமி அவர்கள், தாட்கோ, தலைவர், திருமதி. வி. சரோஜா 4. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. ஜெயராமன், 5. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் 6. மாண்புமிகு

**10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்**

நாகை மாவட்டம் பெரும் பாதிப்படைந்ததைக் கருத்தில் கொண்டு எல்லாப் பகுதிகளிலும் விரைந்த பணிகள் நடைபெற ஏதுவாக தமிழக அரசு 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உடனடியாக நியமனம் செய்தது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றி அனுபவம் பெற்ற இவர்கள் நாகை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒருவர் வீதம் சென்று நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

**உதவி மையங்கள்**

தங்களின் இருப்பிடங்களை இழந்த மக்கள் தங்குவதற்காக 72 உதவி மையங்கள் அமைக்கப் பட்டன.

### மத்தியக் குழு ஆய்வு

பாதிக்கப்பட்ட ஆரிய நாட்டுத் தெரு, கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, வேளாங்கண்ணி உள்ளிட்ட இடங்களில் 6 பேர் கொண்ட மத்தியக் குழு ஸ்ரீவஸ்தவா தலைமையில் ஆய்வு செய்தனர்.

### பாதிப்புகள் பற்றிய கணக்கெடுப்பு

26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 73 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேற்படி 73 குடியிருப்புகளில் அக்கரைபேட்டை, கீச்சாபாளையம், வேளாங்கண்ணி, நாகூர் மற்றும் தரங்கம்பாடி ஆகியவை மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டவையாகும். 11.1.2005 வரை 6,065 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அதிகபட்சமாக நாகப்பட்டினம் வட்டத்தில் 2,141 நபர்கள் இறந்துள்ளனர். வேதாரண்யத்தில் 83 நபர்கள் இறந்துள்ளனர். இவைகளில் ஆண்களைவிட பெண்களே அதிகம் இறந்துள்ளார்கள். குழந்தைகள் மட்டுமே 1,500 பேர் இறந்துள்ளனர். பெரும்பாலான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு விட்டது. மீதம் காணாமல் போன நபர்களின் உடல்கள் கண்டுபிடிக்கும் பணி மேலும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஜே.சி.பி. உட்பட 80க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிவாரணப்பணியை கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் வட்டத்திற்கு ஒரு அதிகாரியும், வட்டாட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், வருவாய் ஆய்வாளர் நிலையில் மற்றும் கிராம நிருவாக அலுவலர் நிலையில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மொத்தம் 75 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தரங்கம்பாடி வட்டத்தில் 9 மையங்களில் 11,800 நபர்களுக்கும், சீர்காழி வட்டத்தில் 33 மையங்களில் 30,505 நபர்களுக்கும், நாகப்பட்டினம் வட்டத்தில் 27 மையங்களில் 29,510 நபர்களுக்கும், வேதாரண்யம் வட்டத்தில் 13 மையங்களில் 9,490 நபர்களுக்குமாக மொத்தம் 82 மையங்களில் 81,305 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 19 மையங்களில் உள்ளவர்களுக்கு நிவாரண உதவி முகாம்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 மையங்களில் 4,000 நபர்களுக்கு நிவாரண உதவி முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 366 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், அக்கரைப்பேட்டை, வேளாங்கண்ணி, நாகூர், கீச்சாங்குப்பம், தரங்கம்பாடி, திருமுல்லைவாசல் மற்றும் பாலையார் ஆகிய இடங்களில் சடலங்களை மீட்பதிலும், அவற்றை அப்புறப்படுத்திடவும், நிவாரண உதவிப் பொருட்கள் விநியோகம் செய்யவும் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பணியமர்த்தப்பட்டனர். மேலும், சடலங்களை மீட்கும் பணியில் காவல்துறை, வருவாய்த் துறை, தீயணைப்புத் துறை ஆகியோர்கள் முழு வீச்சில் செயல்பட்டனர். உயர் மட்ட அலுவலர்கள் அல்லாமல் 390 அலுவலர்கள் மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### ஊனமுற்றோர்க்கு உதவிகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்டறியப் பட்ட ஊனமுற்றோர்களுக்கு 112 சைக்கிள்கள், 9 சக்கர நாற்காலிகள், 245 ஊன்றுகோல்கள், 400 காதொலிக் கருவிகள், 400 சோலார் பேட்டரிகள், 370 பேர்களுக்கு ஆடைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

### மருத்துவப் பணி

பாதிப்படைந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அரசு மருத்துவத் துறையைச் சேர்ந்த 235 மருத்துவர்கள், 115 செவிலியர்கள், 66 மருத்துவப் பணியாளர்கள் மற்றும் 206 பிற பணியாளர்களும், அரசு சாரா மருத்துவர்கள் 173 பேர், செவிலியர்கள் 52 பேர், மருத்துவப் பணியாளர்கள் 55 பேர், பிற பணியாளர்கள் 225 பேர் ஆகியோர் உட்பட 1,127 பேர் மருத்துவ சிகிச்சைப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.

### மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள்

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்குவதற்கு 13.88 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 12.1.2005 வரை 52.80 இலட்சம் ரூபாய் மீனவளத்துறை இணை இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது. உதவித்தொகை வழங்கும் பணியில் குழு மேலாளர்களுக்கு உதவி புரிய 8 உதவி இயக்குநர்கள் பணிக்கப்பட்டு, மீதமுள்ள தொகையும் சில நாட்களில் வழங்கப்பட்டது.

### தற்காலிகக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்கியுள்ளது. தற்சமயம் மாவட்ட நிருவாகத் திடமிருந்து இணைப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்பட

மாட்டாது. மொத்தமுள்ள வீடுகளுக்கும் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. தெருவிளக்கு களைப் பொறுத்தவரை மொத்தமுள்ள 3,560 தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### இலவச பேருந்துப் பயண அட்டை

நாகப்பட்டினத்திலுள்ள 45 கிராமங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்குச் சென்று வர இலவச பேருந்துப் பயண அட்டைகள் அரசு போக்குவரத்துக் கழகத்தால் வழங்கப்பட்டது. 4,126 இலவசப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் தத்தம் வழித்தடங்களில் தடையின்றி இயக்கப் படுகின்றன.

### நியாய விலைக் கடைகள் திறப்பு

12.1.2005 அன்று 73 பகுதி/முழு நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை பகுதி/முழுநேர நியாய விலைக்கடைகள் இல்லாத பாதிக்கப்பட்ட பகுதிகளில் பகுதிநேர கடைகள் திறக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது. 13,917 குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.

### கடலோரங்களில் காடு வளர்ப்புத் திட்டம்

வனப் பாதுகாவலர் உத்தரவின் அடிப்படையில் கீச்சாங்குப்பம் மற்றும் செருதூர் கிராமங்களில் சவுக்கு மற்றும் தென்னை நாற்றுக்கள் வனத்துறையினரால் நடவு செய்யப்படுகிறது. அனைத்துக் கடலோர வாழ் மக்களையும் காக்கும் பொருட்டு காடு வளர்ப்புத் திட்டத்தைச் செயலாக்க வனத்துறை திட்டமிட்டுள்ளது.

### கால்நடைகளுக்குச் சிகிச்சை

கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த 49,854 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 35 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கால்நடைத்துறை இயக்குநரின் அறிவுறுத்தலின்படி உடனடியாக மேலும் 10 முகாம்கள் திறக்கப்பட உள்ளன. 58 டன் கால்நடைத் தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு கால்நடைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பஞ்சாப் குழுவினரின் நிவாரண உதவிகள்

300 பேர்களைக் கொண்ட பஞ்சாப் குழு ஒன்று உணவு தானியங்கள், மருந்துகள், நிவாரணப் பொருட்களுடன் 28 ரயில் பெட்டிகளில் நாகப்பட்டினம் வந்தடைந்தது. இந்தக் குழு நாகப்பட்டினத்திலுள்ள (சில பகுதிகளைத் தெரிந் தெடுத்துள்ளது.) பாதிக்கப்பட்டமக்களுக்கு உணவு வழங்க மொத்த நிவாரணப் பொருட்களும் தமிழ்நாடு உணவுக் கிடங்கில் மற்ற பிற நிவாரண மையங்களுக்குப் பிரித்து அனுப்பும் பொருட்டு சேமிக்கப்பட்டுள்ளது.

### வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

சுனாமியால் உயிரிழந்தோர் குடும்பங்களைச் சேர்ந்த அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கும் குறைந்தபட்ச தொகுப்பு நிவாரண உதவிகளை வழங்கிட குழு மேலாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

18.1.2005 வரை மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் வருமாறு:

நிவாரணத் தொகை தலா ரூ. 1 இலட்சம் வீதம் 3,868 நபர்களுக்கு ரூ. 38.68 கோடி வழங்கப்பட்டது. பழுதுபட்ட 37,824 வீடுகளுக்கான நிவாரணமாக ரூ.18.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. வருவாய் இழந்தோருக்கான தொகுப்பு நிவாரணம் 32,960 பேர்களுக்கு ரூ.9.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. ரூ.3.77 கோடியில் மீன்பிடி வலைகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆக ரூ. 70.62 கோடி நிவாரணமாக அரசு வழங்கியுள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 176, நடைபெற்றுக் கொண்டிருக்கும் பள்ளிகள் 173, முகாம்கள் 3, தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 1,023. இவை அனைத்தும் செயல்படுகின்றன.

### சுகாதாரப் பணிகள்

இதுபோன்ற பேரழிவு ஏற்படும் போது மக்களுக்கு காலரா, டைபாய்டு போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணியை தமிழக அரசு முடுக்கி விட்டது.

★ 30 இலட்சம் குளோரின் மாத்திரைகள், பிளீச்சிங் பவுடர் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டது.

★ உணவகங்களில் விற்பனை செய்யப்படும் தின்பண்டங்கள் சோதனை செய்யப்பட்டது.

★ மீட்கப்பட்ட சடலங்களைப் புதைக்கும்போது பிளீச்சிங் மற்றும் சுண்ணாம்புப் பவுடர் தூவப்பட்டது. பின்னர் மண் போட்டு மூடப்பட்டது.

★ தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சடலங்களை அப்புறப்படுத்தும் பணிகளைச் செய்தனர்.

### மருத்துவக் குழுக்கள் – ஆம்புலன்சுகள்

நாகை மாவட்டத்திற்கு மருத்துவப் பணிகளை மேற்கொள்ள அரசு மருத்துவத்துறை உடனடியாக மருத்துவக் குழுக்களை நியமித்தது.

★ 60 மருத்துவர்கள் கொண்ட சிறப்பு மருத்துவக் குழு மற்றும்

★ 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவப் பணிகளைத் தொடங்கிச் செய்தது.

### சீருடைகள் – புத்தகங்கள்

பாதிக்கப்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளையும், பள்ளிப் பாடப்புத்தகங்களையும் மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் வழங்கினார். வேளாங்கண்ணியை அடுத்த செருதூரில் நடைபெற்று வந்த மறுசீரமைப்புப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

நாகை மாவட்டத்தில் உள்ள 25,640 மாணவ, மாணவியர்களுக்கு பாடநூல்களும், சீருடைகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி வழங்கப்படுவதாக மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

### நிவாரண உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நிவாரண உதவிகள் 2.1.2005 மற்றும் 3.1.2005 அன்று நாகை மாவட்டத்தில் வழங்கப்பட்டன.

2.1.2005 அன்று பாடசாலை தெருவில் 180 குடும்பங்களுக்கு ரூ.7,20,000 மதிப்பிலும், பிரோடு தெருவில் 61 குடும்பங்களுக்கு ரூ.2,44,000 மதிப்பிலும், 3.1.2005 அன்று நாகூர் பட்டினம்பூரில் 759 குடும்பங்களுக்கு ரூ.30,36,000 மதிப்பிலும், சில்லடி தர்காவில் 283 குடும்பங்களுக்கு ரூ.11,32,000 மதிப்பிலும் நிவாரண உதவிகளை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் வழங்கினார். வெள்ளக்கோவில் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 95 பேருக்கு ரூ. 3,80,000 மதிப்பில் பொருட்களும், இறந்து போன 19 பேர் குடும்பத்துக்கு ரூ.6,28,000மும், மேலும் இறந்து போன 7 பேர் குடும்பத்துக்கு ரூ.7 இலட்சமும், மாணிக்கம் பங்கி கிராமத்தில் பாதிக்கப்பட்ட 122 பேருக்கு ரூ.4,08,000மும், இறந்துபோன 11 பேர் குடும்பத்துக்கு ரூ.11 இலட்சமும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன் அவர்களால் வழங்கப் பட்டது.

வேதாரண்யம் வட்டம் அகஸ்தியம்பள்ளி கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை பகுதிகளில் பாதிக்கப்பட்ட 834 நபர்களுக்கு சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.

### மீண்டும் தொழிலைத் தொடங்கிய மீனவர்கள்

நாகை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக அரசு நிவாரண உதவிகளை வழங்கியது. இத்துடன், தற்காலிக இருப்பிடங்களையும் அரசு ஏற்பாடு செய்து தந்தது. மேலும், மன அளவில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளையும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அரசின் உதவிகளையும் அரசு அளித்த ஊக்கத்தையும் பெற்ற மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை மீண்டும் தொடங்க முடிவு செய்தனர்.

9.1.2005 அன்று மதியம் 1 மணியளவில் கோடியக்கரையில் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்களை உற்சாகப்படுத்தி மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பச்சைக்கொடியை காட்டித் தொடங்கி வைத்து உடன் சென்றார். இம் மீனவர் குழுவினர் சுமார் 3 மணி நேரம் மீன்பிடித்து கரைக்கு வந்தனர். பின்னர் அப்போது பிடிக்கப்பட்ட மீன்கள் ஏலம் விடப்பட்டது. ரூ.1,300க்கு ஏலம் கேட்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையை அளித்து மீன்களைப் பெற்று பொது மக்களிடம் வழங்கினார்.

பழுது நீக்கம் செய்யப்பட்ட 3 பைபர் படகுகளில் மீனவர்கள் பால்ராஜ், எல். வீரமணி, செல்வம், வி. சுப்பிரமணியன், ராமசாமி, சக்திவேல், கோபால், நாகராசன் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இராணுவ பிரிகேடியர் மணவாளன் ஆகியோரும் உடன் சென்றனர். வெள்ளோட்டமாக கடலுக்குள் சென்றுவந்தபின் மாவட்ட ஆட்சியர் கூறும் போது, "அரசின் சார்பில் இராணுவ உதவியுடன் 30 மெக்கானிக்குகள் மூலம் 25 பைபர் படகுகள் பழுது நீக்கம் செய்து தரப்படும்" என்றார்.

## தடுப்பு மருந்துகள்

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கையாக மேலும் 6 மாதம் முதல் 5 வயதுக் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இத்துடன் வைட்டமின் 'ஏ' மருந்தும், ஒ.ஆர்.எஸ். சர்க்கரை உப்புக் கரைசலும் போலியோ சொட்டு மருந்தும் வழங்கப்பட்டது.



## தற்காலிகக் குடியிருப்புகள்

செருதூர் கிராமத்தில் 175 குடும்பங்களுக்கு ரூ.1.51 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகளை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் திறந்து வைத்தார். பின்னர் அவர் கூறும் போது, "இக்குடியிருப்பு ஒரு முன்மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல காமேஸ்வரத்தில் இரண்டும், விழுந்தமாவடியில் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. 100 அடி நீளம் 20 அடி அகலம் கொண்ட இக்குடியிருப்பில் சுகாதாரம், மின்சாரம், கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

மேலும், செருதூரில் பள்ளிக் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் விளையாட்டுப் பொருள்களை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

## அமைச்சர் மேற்பார்வை

வேதாரண்யம் ஒன்றியம் புஷ்பவனம், மீனவர் காலனி, தலைஞாயிறு ஒன்றியம் வெள்ளப்பள்ளம், வானவன் மகாதேவி, நாலுவேதபதி ஆகிய ஊர்களில் நிவாரணப் பணிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் பார்வையிட்டு மக்கள் குறைகளை நிவர்த்தி செய்ய உத்தரவிட்டார்.

## பள்ளிக் கட்டடம் புதுப்பிப்பு

ஆற்காட்டுத் துறையில் ரூ.4 இலட்சம் மதிப்பில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் சீரமைப்புப் பணியையும், வானவன் மகாதேவி கடற்கரைப் பகுதி சீரமைப்பு, சாலைகள் சீரமைப்பு, புயல் பாதுகாப்பு இல்லம் அருகே 150 மீனவர்கள் தங்கும் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்புப் பணி ஆகியவற்றை மேற்பார்வை குழு உறுப்பினர் டி.டி.வி. தினகரன், எம்.பி., பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

## மீனவர் குடியிருப்பில் தெரு விளக்குகள்

சீர்காழி, பழையார் பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பார்வையிட்டார். தாண்டவங்குளம், கொட்டகைமேடு, மடவாமேடு, பழையார் பகுதியில் உயிரிழந்த மீனவக் குடும்பங்களுக்கு ரூ.27 இலட்சம் நிதி வழங்கிய அமைச்சர், சின்ன கொட்டகைமேடு தற்காலிகக் குடியிருப்பு அமைக்கும் பணி, ஒலை கொட்டகைமேடு மின் கம்பங்கள் சீரமைப்புப் பணியைப் பார்வையிட்டு விரைவுபடுத்தினார். பின்னர் அங்கு புதிய தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க உத்தரவிட்டார்.

## நாகூர் பகுதியில் 1,000 குடியிருப்புகள்

நாகூர் பகுதியில் வீடிழந்தோருக்காக 1,000 தற்காலிகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. ஐ.ஐ.டி. வளாகத்தில் 550ம், சாமந்தன்பேட்டையில் 320ம், பனங்குடியில் 230ம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதில் பல்வேறு தன்னார்வ நிறுவனங்கள் ரூ.66 இலட்சத்தில் 800 வீடுகளைக் கட்டுகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரூ.16 இலட்சத்தில் 200 வீடுகளைக் கட்டி வருகின்றது.

## தூய்மைப் பணி

15.1.2005 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:–

"நிவாரணப் பணிகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. நாகப்பட்டினம் நகரைத் தூய்மைப்படுத்த 600 துப்புரவுப் பணியாளர்கள், என்.எஸ்.எஸ். மாணவர்கள், சேவை அமைப்பினர் 250 பேர் ஈடுபட்டுள்ளனர். 60 லாரிகள், 20 பொக்லைன் எந்திரங்களுடன் நடக்கும் இப்பணி 3 மாதத்தில் நிறைவடையும். அக்கரைப்பேட்டை, சின்னூர்பேட்டை, நாகை அரசு மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் உப்புநீரைக் குடிநீராக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமி பாதித்த பகுதியில் மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட மாட்டாது. 2,200 தற்காலிகக் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது." என்று அவர் கூறினார்.

## பூம்புகார் மீனவர்களுக்கு ரூ.90 இலட்சம் உதவி

பூம்புகாரில் மீனவர்களின் 760 கட்டுமரங்கள், 70 பைபர் படகுகள், வலைகள் உள்ளிட்டவற்றைச் சீரமைக்க ஒரே நாளில் ரூ.90 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

76 கடலோரக் கிராமங்களில் 400 குடிநீர் மாதிரிகளும், 10க்கும் அதிகமான மீன் வகைகளும் பரிசோதனை செய்யப்பட்டு அவற்றால் தொற்றுநோய் இல்லை எனக் கண்டறியப்பட்டது.

## உப்பளங்கள் ஆய்வு

வேதாரண்யம், அகஸ்தியம்பள்ளி, தவக்காடு மற்றும் கோடியக்கரை பகுதிகளில் உள்ள உப்பளங்களை ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் திருமதி. சாந்த ஷீலா நாயர் பார்வையிட்டார். அதில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தொழிலாளர்கள் வேலை இழப்பு ஆகியவற்றை கணக்கிட்டு அரசுக்குக் கருத்துரு அனுப்ப அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

## சேவை இல்லம்

சுனாமியால் பெற்றோரை இழந்த 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குச் சேவை இல்லம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டதற்கிணங்க நாகை மாவட்டம் சீர்காழியில் ஒரு சேவை இல்லத்தை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

## உலக வங்கி மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கிக் குழு பார்வையிடுதல்

உலக வங்கி மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் குழு உறுப்பினர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தை 17.1.2005 அன்று பார்வையிட்டனர். வங்கிக் குழுவினரை வரவேற்ற நாகை ஆட்சித் தலைவர், அந்த மாவட்டத்தில் சுனாமியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றியும் உயிர்ச் சேதம் பற்றியும் விவரித்துக் கூறினார்.

## பொது மற்றும் தனியார் ஒப்பந்தம்

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு பொது மற்றும் தனியார் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்தர மாற்று இடம் மற்றும் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் மறு சீரமைப்பு குறித்தும் அரசு வெளியிட்ட இரண்டு அரசாணைகளுக்கு தன்னார்வ மற்றும் தொண்டு நிறுவனங்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. சுனாமி தாக்கிய இடங்களுக்கு நிரந்தர வீடு மற்றும் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அடிப்படை வசதியை செய்து தருவதில் மாவட்ட நிருவாகமும் தன்னுடைய பங்கை தொண்டு நிறுவனங்களுடன் செய்து வருகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக தகவல் பலகையில் அரசாணைகளின் நகல்களும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் பற்றிய தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## நாகப்பட்டினம் கடலோரப் பகுதிகள் பற்றிய ஆய்வு

தேசிய கடல் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 10 பேர் அடங்கிய குழு திரு. ஜி.சி. பட்டாச்சார்யா தலைமையில் நாகையில் சுனாமி தாக்குதலுக்குப் பின்பு நிலவும் நிலை குறித்து அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வில் கடலோர நில வடிவம், கடல் பொறியியல், அலைகள் அளவு, கடலோர சுற்றுச்சூழல் பற்றிய ஆராய்ச்சிகளும் அடங்கும்.

## நிவாரண உதவிகள் வழங்கும் பணி

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் அரசு பரந்த மனதுடன் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளது. 11 குழுக்களாக அமைத்து, ஒவ்வொரு குழுவும் ஒரு ஐ.ஏ.எஸ்., அதிகாரி தலைமையிலும் இதுதவிர, 15 உயர் அதிகாரிகளும் இந்த நிவாரண உதவி நடவடிக்கைகளில் செயல்பட்டு வருகின்றனர். ஒரு சில கிராம மக்கள் நிவாரண உதவி கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூட்டமாக



சீரமைக்கப்பட்டு 20.1.2005 முதல் குடிநீர் வழங்கும் பணிகள் முழுமையாகத் தொடங்கப் பட்டது.

66 மையங்களுக்கு 27 நீர் ஆதாரங்களிலிருந்து அதாவது ஆழ்கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 27 நீர் ஆதாரங்களில், 22 ஆதாரங்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் உள்ளது. 5 நீர் ஆதாரங்கள் மட்டுமே ஒரு கிலோ மீட்டருக்குள் அமைந் துள்ளது. இந்த 5 இடங்களில் விழுந்தமாவடி என்ற மீனவப் பகுதியில் அமைந்துள்ள ஆழ்கிணறு ஒன்றில் சுனாமி கடல் தண்ணீர் புகுந்ததால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கடல் நீர் புகுந்ததால் கிணற்றில் உள்ள தண்ணீர் அளவு 21,350 பி.பி.எம். வரை உயர்ந்தது. பின்னர் 3 நாட்களுக்கு இந்த நீர் பம்புகள் மூலம் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு 750 பி.பி.எம்., அளவுக்கு இறங்கியது. தற்போது கிணறு உபயோகப்படுத்தும் நிலையில் உள்ளது.

தற்காப்பு நடவடிக்கையாக ஒரு கிலோ மீட்டருக்குள் உள்ள 4 ஆழ்கிணறுகளும் சரி செய்யப்பட்டு உபயோகப் படுத்தும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள நீர் ஆதாரங்கள் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகாத காரணத்தினால் அவை சரியாகச் செயல்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட நீர் ஆதாரங்களில் குளோரின் சேர்க்கப்பட்டு அவை தொடர் கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளது. குறைந்தபட்சம் 0.5 பி.பி.எம். முதல் 1.00 பி.பி.எம். வரை அளவிலான குளோரின் மீதம் மட்டுமே உள்ளதா என்பதை சரிபார்க்க சுமார் 20 பொறியாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரண்ட வண்ணம் உள்ளனர். இதுகுறித்து தலைமைக் குழுத் தலைவரை அணுகி தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து முறையிட்டால் தகுந்த உதவிப் பொருட்கள் கிடைக்கும் என்றும் பாதிக்கப் பட்டவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

## போலி நிவாரண உரிமை குற்ற நடவடிக்கை

நிவாரணம் பெற போலி ஆவணங்களைக் காட்டி உதவிகள் பெற முயற்சிப்போர் மீது கடுமையான கிரிமினல் குற்ற நடவடிக்கையை மாவட்ட நிருவாகம் எடுக்கும்.

## அனாதை இல்லம்

சிக்கல் பகுதியில் அமைக்கப்பட்ட அனாதை இல்லம், கூடுதலாக 77 குழந்தைகளை சேர்ப்பதற்காகவும், மேலும் பல வசதிகளை அளிப்பதற்காகவும் கடம்பாடி என்ற இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சமூகநலத்துறை கடந்த 17.1.2005 அரசு சேவை விடுதி ஒன்றைத் தொடங்கியுள்ளது. மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சீர்காழி சட்டமன்ற தொகுதி உறுப்பினர், சீர்காழி நகராட்சி தலைவர், ஆணையர் மற்றும் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி ஆகியோர் இந்த அரசு விடுதியைப் பார்வையிட்டனர். மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பாத்திரங்கள், கேஸ் இணைப்பு, துணிகள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்களைத் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து விடுதியில் உள்ள பெண்களுக்கு வழங்கியுள்ளார்.

## குடிநீர் வழங்குதல் மற்றும் சீரமைப்புப் பணிகள்

சுனாமி பாதித்த பகுதிகளில் 66 குடிநீர் வழங்கும் மையங்கள் பாதிப்படைந்து தற்போது அவை

## குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து

நாகை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து 73 சுனாமி தற்காலிக புனர் வாழ்வு மையங்களில் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் அனைத்து கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் 0–36 மாதக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு இரட்டிப்பு அளவாக காலை மற்றும் மாலை என இரண்டு முறை வழங்கப்பட்டது. இதில் தோராயமாக 2,500 குழந்தைகளும் 1,120 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயன் பெறுவர்.

3 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மதியம் 12.30 மணி மற்றும் மாலை 4.00 மணி என இரண்டு முறை உணவு வழங்கப்பட உள்ளது. இதில் சுமாராக 3,000 குழந்தைகள் பயன்பெறுவர். இவர்களுக்கு மையங்களில் முன்பருவக் கல்வியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 17.1.2005 முதல் 21.1.2005 வரை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்கு சென்று கல்லூரி மாணவ, மாணவிகளாலும், திட்டத்தைச் சார்ந்த முதுநிலைப் பயிற்றுநர்கள், குழந்தை பயிற்றுநர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், திட்ட அலுவலர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் உதவி இயக்குநர் (பொறுப்பு) சென்னை ஆகியோர் இணைந்து 4 குழுக்களாக பிரிந்து பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, தாய்ப்பாலின் அவசியம், தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புறச் சுத்தம், தொற்று நோய்கள் வராமல் தடுப்பது எப்படி, என்பன பற்றிய விழிப்புணர்வுக் கல்வியைத் திட்டத்தின் தொடர்பு பிரிவின் மூலமாக வழங்கப்பட்டது. மாலையில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி திரைப்படங்கள் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மையங்கள் செயல்பாட்டிற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் தட்டுகள், டம்ளர் என அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட உள்ளது.

மேலும், நாகை மாவட்டத்தில் கடற்கரை சார்ந்த திட்டப் பணிகளின் பயனை அடையாத 67 கிராமங்களில் புதிய மையங்கள் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இதன் மூலம் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த ஏழு வட்டாரங்களில் 67 கிராமங்கள் திட்டப் பணிகளின் பயன்களை அடைவார்கள்.

## அனைத்து துறை அலுவலர் கூட்டம்

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர் கூட்டம் உள்ளாட்சித்துறை செயலர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உள்ளாட்சித்துறைச் செயலர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள்:

1. மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ரேஷன் கார்டுகள் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கென்று 33,000 ரேஷன் கார்டுகள் வந்துள்ளன. இதுவரை 1,152 கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் ரேஷன் கார்டுகள் விநியோகிக்கும் பணி முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

2. நியாய விலைக்கடைகள் இல்லாத பாதிக்கப்பட்ட கிராமங்களில் உடனடியாகப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படவேண்டும் என மாவட்ட வழங்கல் அலுவலருக்கு உத்தரவிட்டார்.

3. பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டது. இதில் 4,400 பேருக்கு புத்தகங்களும், நோட்டு புத்தகங்கள், 1,45,000 குழந்தைகளுக்கும் சீருடைகள், 29,853 மாணவர்களுக்கும் 29,853 மாணவிகளுக்கு சீருடைகளும் பெறப்பட்டு வழங்கப்பட்டு விட்டது.

4. பாதிக்கப்பட்ட கிராமங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் மின்கம்பங்கள் மின்மாற்றிகள் மாற்றப்பட்டு மின் சப்ளை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் தெரு விளக்குகள் அனைத்தும் 100 சதம் எரியும் வகையில் மின்வாரியம் உறுதி செய்யவேண்டும் என கேட்டுக் கொண்டார். தெரு விளக்குகள் 3,560, OHT – 28, மின்மாற்றிகள் – 180, மின்கம்பங்கள் – 1856 ஆகியவை சரிசெய்யப் பட்டுள்ளன.

5. பாதிக்கப்பட்ட கிராமங்களில் போக்குவரத்துத்துறை பேருந்து இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவும், மாவட்டத்தில் உள்ள மொத்தப் பள்ளிகள் 176 இதில் 157 பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பள்ளிகளில் நிவாரண முகாம்கள் உள்ளதால் 16 பள்ளிகளில் திறக்க முடியவில்லை. மேலும் சேதமான 3 பள்ளிகளும் திறக்க முடியவில்லை. மாணவ மாணவிகள் எவ்விதப் பிரச்சினையுமின்றி பள்ளிக்குச் செல்லும் வகையில் போக்குவரத்துத் துறை உறுதி செய்யவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

6. நாகை மற்றும் நாகூரில் நகராட்சி துப்புறவுப் பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் கொண்டு துப்புறவு முகாம்கள் தொடங்க வேண்டும் எனவும்,

7. நாகப்பட்டினத்தில் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு குப்பைகளை அகற்றுதல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் முனைப்புடன் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றும்,

8. வேளாண்மைப் பொறியியல் துறையினர் கடல் நீர் புகுந்த விவசாய நிலங்கள் மற்றும் கிணறுகளில் உப்பு நீர் அகற்றும் பணிகளை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

9. திருமுல்லைவாசல், கல்லார் ஆகிய பகுதிகளில் டிராக்டர் கொண்டு உப்பு நீர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

10. பொதுப் பணித் துறையினர் மாவட்டத்தில் 68 அரசுக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளது என தெரிவித்துள்ளனர். தக்க முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி நிதியுதவிப் பெற்று அரசு கட்டடங்களை சரி செய்ய வேண்டும் எனக் கூறினார்.

11. நிவாரண உதவிகள் வழங்குவதற்காக அரசுடன் இணைந்து பணியாற்றும் வகையிலும் நிவாரண உதவிகள் பெறுபவர்களுக்கு உதவிடும் வகையிலும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் தனிப்பிரிவு

# ஓங்கட்டும் உலக சகோதரத்துவம்; ஒளிரட்டும் மனித நேயம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
பக்ரீத் வாழ்த்து



தியாகத் திருநாளாம் 'பக்ரீத்' திருநாளை இறையுணர்வுடன் கொண்டாடி மகிழும் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் என் இனிய 'பக்ரீத்' நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இறைவன் ஆணைக்குக் கட்டுப்படுவதே வாழ்வின் நெறி என்று வாழ்ந்த இறைத் தூதர் இப்ராஹிம் அவர்களது தியாகத்தை நினைவு கூர்கின்ற திருநாளே 'பக்ரீத்' திருநாளாகும்.

வைகறை வேளையில் துயில் எழுந்து, வணக்கத்துக்குரிய இறைவனை வணங்கி, விருந்தோம்பி மகிழும் இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த 'பக்ரீத்' திருநாள் வாழ்த்துகளை மறுமுறையும் மட்டற்ற மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஓங்கட்டும் உலக சகோதரத்துவம்!**

**ஒளிரட்டும் மனித நேயம்!**

அமைக்கப்பட்டது. மேலும் நிவாரண உதவிகள் பெறுவதில் சிரமம் இருந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

12. அக்கரைப்பேட்டையில் நாகை துறைமுக ஊழியர்கள் மற்றும் இராணுவத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட படகுகளில் பழுது அகற்றும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதேபோல் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களின் முயற்சியால் தூத்துக்குடி மற்றும் சென்னையிலிருந்து 200 படகு பழுது நீக்கும் தொழில்நுட்பப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு பழுது நீக்கி வருகிறார்கள்.



13. பாதிக்கப்பட்ட கிராமங்களில் பசுமாடுகள் 944ம் எருமை மாடுகள் 52ம் காளை மாடுகள் 141ம் வெள்ளாடுகள் 9,704ம் கோழிகள் 329ம் நாய்கள் 104ம் இறந்துள்ளன.

14. பூம்புகார் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பழுதுபட்டுள்ள காரணத்தினால் அவ்விடங்களில் உடனடியாகத் தற்காலிகமாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டுள்ளது. மேலும் அவ்விடங்களில் தடுப்பூசி மருந்துகள் வைக்கத் தேவையான குளிர்சாதனப் பெட்டிகள் இயங்குவதற்கு உரிய மின்சாரம் வழங்கவும் (ஜென்செட்) இராணுவத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

15. மாவட்டம் முழுவதும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி வழங்க தமிழ்நாட்டில் முதல் முறையாக நவீன ஊசி முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

**– எஸ். கண்ணதாசன்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம்.



# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவ கூடுதலாக நிதியுதவி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 15.1.2005 அன்று மத்திய வேளாண்மை, நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. சரத்பவாருடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களில் சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 7.12.2005 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களை, ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேரலைகளால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும், நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தச் சந்திப்பின்போது மத்திய அமைச்சர் சரத்பவாரும் உடனிருந்தார். இதனைத் தொடர்ந்து அதே நாளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சரத்பவாரைச் சந்தித்தபோது மாண்புமிகு மத்திய அமைச்சர், நிவாரண நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மீண்டும் சந்தித்து நிவாரணப் பணிகள் குறித்தும், மீனவர்களுக்கு வழங்கப்பட உள்ள உதவிகள் குறித்தும் ஆலோசிக்க உள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து 15.1.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இருவேறு பிரச்சினைகள் முக்கியமாக ஆராயப்பட்டன. இதில் மீனவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் தொடரத் தேவையான முழு உதவிகள் அளிப்பது குறித்தும், சுனாமியால் வீடிழந்தோருக்குப் பாதுகாப்பான பகுதிகளில் நிரந்தர வீடுகள் கட்டித் தருவது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்களின் 31 ஆயிரத்து 383 கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதம் அடைந்துள்ளதாகவும், அதற்கு மாற்று





ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இவற்றில் மரத்தாலான கட்டுமரங்கள் மற்றும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட கட்டு மரங்கள் என இருவகைப் படகுகள் அடங்கும். சேதமடைந்த கட்டுமரங்கள் அனைத்தையும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி வலைகளுடன் கூடிய கட்டுமரமாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொன்றும் ரூ.1.5 இலட்சம் செலவு பிடிக்கும். இந்த கட்டுமரங்களை இலவசமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதற்கு ஆகும் மொத்த செலவான ரூ.470.75 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இவை தவிர சேதமடைந்த 8,140 மரத்தாலும் கண்ணாடி இழை பிளாஸ்டிக்கினாலும் ஆன வல்லங்கள் எனப்படும் கட்டுமரத்திற்கும், மீன்பிடிப் படகுகளுக்கும் இடையேயான படகுகளைப் புதிதாக வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இவற்றை இலவசமாகத் தலா ரூ.1.5 இலட்சம் செலவில் வழங்க ரூ.122.10 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், இயந்திரப் படகுகளைப் பொறுத்த மட்டில் 3 பிரிவுகளாக அவற்றைப் பிரிக்கலாம். முதல் பிரிவு ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 7 இலட்சம் மதிப்புள்ள ஐ.பி.எம். படகுகள், அடுத்து ரூ. 8 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் பிடிக்கும் 40 அடிக்கும் குறைவான எஸ்.டி.பி. படகுகள், 3ஆவது வகை ரூ.15 இலட்சம் முதல் ரூ.16 இலட்சம் மதிப்பிலுள்ள 40 அடிக்கும் அதிகமான எஸ்.டி.பி. படகுகள். இவற்றிற்கான செலவு அதிகம் என்றாலும், இவை அனைத்தும் முற்றிலும் சேதம் அடைந்துள்ள நிலையிலும் இவற்றிற்குச் சொந்த மானவர்களின் வீடுகளும் முற்றிலும் அழிந்துவிட்ட நிலையிலும் இந்த உதவி செய்து தரப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. இந்த வகையில் 2,655 இயந்திரப் படகுகளுக்கு ஆகும் மொத்தச் செலவான ரூ.211.86 கோடியை மத்திய அரசு முழுவதுமாக வழங்க வேண்டும்.

இந்த வகையில் மீன்பிடிப் படகுகள், இயந்திரப் படகுகள், மீன்பிடி வலைகள், என்ஜின்கள் ஆகியவற்றிற்கு ஆகும் மொத்த செலவான ரூ.804.71 கோடியை மத்திய அரசு முழுவதுமாக வழங்க வேண்டும். இது தவிர சேதமடைந்துள்ள மீன்பிடி படகுகள், இயந்திரப் படகுகள் மற்றும் அவற்றிற்கான எஞ்ஜின்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதிய வலைகள் வாங்குவதற்கான செலவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீன்பிடித் துறைமுகங்களைச் சீரமைத்து நவீனப்படுத்தும் பணியையும் கூடுதலாக மேற்கொள்ளத் தேவையான ரூ.100 கோடிக்கான மதிப்பீடு ஒன்றை ஏற்கெனவே தனியாக தமிழக அரசு அளித்துள்ளது. மேற்படி, துறைமுகங்களைச் சீரமைப்பது மட்டுமல்லாமல் அவற்றை முற்றிலுமாக நவீனப்படுத்தி, தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

மீன்வளர்ப்பிற்கு ஏற்றச் சூழ்நிலைகளை ஏற்படுத்தவும், படகுகளின் நடமாட்டத்திற்கும் உதவும் வகையில் 52 நதி முகப்புகளை ஆழப்படுத்தும் பணி ரூ.15.60 கோடியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் ஆகும் மொத்தச் செலவான ரூ.1,030.93 கோடியை மத்திய அரசு முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இரண்டாவதாக உள்ள பிரச்சினை, வீடுகளை இழந்தோருக்கு நிரந்தர வீடுகளைக் கட்டித் தரும் பணி. இது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறுகையில், இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடு கட்டத் தேவையான இடத்தை, கடலில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தேர்வு செய்யும் பணியை மாநில அரசு மேற்கொள்ளும் என்றும், இதற்குத் தேவைப்படும் முதல் கட்டத் தவணையாக ரூ.50 கோடியை வழங்குமாறு தமிழக அரசு அளித்துள்ள திட்டக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் முழுத்தொகை பற்றிய விவரங்கள் பின்னர் அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது ஒரு புதிய பிரச்சினை என்பதால் இதற்கான நிதியையும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்தக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடரத் தேவையான வசதிகளை என்.ஜி.ஓ.க்கள் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியைக் கொண்டு செயல்படுத்தப் படும் என்றும் இதற்கான புதிய திட்டம் வகுக்கப்பட்டு அரசாணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இதன் மூலம் என்.ஜி.ஓக்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவை இப்பணியில் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் பெரிய அளவில் ஈடுபட முடியும் என்பதைத் தெரிவித்தார்கள். இந்தப் புதிய குடியிருப்புகள் நில அதிர்ச்சி மற்றும் புயல் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ளும் வசதியைக் கொண்டதாக அமையத் தேவையான பலத்துடன் வரைபடத்தை மாநில அரசு தயாரிக்கும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தப் பணிக்குத் தேவைப்படும் நிலம், நிலத்திற்கான ரூ.50 கோடி முதல் ரூ.100 கோடி மற்றும் கட்டுமானப் பணிக்குத் தேவைப்படும் ரூ.600 கோடி மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கத் தேவைப்படும் ரூ.100 கோடி ஆகியவற்றுடன் மொத்தமாக இந்தத் திட்டத்திற்கு ரூ.750 கோடி முதல் ரூ.800 கோடி வரை தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் என்.ஜி.ஓக்களின் பங்கு போக மீதமுள்ள பெருந் தொகையை அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வேளாண்மையைப் பொறுத்தவரை, விவசாய நிலங்கள் சுனாமி அலைகளால் மண்குவிப்பு மற்றும் உவர்நீர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 1.2 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் நிவாரண உதவியாக மாதம் 30கிலோ அரிசி மற்றும் 2 ஆண்டுகளுக்குத் தேவையான பண உதவி ஆகியவற்றுடன் நிலங்களை மீட்கத் தேவையான நிதி பற்றிய விவரங்கள் கணக்கிடப்பட்டு 15.1.2005 அன்று அனுப்பி வைக்கப்படும் என்றும் இவற்றிற்கான செலவுகளையும் மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

உப்பளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் அவற்றில் பணிபுரியும் ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கையையும் சரிசெய்யத் தேவையான நிதி விவரங்கள் குறித்து தனியான ஒரு விவர அறிக்கையும் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன் மற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு, தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் திரு. என் நாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களுடன் கால்நடைத்துறைச் செயலாளர் திரு. பி.எம்.ஏ.ஹக்கீம், இ.ஆ.ப., இணைச் செயலாளர் திரு. அஜய் பட்டாச்சாரியா, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை செயலாளர் அஜய் மேத்தா ஆகியோரும் உடனிருந்தனர்.

❖

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குச் சென்னை மாநகராட்சியின் நிவாரணப் பணிகள்



சென்னையில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தங்குமிடம், உணவு, குடிநீர், மருத்துவ வசதி ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி செய்தது. பொதுமக்களுக்கு உதவுவதற்காக 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை, போதிய தொலைபேசி வசதியுடன் ரிப்பன் மாளிகையில் உடனடியாக ஏற்படுத்தப்பட்டது, மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க 13 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்த இடங்களில் மொத்தம் 40 மருத்துவர்கள், எட்டு ஆம்புலன்ஸ் மற்றும் 150 மருத்துவப் பணியாளர்கள் மருத்துவப் பணிகளை ஆற்றினர். மேலும், பாதிக்கப் பட்ட இடங்களில் தொற்றுநோய் பரவாமல் இருக்க கிருமிநாசினி மருந்து, பிளிச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டப் பகுதிகளிலிருந்து குப்பைகள் உடனடியாக அகற்றப்பட்டதுடன் சுகாதாரமான உணவு மற்றும் குடிநீரையே அருந்துமாறு சென்னை மாநகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டனர். சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாகச் சுத்தமான குடிநீரைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் சுத்தமானதா என்று பரிசோதிக்கப் பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் வசிக்கும் கடற்கரைப் பகுதியிலுள்ள 5,000 குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பூசி மற்றும் வைட்டமின் "ஏ" மருந்து அளிக்கப்பட்டது.

இந்த இயற்கைச் சீற்றத்தால் உயிரிழந்தவர்களைக் கட்டணம் ஏதுமின்றி நல்லடக்கம் செய்வதற்குச் சென்னை மாநகராட்சி இடுகாடு மற்றும் சுடுகாடு களில் அனைத்து ஏற்பாடுகளையும் சென்னை மாநகராட்சி செய்தது. மேலும் உடலை எரிக்கத் தேவையான எரிபொருட்களும் மாநகராட்சி செலவில் அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் உடைமைகளைப் பாதுகாக்க காவல்துறையின் உதவியுடன் தக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய மின்வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.



ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு உதவிப் பொருட்கள் பெறப்பட்டன.

சுனாமி அலையால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் மெரினா கடற்கரைப் பகுதியிலுள்ள உள்வட்டச்சாலை சுத்திகரிக்கப்பட்டன. பேரலையால் இழுத்து வரப்பட்ட படகுகள் மற்றும் கட்டுமரங்கள் ஆகியவை மீனவர்களின் உதவியுடன் மீண்டும் கடற்கரைப் பகுதிக்கே எடுத்துச் சென்று வைக்கப்பட்டன.



சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு வீடிழந்தவர்களுக்காக வட சென்னையில் சாத்தாங்காடு பகுதியில் 2,750 தற்காலிக வீடுகளும், தென் சென்னை பகுதியில் 2,750 தற்காலிக வீடுகளும் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வருகின்றன.

தங்களது உறவினர், வீடு மற்றும் உடைமைகளை இழந்தவர்கள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்ட போது அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்தது. மேலும், அவர்கள் அரசு செலவிலேயே தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்லுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன.

**பொதுமக்கள் தங்க வைக்கப்பட்ட இடங்கள்**

மண்டலம் 1, 2, 6, மற்றும் 10 ஆகியவற்றில் 11 மாநகராட்சிப்பள்ளிகள், 4 சமுதாய நலக்கூடங்கள் மற்றும் 9 தனியார் திருமண மண்டபங்கள், கோவில்கள், மாதா கோவில்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டனர்.

சிந்தாதரிப்பேட்டை, கோபாலபுரம், பெரம்பூர், பேசின் பாலம் ஆகிய இடங்களிலுள்ள சென்னை மாநகராட்சி சமையல் கூடங்கள் மற்றும் 8 மாநகராட்சி சமுதாயக் கூடங்கள், ஆகியவற்றில் உணவு தயாரிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. உணவகங்களிலிருந்து மாநகராட்சியால் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இது தவிர தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களின் மூலம் அளிக்கப்படும் உணவுப் பொட்டலங்கள் மற்றும் ரொட்டிகள் ஆகியவைகளும் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.



கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் அரிசி, சமையல் பொருட்கள், பாத்திரங்கள், மருந்துப் பொருட்கள், போர்வைகள், ஆடைகள் மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி என்ற பெயரில் வங்கி வரைவோலை ஆகியவற்றைப் பொது மக்களிட மிருந்து பெறுவதற்காக ரிப்பன் மாளிகையில் தனியாக

– **சேது. ராமச்சந்திரன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி

# சுனாமியால் பாதிக்கப்பட்ட

# திருநெல்வேலி மாவட்டத்தில் நிவாரணப்பணிகள்

கடந்த 26.12.2004 அன்று தெற்காசிய நாடான இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி பேரலைகள் உருவாகி தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியை மிகக் கடுமையாகத் தாக்கியது. திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் வட்டத்திற்கு உட்பட்ட 10 கடற்கரை கிராமங்கள் பாதிக்கப்பட்டன. சுனாமி பேரலைகள் தாக்கிய சிறிது நேரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட பகுதிக்கு அரசு அலுவலர்களுடன் விரைந்து சென்றார். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ. கருப்பசாமி அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.நயினார்நாகேந்திரன் ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து சென்று பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினர்.

24 மணி நேரத்தில் பாதிப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அதன்படி வீடுகளை இழந்த பதினோராயிரத்து நூற்றி எழுபது நபர்களும், 20 நிவாரணமுகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இந்நிவாரண முகாம்களை 8 பிரிவுகளாக்கி ஒவ்வொன்றிற்கும் ஒரு துணை ஆட்சியர் நியமிக்கப் பட்டு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூ.28 இலட்சம் மதிப்பில் தற்காலிக வீடுகளைக் கட்டும் பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 630 வீடுகளும், 435 வல்லங்களும், 1,256 கட்டுமரங்களும், 50,362 மீன்பிடி வலைகளும் சேதமடைந்துள்ளது கண்டறியப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ.30,94,560 மதிப்பில் 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி, 1 சேலை, 2 பெட்சீட், தலா ரூ.4,000 வழங்கப்பட்டது. மேலும் எஸ்ஜிஆர்ஒய் திட்டத்தின் கீழ் வீடுகளை இழந்தவர்களுக்கு தலா ரூ.12,500 வீதம் ரூ.78,75,000 வழங்கப்பட்டுள்ளது. பொருள்களை இழந்தவர்கள் 5,372 எனக் கண்டறியப்பட்டு அவர்களுக்கு ரூ.1,56,43,264 மதிப்பில் வேட்டிகள், சேலைகள் மற்றும் தலா ரூ.2,000 வழங்கப்பட்டது.



இச்சுனாமி பேரலைகளால் திரு.ஜோசப்–இடிந்தகரை, திருமதி. சரோஜா விஜயாபதி, செல்வி. அகவதி – கூந்தன்குழி, மரிய எலிசபெத் – பெருமணல் ஆகிய நான்கு நபர்கள் இறந்துள்ளனர். இவர்களின் குடும்பத்தாருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தலா ரூ.1 இலட்சம் உடனடியாக வழங்கப்பட்டது. மேலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 267 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1,33,50,000 மதிப்பில் தலா ரூ.50,000 வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இதில் ரூ.25,000 மானியம் ஆகும்.



சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் கணக்கெடுக்கும் பணி மீனவளத்துறையினர் மூலம் எடுக்கப்பட்டு இதுவரை 44 மீனவர்களுக்கு ரூ.2.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படாத வண்ணம் சுகாதாரத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடப்புத்தகங்களை இழந்த 6,125 மாணவ மாணவியர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று 6,967 மாணவ மாணவியர்களுக்குச் சீருடைகளும் வழங்கப்பட்டன. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிகக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இதுவரை ரூ.9,24,010 மதிப்பில் பல்வேறு வகையான பொருட்களை வழங்கியுள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமி நிவாரணப் பணிகளுக்காக ரூ.30 இலட்சம் பொதுமக்களால் வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**– உல. இரவீந்திரன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலேசியா நாட்டின் நிதிஉதவி

மலேசிய கட்டுமானத் தொழில் மேம்பாட்டு வாரியம் (Mr. Hamzah Hasan, CEO, Construction Industry Development Board), திரு. ரோஸ்லி, சென்னையில் உள்ள மலேசியா கான்சல் ஜெனரல் (Mr. Rosli, Consul General of Malaysia at Chennai) மற்றும் திரு. கிருஷ்ணன் டான், மேலாண்மை இயக்குநர், IJM நிறுவனம், மலேசியா (Mr.Krishnan Tan,Managing Director, IJM Company) ஆகியோர் உடனிருந்தனர்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிவாரணப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருவதையும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பாராட்டிய மலேசிய பொதுப்பணித்துறை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 13.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மலேசிய நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. டத்தோ' எஸ். சாமிவேலு அவர்கள் (Dato' Seri S. Samy Vellu, Hon'ble Minister for Works, Malaysia) நேரில் சந்தித்து, சுனாமி பேரலைகளால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட மலேசிய அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். திரு. ஹம்சா ஹசன், தலைமைச் செயல் அலுவலர்,

அமைச்சர் திரு. டத்தோ' எஸ். சாமிவேலு அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்கிட மலேசிய அரசு தயாராக உள்ளது என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி உதவி வழங்கக் கோரிய தமது வேண்டுகோளை ஏற்று, மலேசிய அரசின் சார்பாக 2 கோடி ரூபாய் நிதி வழங்கியமைக்காக மலேசிய நாட்டு மக்களுக்கும் மாண்புமிகு மலேசிய பிரதமர் திரு. அப்துல்லா அகமது படாவி (YAB Dato' Seri Abdullah bin Ahmad Badawi) அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது இதயப் பூர்வமான நன்றியை, மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.டத்தோ'எஸ்.சாமிவேலு அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். ❖



# பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 10.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு.பிரகாஷ் சிங் பாதல், சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர் திருமதி. பீபீ ஜாகீர் கவுர் ஆகியோர் நேரில் சந்தித்து, சுனாமி பேரலைகளால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தங்களது ஆறுதலைத் தெரிவித்துக் கொண்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதிஅளித்தனர். மேலும், 11.1.2005 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்திற்குச் சென்று, 28 இரயில் பெட்டிகளில் வந்துள்ள போர்வைகள், தலையணைகள், புதிய துணிகள், அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் வழங்கவிருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும், நான்கு இரயில் பெட்டிகளில் வந்துள்ள சமையல்காரர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட 400 பேர் அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய இருப்பதாகவும் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பின்போது, திரு.தர்ஷன் சிங் தாலிவால் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.எஸ். பாதல், திரு. இசட். எஸ். மான், திரு.வரீந்தர் பஜ்வா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். ரேக்ரா ஆகியோர் உடன் இருந்தனர்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாராளமாக உதவிகள் வழங்கிட வேண்டும் என்ற தனது வேண்டுகோளினை ஏற்று, நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கிய பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு.பிரகாஷ் சிங் பாதல், சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர் திருமதி. பீபீ ஜாகீர் கவுர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். ◆

# சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்திற்கான வாழ்க்கை ஆதாரங்களை வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இன்று நடைபெறும் இந்தக் கூட்டம் ஓர் அசாதாரணமான கூட்டம். ஒட்டுமொத்தத் தமிழகமும், இந்திய நாடும், ஏன் உலகம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்ற சூழலில் இன்றைய கூட்டம் நடைபெறுகின்றது.

சுனாமி பேரலைகள் ஏற்படுத்திய சோகத்தைச் சுமந்து கொண்டு, கனத்த இதயத்தோடு, அதே நேரத்தில் கடமை உணர்வோடு, இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்க வந்திருக்கும் உங்கள் அனைவரையும் நான் வரவேற்கின்றேன்.

2004–ஆம் ஆண்டு விடை பெற்றுச் செல்லுகின்ற வேளையில், 2005–ஆம் ஆண்டை நாம் ஆவலோடு வரவேற்கக் காத்திருந்த வேளையில், இந்தோனேஷியா அருகே கடலுக்குள் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக, சொல்லுக்கு அடங்காத சோக நிகழ்ச்சி நம் தமிழகத்தில் நடந்தது. 2004–ஆம் ஆண்டு போகிற போக்கில், தமிழகத்தில் ஆறாத ரணத்தை அனைவரது உள்ளத்திலும் ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதம் 26–ஆம் தேதி காலையில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் எவ்வித முன் அறிகுறியும் இன்றி, திடீரென ஆழிப் பேரலைகள் சீறிப் பாய்ந்தன. என்ன நடைபெறுகிறது என்பதை உணருவதற்கு முன்னாலேயே, கடலோரப் பகுதிகள் சின்னாபின்னம் ஆக்கப்பட்டன. பூதாகரமான அலைகள் பாய்ந்தன. எங்கும் நோக்கிலும் பேரழிவை ஏற்படுத்தின. உயரமான அலைகள் உயிர்களைக் கொள்ளை கொண்டு, அகப்பட்டவற்றை எல்லாம் அழித்து, எங்கும் நாசத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றன.







இந்தக் குறுகிய காலப் பிரளயத்திற்கு ஜப்பானிய மொழியில் ‘சுனாமி’ (Tsunami) என்று பெயராம். திடீரென்று தாக்குதலைத் தொடுத்த சுனாமி அலைகளைத் தமிழகம் இதற்கு முன் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. எனவே, அடுத்து நடக்க இருக்கிறது ஓர் ஆபத்து என்பதைத் தமிழகக் கடலோர மக்கள் அறிவதற்கு முன்னாலேயே, தங்களை ஒரு அபாயம் தாக்க இருக்கிறது என்பதை அறிவதற்கு முன்னாலேயே, மூர்க்கத்தனமான அலைகளின் தாக்குதலால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் முடிவைச் சந்தித்து விட்டார்கள். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து விட்டார்கள்.

இப்படி ஓர் அவலம் ஏற்படும் என்று எவருக்கும் தெரியாது. இது எப்படி ஏற்பட்டது என்பதும் அப்போது யாருக்கும் தெரியாது.

இத்தனை விரைவாகக் கிட்டத்தட்ட எட்டாயிரம் பேர் திடீரென்று மாண்டு போவார்கள் என்றோ, மறைந்து போவார்கள் என்றோ, நாம் கனவு கூடக் கண்டது இல்லை.

ஈடு செய்ய முடியாத உயிர் இழப்பு ஒருபுறம் என்றால், கடலோரக் கிராமங்களிலும், நகரங்களிலும், கடல் அலைகள் ஏற்படுத்தி இருக்கும் பொருள் இழப்பு ஏராளம். கடலோரத் தமிழகத்தின் பொருளாதாரமே சிதைந்து போய்க் கிடக்கிறது. கடலோர மக்கள் வாழ்வு இழந்து இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள். அவர்களுடைய இருப்பிடங்கள் அழிந்து போய் விட்டன. அவர்களுடைய படகுகள் உடைந்து சிதறிப் போய் விட்டன. எந்தக் கடலை மீனவர்கள் நம்பி வாழ்ந்தார்களோ, அந்தக் கடலின் அலைகளே அவர்களின் வாழ்க்கை ஆதாரத்தை அழித்து விட்டன.

இந்தப் பேரிடர் பற்றிய விவரம் அறிந்த உடனேயே, காணாமல் போனவர்களைத் தேடவும், மீட்கவும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், உடனடியாக நான் உத்தரவிட்டேன். இந்தப் பணிகளில் மாநில அரசுப் பணியாளர்கள் மட்டும் அல்லாமல், இராணுவம், கடற்படை, வான்படை, கடலோரக் காவல்படை ஆகிய படைகளைச் சேர்ந்த வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

26.12.2004, 27.12.2004 மற்றும் 30.12.2004 ஆகிய தினங்களில் நான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு நேரில் பார்வையிட்டேன். உடனடி நிவாரணம் வழங்குதலையும் துவக்கி வைத்தேன். அமைச்சர் பெருமக்களும் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளுக்குச் சென்று, மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டார்கள். போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களின் நிகழ்காலத்திற்கான உடனடி நிவாரணம் மட்டும் அல்லாது, எதிர் காலத்திற்கான வாழ்க்கை ஆதாரங்களை வழங்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மிக விரைவாக எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த பன்னிரண்டு நாட்களாகப் பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் நானும், அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும், காவல் துறையினரும் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தோம்.

ஆழிப் பேரலைகளின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து உங்கள் அனைவரது கருத்துகளையும், ஆலோசனைகளையும் அறிவதற்காக இன்று இந்தக் கூட்டத்தை நான் கூட்டியிருக்கிறேன்.

இங்கு வருகை புரிந்திருக்கும் நீங்கள் அனைவரும் உங்களது ஆக்கபூர்வமான கருத்துகளையும், மேலான ஆலோசனைகளையும் இப்போது வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு முன்பாக, சுனாமி பேரலைகளின் காரணமாக உயிர் இழந்த அனைவருக்கும் மரியாதை செலுத்தும் வகையில், அனைவரும் எழுந்து 2 நிமிடங்கள் மவுனம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

7.1.2005 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்து விவாதிக்க நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய தொடக்க உரை





# சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதுவாழ்வு வழங்கும் பெரும் பணியில் விரைவாகவும் சிறப்பாகவும் செயல்படுவோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

சுனாமி என்று அழைக்கப்படும் ஆழிப் பேரலைகளால் தாக்கப்பட்டு, நிலைகுலைந்து போய் இருக்கும் கடலோரத் தமிழகத்து மக்களுக்கான நிவாரணப் பணிகளை மிக விரைந்து ஆற்றி வருகிறோம். எந்தெந்த வகைகளில் எல்லாம் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களோ, அந்தந்த வகைகளைக் கண்டறிந்து, உரிய உதவிகளை உடனுக்குடன் வழங்கி வருகின்றோம்.

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு, வீடு மற்றும் உடைமைகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும், 5,000 ரூபாய் அளவுக்கான உடனடி நிவாரணத்தை வழங்க நான் 28.12.2004 அன்று ஆணையிட்டேன். இந்த நிவாரணத் தொகுப்பின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 60 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 சேலை மற்றும் 2 போர்வைகள், எண்ணெய் பருப்பு முதலியன வாங்க 1,000 ரூபாய் ரொக்கப் பணம், பாத்திரங்கள் மற்றும் ஸ்டவ் வாங்க 1,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் உடனடியாகத் தற்காலிகக் குடிசை அமைக்க 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், கடல் அலையால் தங்கள் வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும், தங்கள் வாழ்வுக்கான ஆதாரத்தை இழந்து தவிக்கும் மீனவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், தலா 3,000 ரூபாய் அளவிற்கான உதவித் தொகுப்பை வழங்கவும் நான் ஆணையிட்டேன். இந்த நிவாரண உதவித் தொகுப்புகள் வழங்குகின்ற பணி ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. அது மட்டுமல்லாமல், சுனாமியால் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் நிவாரணத் தொகையாக, ஒரு இலட்சம் ரூபாய் வீதம் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்க நான் உத்தரவிட்டேன். மேலும், சுனாமி பேரலைகளால் பாதிப்புக்குள்ளாகி தங்களுடைய கண், கை, கால் போன்ற உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு கருணைத் தொகையாக 25,000 ரூபாய் வழங்கவும், படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு மேல் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு 5,000 ரூபாய் வழங்கவும் நான் ஆணையிட்டேன்.

30.12.2004 அன்று கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்ட நிவாரண உதவி வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தேன்.

இது தவிர, மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடி தொழிலை மீண்டும் துவக்குவதற்கு ஏதுவாக, வலைகள் வாங்குவதற்கும், வல்லங்கள் மற்றும் கட்டுமரங்களைச்



சீர்செய்வதற்கும் 65 கோடி ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இந்த நிவாரணப் பணி ஓரிரு நாட்களில் துவக்கப்பட்டு விடும்.

26.12.2004 அன்று சுனாமி பேரலைகளின் காரணமாகப் பாதிப்புக்கு உள்ளான தமிழகத்தின் கடலோரப் பகுதி மக்கள் தங்களது குடும்ப அட்டைகளையும் இழந்துள்ளனர். இதனால், அவர்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற இயலாத நிலை ஏற்பட்டது. அவர்கள் இழந்த குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக, புதிய குடும்ப அட்டைகளை உடனடியாக வழங்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள, அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளேன். இவ்வாறு புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் வழங்கிடச் சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்கின்ற காரணத்தால், பாதிப்படைந்துள்ள குடும்பங்கள் தாமதம் எதுவுமின்றி, நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றிட ஏதுவாக, உடனடியாக மாற்றுக் குடும்ப அட்டைகள் வழங்கிட நான் ஆணையிட்டேன். அவை தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் சமையல் எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் நியாய விலைக் கடைகளில், 2005 ஜனவரி மாதத்திற்குரிய அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் போது, கூடுதலாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

சுனாமி பேரலைக் கொந்தளிப்பின் காரணமாக, மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்களுடைய பாடப்புத்தகங்களையும், பள்ளிச் சீருடைகளையும் இழந்துள்ளனர். அம்மாணவ, மாணவியர்கள் தங்களது கல்வியினைத் தடையின்றித் தொடரும் வகையில், பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், பாடப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் இழந்த 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களை இலவசமாகத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, இரண்டு செட் சீருடைகள் இலவசமாக வழங்கிடவும் நான் ஏற்பாடு செய்துள்ளேன்.

மேலும், கல்விச் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு, கல்விச் சான்றிதழ்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டு, பாதிப்படைந்த கடலோரப் பகுதிகளில் தங்கள் பெற்றோரை இழந்து நிராதரவாக நிற்கும் குழந்தைகளை, அரசே தத்தெடுத்து, அவர்களைப் பாதுகாக்க எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இக்குழந்தைகளுக்காக பிரத்யேகமாக குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களது பாதுகாப்பான எதிர்கால வாழ்வைக் கருதி, அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் அவர்களின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டு, 18 வயது நிரம்பும் போது அதன் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும் திட்டத்தையும் அறிவித்துள்ளேன்.

இவ்வாறு நிராதரவாக்கப்பட்டு அனாதையாக நிற்கின்ற குழந்தைகள், ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருந்தால், அத்தகைய அனைத்துக் குழந்தைகளின் எதிர்காலத்தையும் உறுதி செய்யும் வகையில், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், சுனாமி பேரலைகளால் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்ற 14 வயது முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்கள், சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், அவர்கள் பெயரிலும், பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித்





தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு 18 வயது நிரம்பும் போது சொந்தத் தொழில் தொடங்கவோ, அல்லது உயர் கல்வி கற்கவோ பயன் அளிக்கும் வகையில், இந்த வைப்பீட்டின் முதிர்வு தொகை வழங்கப்படுவதற்கும் எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகையோரும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக முதலீடு செய்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன். சேவை இல்லங்களில் தங்க வைக்கப்படும் இப்பெண்கள், கல்வி கற்கவும், உயர் தொழில் பயிற்சி பெற்றிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சுனாமி பேரலைகளின் பாதிப்பால், தங்கள் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும், ஒரு பாதுகாப்பான எதிர்கால வாழ்க்கையை அளிக்க, எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய 18 வயதிற்கு மேற்பட்ட நிராதரவான பெண்களும் சேவை இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். தங்களது சொந்தக் காலில் நிற்க வழிவகை செய்யும் வகையில், இவர்களுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், இவ்வாறு சேவை இல்லங்களில் சேர்க்கப்படுபவர்கள் உயர்கல்வி கற்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதன் மூலம் அவர்கள் தங்களுக்கு ஏற்ற சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு உதவிடும் வகையில், அவர்கள் பெற்றோரை இழந்தமைக்காக வழங்கப்படுகின்ற 3 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் உத்தரவிட்டுள்ளேன். அதே குடும்பத்தில் இத்தகைய பெண்கள் ஒருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யும் வகையில், நிதி உதவி அளிக்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். 3 இலட்சம் ரூபாய் என்றால் மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாய், அத்துடன் பிரதமர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய். உயர்கல்வி அல்லது தொழில்நுட்பப் பயிற்சியை முடித்த பின்னர், புதிய தொழில் தொடங்கித் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதுவாக, இந்த முதலீட்டின் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், சுனாமி பேரலைகள் திடீரெனத் தாக்கியதன் காரணமாக, அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிட, அவர்களுக்கு உளவியல் ரீதியான அனைத்து ஆலோசனைகள் வழங்கிட அந்தப் பகுதிகளுக்கு உளவியலாளர்கள் அதாவது, Counsellors அனுப்பப்பட்டுள்ளனர்.

பொருள் ஈட்டிக் குடும்பத்தைக் காத்து வந்த குடும்பத் தலைவர்கள் பலர் இந்தப் பேரழிவில் உயிர் இழந்துவிட்டனர். இதனால் அவர்களைச் சார்ந்திருந்த குடும்பங்கள், தற்போது ஆதரவற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, கணவரை இழந்த பெண்களும், மகனை இழந்த வயது முதிர்ந்த பெற்றோரும் பிழைப்புக்கு வழியின்றி உள்ளனர்.

எனவே, குடும்ப வருவாயை ஈட்டி வந்த உறுப்பினர் இறந்து விட்ட நிலையில், அக்குடும்பங்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன். இதன்படி, அரசு தற்போது ஆதரவற்றோருக்காகச் செயல்படுத்தி வருகின்ற ஒய்வூதியத் திட்டங்களான முதியோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவை ஒய்வூதியத் திட்டம் ஆகிய உதவித் திட்டங்களில், அந்தந்தத் திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும் உதவித் தொகைகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டங்களின் கீழ் உதவி வழங்கப்படத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு, மாதந்தோறும் 200 ரூபாய் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும். மேலும்,

இவர்களுக்கு நாள்தோறும் இலவச சத்துணவும், மாதந்தோறும் இலவச அரிசியும் வழங்கப்படும். அதாவது, சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதந்தோறும் 2 கிலோ அரிசியும், உணவு உட்கொள்ளா தவர்களுக்கு மாதந்தோறும் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். இதுவன்றி, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்குச் சேலையும், ஆண்டுக்கு இரு முறை இலவசமாக வழங்கப்படும்.

உடனடி நிவாரணம் அளிப்பதற்காக, தமிழக அரசு, இதுவரை 262 கோடியே 36 இலட்சம் ரூபாய் தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது. இது பாதிக்கப்பட்ட குடும்பங்கள் புது வாழ்வு தொடங்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசு உடனடித் தவணைத் தொகையாக 250 கோடி ரூபாயை வழங்கி உள்ளது. மேலும், மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் அவர்களின் தலைமையில், மத்திய குழு ஒன்று கடந்த மூன்று நாட்களாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்துள்ளது.

சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளையும், சேத நிலவரங்களையும் உடனடியாகக் கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வழிவகை செய்வதற்காக, 4,800 கோடி ரூபாய் நிதி உதவியும், 54,000 டன் அரிசியும் வழங்கக் கோரி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் ஒன்றினையும், கோரிக்கை மனுவையும் (Memorandum) அனுப்பியுள்ளேன். இதில், தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, 204.95 கோடி ரூபாயும், தற்காலிக நிவாரண தொகுப்புக்காக 90 கோடி ரூபாயும், பொது சுகாதாரம், தொற்று நோய் தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக 71.45 கோடி ரூபாயும், தம் வாழ்வு ஆதாரத்தை முழுமையாக இழந்தவர்களுக்கு, அவர்களது இழப்பை ஈடுகட்டுவதற்காக 261.36 கோடி ரூபாயும், தற்காலிகமாக வீடுகள் கட்டுவதற்கு 250 கோடி ரூபாயும், நிரந்தர வீட்டுவசதிகளுக்காக 750 கோடி ரூபாயும், சமூகச் சொத்துகளைச் சீரமைப்பதற்காக 709.22 கோடி ரூபாயும், மீனவர்களின் மறு வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக 1,054 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட ஏனையோரின் வாழ்வு ஆதாரத்திற்காக 130.62 கோடி ரூபாயும், கடற்கரைப் பாதுகாப்பு, கடல் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள 449 கோடி ரூபாயும், சுற்றுச் சூழலை மீளப் புதுப்பித்தல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாங்ரோவ் காடுகள் மேம்படுத்துதல் பணிகளுக்காக 200 கோடி ரூபாயும், உள் கட்டமைப்பு வசதிகள், பழுதுபார்ப்பு மற்றும் மீளகட்டும் பணிக்காக 628.88 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 4,800 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து நிவாரண உதவியாகக் கேட்கப்பட்டுள்ளது.

வரலாறு காணாத அளவில் ஆழிப் பேரலை அழிவை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக அரசு துரித நடவடிக்கைகளை எடுத்து, மிக விரைவாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது; இன்னும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இன்று, இந்தக் கூட்டத்தில் பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் இன்னும் உதவிகள் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களையும், அவர்களின் நிலையான வாழ்வுக்கான நிவாரணங்களையும், இன்னும் வழங்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம் ஆகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் தான், 4,800 கோடி ரூபாய் நிதி உதவியையும், 54,000 டன் அரிசியும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இந்த உதவிகள் பயன்படும். எனவே, இந்த உதவியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு, அனைத்துக் கட்சித் தலைவர்களும் உதவிடவேண்டும் என்று நான் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீண்டும் தங்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பத் தேவையான அனைத்து உடனடி மற்றும் நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகளையும் இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய பெருமக்கள் பொதுவாகக் குறிப்பிட்ட இன்னொரு கருத்து, மீட்புப் பணியிலும், நிவாரணப் பணியிலும் சில இடங்களில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதாகும்.

தமிழகம் இதுவரை சந்தித்திராத பேரழிவு, 26.12.2004 அன்று நிகழ்ந்திருக்கிறது. இதுபோன்ற தேசியப் பேரிடர்களின் போது, இன்னும் சிறப்பாகப் பணி புரிந்திருக்கலாமே என்றும், இன்னும் விரைவாகப் பணிகள் நடைபெற்றிருக்கலாமே என்றும் நினைப்பதற்கு, நிச்சயம் இடம் உண்டு. அது இயல்பு தான். அழிவு ஒரு சில நிமிடங்களில் நடந்து விடுகிறது. ஆனால், ஆக்கப் பணிகளை அத்தனை விரைவில் செய்திட இயலாது என்பதை, அனைவரும் அறிவீர்கள். இயற்கையின் அழிப்புச் சக்திக்கு இணையாக, மனித சக்தியால் ஆக்கப் பணிகளை ஆற்ற இயலாது என்பது உண்மை. இருப்பினும், ஆழிப் பேரலைகள் தந்த அதிர்ச்சியால் உள்ளம் தளராமல், உடனடியாக, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தமிழக அரசு சிறப்பாக மேற்கொண்டது. அதனைத் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும், தகவல் தொடர்பு ஊடகங்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளன என்பதை, அனைவரின் கவனத்துக்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்னும் விரைந்து செயல்பட்டிருக்கலாமே என்னும் உங்கள் ஆதங்கத்தையும் நான் உணர்கிறேன்.

அது போல் அரசின் அரிய பணிகளை நீங்களும் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தவும், நிவாரணங்களை விரைந்து வழங்கவும், கண்காணிக்கவும்,



அமைச்சர்கள் தலைமையில் அரசு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். பேரிடர்களில் செயல்படுத்தப்படும் முதல் கட்டப் பணிகளான தேடுதல், மீட்பு மற்றும் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்தல் ஆகிய பணிகள், 30.12.2004 அன்றே முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டப் பணிகளான நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் துவக்கப்பட்டன.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட அந்தமான், கார் நிகோபார், இலங்கை மற்றும் இந்தோனேஷியா முதலான பகுதிகளில், முதல் கட்ட மீட்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்கே போராடிக் கொண்டிருந்த சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தான் முதற்கட்ட மீட்புப் பணிகள் பெரும்பாலும் 30.12.2004 அன்றே முடிவுற்றன என்பதை, நான் இங்கே மன நிறைவோடு குறிப்பிட விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட மீனவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பணிகள், தற்போது விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆக்கப் பூர்வமான நீங்கள் வழங்கிய கருத்துகளையும் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதுவாழ்வு வழங்கும் பெரும்பணியில் இன்னும் விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி அலைகளின் தாக்குதலால் ஆற்றொணாத் துயர் அடைந்திருக்கும் மக்களின் அல்லல் களைவதிலும், அவர்கள் புதுவாழ்வு காணத் தேவையான அரும்பணிகளை மேற்கொள்வதிலும், எனது அரசு முன்னே நிற்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொண்டு, விடை பெற்றுச் செல்வதற்கு முன்பு இங்கே தெரிவிக்கப்பட்ட சில கருத்துகளுக்கு நான் விளக்கம் கூற விரும்புகிறேன்.

சகோதரர் திருமாவளவன் அவர்கள் பேசுகின்ற போது பொங்கல் விழாவையே ரத்து செய்து விடலாம் என்று கூறினார். பொங்கல் விழாவை அரசு கொண்டாடுவது இல்லை. தனிப்பட்ட முறையில் மக்கள் கொண்டாடுவது. அவர்களின் இல்லங்களில் மக்கள் தாங்களாக கொண்டாடுவது. ஆகவே இதற்கு அரசு அறிவிப்பு தேவையில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஆனால், அதே சமயத்தில் மாநிலத்தின் சார்பில் துக்கம் அனுசரிக்கும் ஒரு நாள் அறிவிக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நான் அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும் ஆலோசனை நடத்தி விட்டு இதற்கான முடிவை விரைவில் அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, மீனவர்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இங்கே தெரிவிக்கப்பட்டது. பிரதமர் அவர்களுக்கு நான் அனுப்பியுள்ள Memorandum அந்தக் கோரிக்கை மனுவிலேயே இந்தக் கோரிக்கையும் வைக்கப்பட்டு உள்ளது என்பதை நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று பிரதமர் அவர்களை சந்திக்கும் போதும், இந்தக் கருத்தை வலியுறுத்துவேன். மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பெரும்பாலான கடன்கள் Commercial Banks மூலமாகவும், Co-operative Banks மூலமாகவும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தள்ளுபடி செய்வதானால் மத்திய அரசு தான் அதை செய்ய வேண்டும். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. இதைப் பற்றி நிச்சயமாக பிரதமர் அவர்களிடம் நான் வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Groynes அதாவது தூண்டில் வளைவுகள், தடுப்புச் சுவர்கள் கடலோரத்தில் கட்ட வேண்டும் என்ற கருத்தை பலர் இங்கே தெரிவித்தார்கள். இதையே ஒரு அம்சமாக பிரதமரிடம் வைக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவில் சேர்த்திருக்கிறோம். அதற்காக தான் ஏறக்குறைய 449 கோடி ரூபாய் கோரி இருக்கிறோம். இது இப்போது vulnerable ஆக, பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய 40 இடங்களில் இந்த Groynes கட்டுவதற்கும், தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் கோரி இருக்கிறோம். ஆனால், தமிழகத்தின் ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை முழுவதற்கும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமானால் 3000 கோடி ரூபாய் தேவைப்படும். அதையும் இன்று பிரதமர் அவர்களை சந்திக்கும் போது நான் வலியுறுத்த விரும்புகிறேன். இது தமிழகத்திலுள்ள அனைத்து மீனவர்களின் கோரிக்கையாகும். கடலுக்கு செல்லும் மீனவர்களின் கோரிக்கையாகும். ஆகவே, இன்று மத்திய அரசில் அங்கம் பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை நீங்களும் மத்திய அரசிடம் வலியுறுத்தி இதற்கான நிதி உதவியை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கும்படியாக நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே பேசிய சிலர், நிரந்தரமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு குறைந்தபட்சம் 6 மாதத்திலிருந்து 1 ஆண்டு காலம் ஆகும்; ஆகவே, அதுவரை அவர்களை கூடாரங்களில் தங்க வைக்கலாம் என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். கூடாரங்களில் தங்குவதை மீனவர்கள் விரும்புவதில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு dormitory type accommodation செய்து கொடுத்தாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. தனித்தனி வீடுகள் வேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக தனியாரிடமிருந்து தேவையான நிலங்களை குத்தகைக்கு



எடுத்துக் கொண்டு lease–ல் எடுத்துக் கொண்டு, அங்கே, அங்குள்ள பகுதியில் மீனவர்கள் எத்தகைய குடியிருப்புகளை விரும்புகிறார்களோ தற்காலிகமாக அத்தகைய குடியிருப்புகளை கட்டித் தருவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிகமான குடியிருப்புகள் பல design–களில் இருக்கும். நாம் பொதுவாக ஒரே design கொடுத்தோமானால், ஒரு பகுதியிலுள்ள மீனவர்கள் அதை விரும்புவதில்லை. இன்னொரு பகுதியில் உள்ளவர்கள் வேறு design வேண்டும் என்கிறார்கள். ஆகவே, எத்தகைய குடியிருப்புகளை, தற்காலிகமான குடியிருப்புகளைக் கட்டுவது என்ற அதிகாரம், அதை முடிவு செய்யும் அதிகாரம், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி உடனடியாக துவங்கும். இந்தத் தற்காலிகமான குடியிருப்புகள் எப்படியும் ஓர் ஆண்டுகாலம் வரை ஸ்திரமாக இருக்கும். அதற்குள் அவர்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதிகளை செய்து கொடுப்போம். அதற்காகத் தான் மத்திய அரசிடமிருந்து 4800 கோடி ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறோம். இங்கே பேசிய மரியாதைக்குரிய ஆற்காடு வீராசாமி அவர்கள், இது போதாது, இன்னும் கேட்க வேண்டும் என்றார்கள். நாங்கள் கேட்பதற்குத் தயார், ஆனால் மத்திய அரசு வழங்க வேண்டும், அதற்கு நீங்களும் அங்கே பேசி அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய அழைப்பை ஏற்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்துள்ள அனைவருக்கும், நல்ல ஆலோசனைகளைக் கூறிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

7.1.2005 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில்
சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டவர்களுக்கு
நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல் பற்றிய
அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய நிறைவுரை

## 7.1.2005 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம் :

1. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மு.க. ஸ்டாலின், திரு. ஆற்காடு என். வீராசாமி, 2. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. வாசன், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், 3. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. என். வரதராஜன் மற்றும் திரு. டி.கே. ரெங்கராஜன், 4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். நல்லகண்ணு, திரு. சி. பழனிச்சாமி, 5. பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், திரு. குமாரவேல், 6. பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி, திரு. ராம.முத்துக்குமார், 7. இந்திய தேசிய லீக் கட்சி மாநிலத் தலைவர் திரு. பஷீர் அகமது, செயலாளர் திரு. நிஜாமுதீன், 8. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. காதர் மொய்தீன், திரு. எம். அப்துல் ஹக்கீம், 9. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு. பூங்குன்றன், திருமதி. அருள்மொழி, 10. சமூக நீதிக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜெகவீரபாண்டியன், திரு. அசோகன், 11. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. எல். கணேசன், திரு. சத்யா, 12. இந்திய குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. செ.கு. தமிழரசன், திரு. செங்குட்டுவன், 13. இந்திய குடியரசுக் கட்சி (கவாய் பிரிவு)யின் தலைவர் திரு. சக்திதாசன், மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. சென்னாமூர்த்தி, 14. அம்பேத்கர் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. வை. பாலசுந்தரம், திரு. அண்ணாதுரை, 15. பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த திரு. எம். ஷரீப், திரு. எஸ்.எஸ். முகம்மது ரஜாக், 16. இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த திரு. வேட்டவலம் மணிகண்டன், திரு. என்.பி. வெங்கடகிருஷ்ணன், 17. தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த திரு. பொன். குமார், 18. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த திரு. தொல் திருமாவளவன், திரு. செல்வப் பெருந்தகை, 19. பாரதிய குடியரசுக் கட்சியின் தலைவர் திரு. பி.வி. கரியமால், பொதுச்செயலாளர் திரு. அகிலன், 20. அகில இந்திய குடியரசுக் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. தாமோதரம், வேலூர் மாவட்டத்தின் தலைவர் திரு. டி.சி. மணிவேல், 21. தமிழ்நாடு முத்தரையர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ராஜமாணிக்கம், திரு. சின்னசாமி, 22. தமிழ் மாநில முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு. ஷேக் தாவூது, செயலாளர் திரு. அனந்தராமன், 23. கிறிஸ்துவ முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஜோசப் பெர்னாண்டோ, 24. பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. சந்தானம், திரு. மெய்யப்பன், 25. மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. ஸ்ரீதர் வாண்டையார், இணைச் செயலாளர் திரு. இ. முத்து, 26. கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியின் தலைவர் டாக்டர் தம்பா, செயலாளர் திரு. டொமினிக், 27. தமிழக திராவிட மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவன், திரு. என். வேதகிரி, 28. தமிழக விவசாயிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி, 29. தமிழ்நாடு நேஷனலிஸ்ட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் மாவட்டம்
# சுனாமி பாதித்த பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள்



26.12.2004 அன்று திடீரென தாக்கிய கடல் கொந்தளிப்பால் வீடு வாசல்களை இழந்த 33 குப்பங்களைச் சேர்ந்த 28,000 மீனவர்களை செங்கல்பட்டு, திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய பகுதிகளில் 44 முகாம்களில் (திருமண மண்டபம் மற்றும் பள்ளிகளில்) 26.12.2004 முதல் 31.12.2004 முடிய தங்க வைத்து, தினமும் 3 வேளைகள் உணவுப் பொட்டலங்கள், போர்வைகள், குடிநீர் மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டன. எஸ்.ஆர்.எம்.கல்லூரி, ஆர்ச்சிட் கெமிகல்ஸ் போன்ற சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் காபி, டீ, மாத்திரைகள், போர்வைகள் ஆகியவற்றை வழங்கின.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம், ஊரக வளர்ச்சித்துறைச் செயலர் திருமதி. சாந்த ஷீலா நாயர், இ.ஆ.ப., போக்குவரத்துத்துறைச் செயலர் திரு. இரா.கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப.,ஆகியோர் இடைவிடாது இவர்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் போர்க்கால அடிப்படையில் செய்து கொடுத்தனர். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் அவர்கள் செங்கல்பட்டு, திருக்கழுக் குன்றம், திருப்போரூர் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு முகாமிற்கும் சென்று அனைத்து வசதிகளையும் செய்து தரப்பட்டிருந் தனவா என்பதை உறுதி செய்து கொண்டார். சுனாமியால் பாதிக்கப்பட்டு நிர்கதியாக, வீடு, வாசல்களையும் உடைமைகளையும் உற்றார் உறவினர் களையும் இழந்து, தங்கள் குழந்தை களுடன் நெடுஞ்சாலையில் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு இலவசப் பேருந்து வசதி செய்து கொடுத்துத் தமிழக அரசு அமைத்த முகாம்களுக்கு அனுப்பி வைத்தார். மாவட்ட

நிருவாகத்தின் சார்பில் 15 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி மருந்துகளும் போலியோ தடுப்பு மருந்துகளும் மற்றும் அனைத்து அடிப்படை சுகாதார வசதிகளும் செய்து தரப்பட்டன. இதனால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் காலரா,தட்டம்மை போன்ற தொற்றுநோய்கள் பரவாமல் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் மீட்பு நடவடிக்கைகளை உடன் இருந்து கவனிக்கவும் காணாமல் போனவர்களைப் பற்றி உரிய விவரங்களைச் சேகரித்து மதிப்பிடவும், துணை ஆட்சியர் நிலையில் 6 மாவட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

### நிவாரணப்பணிகள்

உய்யாளிக்குப்பம், புதுப்பட்டினக்குப்பம், பெரியக் குப்பம், ஆலிக்குப்பம், சின்னக்குப்பம் உள்ளிட்ட 30 இடங்களில் 20 புல்டோசர்களை ஈடுபடுத்தி, இடிபாடுகளிடையே உடல்கள் ஏதேனும் உள்ளனவா எனத் தேடும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. 4 நாட்களுக்குள் சுனாமியால் உயிரிழந்த 128 உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது உறவினர்களிடம் முறையாக ஒப்படைக்கப் பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குப்பங்களிலும், 31.12.2004க்குள் அனைத்துச் சாலைகளும் சரிசெய்யப்பட்டு, மின்சாரமும் பாதுகாக்கப் பட்ட குடிநீரும் வழங்கப்பட்டன.

### அவசர உதவிக்கு

சதுரங்கப்பட்டினம், உய்யாளிக்குப்பம், கல்பாக்கம் உள்ளிட்ட 30 கிராமங்களிலுள்ள பாதிக்கப்பட்ட





பொதுமக்கள் அவசர உதவிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தலா 60 கிலோ அரிசி, வேட்டி, சேலை மற்றும் 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகிய நிவாரண உதவிகளை வழங்கினார்கள். அப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுனாமி 2ஆவது முறையாகத் தாக்கும் என பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் மாவட்ட நிருவாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. கடலோரக் கிராம மக்கள் அனைவரையும் அப்புறப்படுத்தி பாதுகாப்பான மையங்களுக்கு அரசு நிருவாகம் அனுப்பி வைத்தது.

மீண்டும் சுனாமி வந்துவிட்டது என்ற புரளியால் பீதியடைந்த மக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரு ஜீப்பை வரவழைத்து அதில் ஒலிபெருக்கியைப் பொருத்தி மீண்டும் சுனாமி என்பது வீண் வதந்தி; இதில் எந்த உண்மையும் கிடையாது. யாரும் பயப்படத் தேவையில்லை. ஊரை விட்டுச் செல்ல வேண்டாம் என அறிவித்தார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், உடனடியாக ஊர்முழுக்க காவல் துறையினர் முலம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டார்.

### ஹெலிகாப்டரில் தேடுதல் பணி

உய்யாளிக்குப்பம் அருகே ஒரு சிறு தீவில் இருந்த ஒரு ஆலமரத்தில் 3 சிறுவர்கள் 3 நாட்களாகத்

தொங்கிக்கொண்டிருப்பதாக தகவல் அறிந்த உடனே மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த இடத்திற்கு விரைந்தார். படகோ, தீயணைப்புத்துறையினரோ நெருங்க முடியாத இடமாக இருப்பதை அறிந்து மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக ஒரு ஹெலிகாப்டரை வரவழைத்தார். கல்பாக்கம் அணுமின்நிலையத்தில் இறங்கியதும் அந்த சிறு தீவை நன்கு அறிந்த ஒரு இளைஞனை, மாவட்ட ஆட்சித்தலைவர் அந்த ஹெலிகாப்டரில் ஏற்றி அனுப்பி வைத்தார். அரை மணி நேரம் அந்தச் சிறு தீவைச் சுற்றிப்பார்த்த பின், அந்த 3 சிறுவர்களையும் காணமுடியாமல் முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் பிணம் அங்கு இருப்பதைக் கண்டு எடுத்து வந்தார்கள்.

## நிவாரணக்குழு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி சோமசுந்தரம், மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். சந்திரன் ஆகியோர் கொண்ட நிவாரணக்குழு அமைக்கப்பட்டது.

## புயல் வேக நிவாரண உதவிகள்

வரலாறு காணாத சுனாமி கொந்தளிப்பால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 128 ஆகும். இவர்களில் ஆண்கள் 36, பெண்கள் 52, குழந்தைகள் 40. இவர்கள் அனைவருக்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நிதியுதவி வழங்கிப் பேசும்போது, "துயரச்சம்பவம் நடந்த உடனே தமிழக அரசு மாநில நிருவாகத்தை முழுமையாக முடுக்கி விட்டு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. கடல் கொந்தளிப்பால் இறந்தவர்களின் சடலங்கள் அனைத்தும் மீட்கப்பட்டு விட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த வித சுகாதார பாதிப்பும் இல்லாமல் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எங்கும் காலரா போன்ற தொற்று நோய்கள் அறவே கிடையாது. கடற்கரை ஓரத்தில் நீங்கள் குடியிருந்த காரணத்தால்தான் இத்தகைய பேரழிவு ஏற்பட்டது. படகோட்டிகளாகவும், மீனவ நண்பர்களாகவும் விளங்கும் நீங்கள் மேடான பகுதிகளைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் மேடான பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பாதுகாப்பான நிரந்த வீடுகளைக் கட்டித்தர தயாராக உள்ளார்'' எனக் கூறினார்.

முற்றிலுமாகவோ, பகுதியாகவோ வீடுகளை இழந்த 7,093 மீனவர்களுக்குக் குடிசை கட்டிக்கொள்ளவும், பாத்திரங்கள் மளிகைப் பொருட்கள் வாங்கவும் தலா ரூ.4,000/–ம், 60 கிலோ அரிசியும், ஒரு சேலை, ஒரு வேட்டி, 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய், எவர்சில்வர் குடம், டிரங்குபெட்டி மற்றும் ஸ்டவ் ஆகியவைகளை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினார்கள். மேலும், 2,289 நபர்களுக்கு மேற்கூறிய பொருட்களும் குடிசைகள் அமைத்துக்கொள்ள ரொக்கம் ரூ.2,000/–மும் வழங்கப்பட்டது. காயமடைந்த 11 நபர்களுக்குத் தலா ரூ.5,000/– மும் வழங்கப்பட்டது. சுனாமி கடல் கொந்தளிப்பின்போது, குடும்ப அட்டைகள் காணாமல் போய்விட்டதாக 1,583 நபர்கள் புது குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பித்தார்கள். தகுந்த விசாரணைக்குப் பிறகு இதுவரை 1,058 நபர்களுக்குத் தற்காலிக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 5,714 மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், தலா 2 சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. மீன்பிடி வலைகளை இழந்த





மீனவர்களுக்கு உடனடி நிவாரணமாக தலா ரூ.10,000/– (மொத்தம் ரூ.2,90,00,000/–) வழங்கப்பட்டது.

வீடுகளை இழந்த 1,100 மீனவர்களுக்குத் தற்காலிக வீடுகள் (102 சதுர அடி கொண்ட ஒரு வீட்டின் மதிப்பு ரூ.8,000/– ஆகும்) கட்டப்பட்டு வருகின்றன. பொங்கல் தினத்தன்று புது நெமிலிக்குப்பத்தில், மீன்வர்களுடன் பொங்கல் கொண்டாடிய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் 45 தற்காலிக வீடுகளைத் திறந்து வைத்தார். சுனாமி கொந்தளிப்புக்குப் பிறகு முதன்முதலாகச் சாலவான்குப்பத்திலிருந்து 2 படகுகளில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி.சோமசுந்தரம் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழக சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன், திரு. எஸ். எஸ். சந்திரன், எம்.பி., மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு. ம. தனபால், திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. கனிதாசம்பத், சிட்லபாக்கம் திரு. ச. இராஜேந்திரன், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை ஊராட்சித்தலைவர் திரு. பி.வேலாயுதம் ஆகியோர் சுமார் 10 மீனவர்களுடன் அவர்களுக்குத் தைரியத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும் வகையில் கடலுக்குள் சென்றனர். சுமார் ஒரு மணிநேரம் கடலுக்குள் மீனவர்களுடன் பயணம்'செய்து திரும்பிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "சுமார் 10 கிலோ மீட்டர் கடலுக்குள் மீனவர்களுடன் சென்றோம். வழக்கமாக கடலுக்குள் அடியில் மேடான, சகதியான பகுதிகளில் தான் மீன்கள் இருக்கும். ஆனால் அத்தகைய மேடான சகதியான பகுதிகளே இப்பொழுது இல்லை. சுனாமியால் கடலுக்குள் அடியில் பூகோள அமைப்பே மாறிவிட்டது. எனவே, மீன்கள் இப்போது கிடைக்கவில்லை. தற்போது இங்கு ஓடான், தேங்காய்பாறை, சீக்கான் போன்ற மீன்கள் உள்ளன. இத்தகைய மீன்கள் வரும் இடங்களில் வழக்கமாக நாம் சாப்பிடும் மீன்கள் வராது. எனவே நாங்கள் மீன் பிடிக்கச் செல்வதால் எந்தப் பயனும் கிடையாது என மீனவர்கள் தெரிவித்தார்கள். எனவே, மீண்டும் மீன் பிடிக்கச் செல்ல ஏதுவான சூழ்நிலை கடலில் உருவாகும்வரை அவர்களின் புதிய வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் பெற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று ஏற்பாடுகள் செய்வோம்" என்று கூறினார். மேலும் அவர் சேதமடைந்த படகுகளைப் பழுது பார்க்கவும் அதிகமாக பழுதடைந்த படகுகளுக்குப் பதிலாகப் புதிய படகுகள் வாங்கித்தரவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு நிச்சயம் உதவி செய்யும் எனவும் கூறினார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் உய்யாளிக் குப்பத்தில் 50 வீடுகளையும் புதுப்பட்டினத்தில் 50 வீடுகளையும் நெமிலிக்குப்பத்தில் 135 தற்காலிக வீடுகளையும் புது இடையூர்குப்பத்தில் 45 தற்காலிக வீடுகளையும் திறந்து வைத்தார். உய்யாளிக்குப்பத்தில் 5 படகுகளில் மீனவர்களுடன் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வந்தார். அப்பொழுது பிடிபட்ட மீன்களை ஏலத்தில் விட்டார். தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மைத்ரேயன் இம்மீன்களை ரூ.1,100க்கு ஏலத்தில் எடுத்தார். இத்தொகையை உய்யாளிக்குப்ப மீனவர்களிடம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

26.12.2004 முதல் இடைவிடாது இப்பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அமைச்சர் பெருமக்களும் மாவட்ட ஆட்சித்தலைவரும் வழங்கினார்கள். 2005 புத்தாண்டு நாளன்று சோகத்தில் மூழ்கியிருந்த மீனவர்கள் தமிழக அரசின் நிவாரண உதவிகளால் பொங்கலன்று மெல்ல புன்னகைக்க ஆரம்பித்தார்கள்.

– ந. இளங்கோ,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.



# தமிழுக்கு அதிகாரம் தந்த தமிழன்

■ கவியரசர் **இளந்தேவன்**

உலகைத் தமிழ்மொழி ஆளுவ தற்கே
உண்டா ஓர்அதி காரம் ?
யார் அதிகாரம் தந்தார் ? அவரை
அறிந்தவர் உண்டா யாரும் ?

வள்ளுவன் என்றொரு வல்லவன் வந்தான்
தந்தான் தமிழ்க் கதி காரம்
ஒன்றா இரண்டா ஒருநூற் றோடு
முப்பது பேரதி காரம் !

தமிழ்எனும் சொல்லை உச்சரிக் காமல்
தமிழ்மறை யாம்குறள் தந்தான்;
இமிழ் கடல் ஞாலப் பொதுமறை தந்தே
இறவாப் பெரும்புகழ் கொண்டான் !

ஒன்றே முக்கால் அடியில், அடடா,
எத்தனை தத்துவ முத்து
உலகத் தமிழர் எல்லோ ருக்கும்
அதுதான் பரம்பரைச் சொத்து !

உலகச் சிந்தனை மலையின் சிகரம்
இந்தியச் சிந்தனை யாகும் !
இந்தியச் சிந்தனை மலையின் சிகரம்
செந்தமிழ்ச் சிந்தனை யாகும் !

செந்தமிழ்ச் சிந்தனை மலையின் சிகரம்
வள்ளுவச் சிந்தனை யாகும் !
வள்ளுவச் சிந்தனை வழியில் நடந்தால்
வையகம் வானகம் ஆகும் !



# "சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய ஆணைகளை நேரில் வழங்கி வாழ்த்தினார்.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இந்தியா மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று விருதுகளைத் தேடித் தருவதற்காக விளையாட்டு வீரர்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த திட்டம் 1991–1996 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2001–ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றதும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறு சாதனைகளைப் பன்னாட்டு அளவில் நிகழ்த்துவதற்காக,திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு, இவர்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில், தகுதி வாய்ந்தவர்கள் 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்களது விளையாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ள அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு செய்து தருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 56 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். தற்போது, தடகளம், நீச்சல், டேபிள் டென்னிஸ், ஸ்குவாஷ், டென்னிஸ், படகு ஓட்டுதல் ஆகிய பிரிவுகளில் திறமைப் படைத்த 10 இளம் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இவ்வாறு தமிழ்நாடு அரசின் 'சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள

ஆர்.எஸ்.பிஜில் (Athletics), எஸ். பிரேம் நாத், எஸ்.ஆர்.சரத், அக்னிஷ்வர் (Swimming), வி.அன்வேஷா ரெட்டி(Squash), கே.கே.நர்மதா (Table Tennis), தாரிக் ஜேக்கப், வந்தனா முரளி, சுதர்சன் (Tennis), கௌரி ஆதப்பா (Rowing) ஆகிய 10 விளையாட்டு வீரர்கள் – வீராங்கனைகளுக்கு இதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

மேலும், எதிர்காலத்தில் பங்குபெற உள்ள பன்னாட்டுப் போட்டிகள் அனைத்திலும் மகத்தான வெற்றி பெற்று நாட்டுக்குப் புகழ் சேர்க்க வேண்டும் என்று அந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளிடம் தனது வாழ்த்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது விளையாட்டு மேம்பாட்டு துறை உறுப்பினர் – செயலர் திரு.பி.டபிள்யு.சி.டேவிதார் உடனிருந்தார்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட

# கன்னியாகுமரி மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண சீரமைப்புப் பணிகள்



26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப் பேரலை (சுனாமி) தாக்குதலில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான கன்னியாகுமரி மாவட்டம் 68 கி.மீ. நீளம் கடலோரப் பகுதியைக் கொண்டது. ஆரோக்கியபுரம் முதல் கன்னியாகுமரி வ்ரை வங்களா விரிகுடா கடலும், கன்னியாகுமரியில் வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடல் சங்கமமும், கன்னியாகுமரி முதல் நீரோடி வரை அரபிக்கடலும் சூழப் பெற்றது குமரி மாவட்டம்.

68 கி.மீ. நீளம் கொண்ட கடலோரப் பகுதியில் உள்ள 42 கடலோரக் கிராமங்களில் 33 கடலோரக் கிராமங்கள் 26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலைத் தாக்குதலில் பாதிப்பிற் குள்ளாயின. 33 கிராமங்களிலும் வாழ்ந்து வந்த 31 ஆயிரத்து 175 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 1 இலட்சத்து 87 ஆயிரத்து 650 மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டனர். விலை மதிக்க முடியாத 824 மனித உயிர்கள் ஆழிப்பேரலைக்குப் பலியாகின. 139 நபர்கள் குறித்த தகவல்கள் இல்லை. 617 நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர். 3,326 கால்நடைகள் உயிரிழந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவு**

ஆழிப் பேரலை திரும்பு முன்னரே மீட்புப் பணிகளையும், நிவாரணப்பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவிட்டார்கள். பாதிக்கப் பட்டோருக்காக 62 தற்காலிக நிவாரண முகாம்கள் அரசு பள்ளிகள், திருமண மண்டபங்கள், கிறிஸ்தவ



ஆலயங்களில் அமைக்கப்பட்டு சுமார் 41,250 பேர் தங்க வைக்கப்பட்டனர். முகாமில் உள்ள அனைவருக்கும் மூன்று வேளை உணவு உட்பட அத்தியாவசியத் தேவைக்கான அனைத்துப் பொருட்களும் வழங்கப் பட்டன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகை**

27.12.2004 அன்று குமரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கோட்டாறு, புனித சவேரியார் ஆலயம் மற்றும் நாகர்கோவில் ஆசிசி ஆலயம் முகாம்களுக்குச் சென்று பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறியதோடு, காயமடைந்து அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெற்று வருவோரை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார். மீட்புப் பணிகளையும், நிவாரணப் பணிகளையும் தீவிரப்படுத்த அதிகாரி களுக்கு உத்தரவிட்டார்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பாதிக்கப் பட்டோரிடையே உரையாற்றும்போது, "இன்றைக்கு, துயரமான சம்பவம் நடைபெற்ற நேரத்தில் உங்களைச் சந்தித்து ஆறுதல் கூறவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவும் வந்துள்ளேன். யாரும் எதிர்பாராத வகையில் கடலில் ஏற்பட்ட ராட்சத அலைகள் பெருத்த உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் 526 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இம்மாவட்டத்தில் பாதிக்கப் பட்டோரில் பெரும்பாலோர் மீனவ மக்கள் என அறிவேன். வீடுகளையும், மீன்பிடி படகுகளையும், மீன்பிடி சாதனங்களையும், வலைகளையும் இழந்து நிர்க்கதியில் நிற்கும் மீனவ மக்களுக்கு, சேதமடைந்ததை மீண்டும் புதுப்பிக்கவும், வீடுகள் கட்டிக் கொடுக்கவும், மறுவாழ்வுக்கும் அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். எதற்கும் கவலைபடத் தேவையில்லை. உற்ற நண்பனாக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும். உடனடித் தேவைகளுக்கான அனைத்து உதவிகளையும் நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்வார்.

உங்களது எதிர்காலம் மீண்டும் வளமானதாக அமைய அனைத்து நடவடிக்கைகளையும் எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்யும்'' என்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிறப்பு நிவாரணமாக 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி, 1 சேலை, 2 போர்வைகள் உட்பட வீடிழந்தோருக்கு ரூ.4,912 வீதமும், தொழில் பாதிப்படைந்தோருக்கு ரூ.2,912 வீதமும் நிவாரண உதவிகளை வழங்கவும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் கருணைத் தொகையும் வழங்க உத்தரவிட்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.12.2004 அன்று நேரடியாக நாகர்கோவிலுக்கு வருகை தந்து**, இராமன்புதூர் திருக்குடும்ப ஆலய வளாக நிவாரண முகாமில் நிவாரண உதவிகளை வழங்கி ஆறுதல் கூறினார். நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை முகாம் பணியாற்ற உத்தரவிட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது; "பெரியோர்களே, தாய்மார்களே, உடன்பிறப்புக்களே அனைவருக்கும் வணக்கம்.

2 நாட்களுக்கு முன்பு இங்கு வந்து உங்களை எல்லாம் சந்தித்து நான் ஆறுதல் கூறினேன். இன்று மீண்டும் உங்களுக்கு உதவிகளை வழங்க நேரில் வந்திருக்கிறேன். கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 கட்டமாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். 3 கட்டங்களாக இந்த உதவிகளைச் செய்கிறோம். முதற்கட்டம் தேடுதல் மீட்புப் பணி ஆகும். கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களைத் தேடி, அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று அவர்களுக்கு உடனடித் தேவையான மருத்துவ சிகிச்சை, உணவு இவற்றை வழங்குவது தான் முதற்கட்டப் பணி. அதோடு இந்த ராட்சத அலைகளுக்குப் பலியானவர்களின் உடல்களைத் தேடி அந்த உடல்களை மீட்டு அவற்றை அடக்கம் செய்வதும் அந்த முதற்கட்டப் பணியில்

அடங்கும். இந்த முதற்கட்டப் பணியை ஏறக்குறைய செய்து முடித்து விட்டோம்.

2ஆவது கட்டப் பணியைத் தொடங்குவதற்குத் தான் இன்றைக்கு நான் வந்திருக்கிறேன். இன்று உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காகப் பல உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் ஒவ்வொரு வருக்கும் 1 வேட்டி, 1 சேலை, 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், அடுப்பு, பாத்திரங்கள் வாங்கு வதற்கு 1,000 ரூபாய், பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றை வாங்குவதற்கு 1,000 ரூபாய், தற்காலிகமாக ஒரு குடிசை எழுப்புவதற்கு 2,000 ரூபாய் என்று இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

வேட்டி, சேலையோடு 2 போர்வைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றோடு ஒவ்வொரு குடும்பத்திலும் பலியான ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1 இலட்சம் கருணைத் தொகையாகவும் வழங்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் உடனடி நிவாரண உதவிகளாகும்.

மூன்றாவது கட்டமாக உங்களுக்கு நிரந்தரமான ஒரு புனர்வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம். அந்த 3ஆவது கட்டப்பணியில் தான் உங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், நீங்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான படகுகள், வலைகள், மீன்பிடிச் சாதனங்கள் இவற்றையெல்லாம் வாங்கித் தருதல் போன்ற உதவிகள் மேற்கொள்ளப்படும். ஆகவே மிக விரைவில் இந்த 3ஆவது கட்டப்பணியில் அதாவது உங்களுக்கு நிரந்தரமான ஒரு வளமான புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்கும் பணியும் நடைபெறும். ஆகவே யாரும் எதற்கும் கவலைப்படவேண்டாம்.

நான் மிகவும் பாதிக்கப்பட்ட சில இடங்களுக்குச் சென்று உதவிகள் வழங்கியபோது பாதிக்கப்பட்ட அந்த மக்கள் சில குறைகளை என்னிடம் தெரிவித்தார்கள். கல்விச் சான்றிதழ்கள் (Education Certificates) தொலைந்து போய் விட்டதாகத் தெரிவித்தார்கள். ஆகவே யாருக்கெல்லாம் அத்தகைய கல்வி சான்றிதழ்கள் தொலைந்து போய் விட்டனவோ அவர்களுக்கெல்லாம் புதிய சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பலபேர் தங்களிடம் இருந்த ரேஷன் கார்டு தொலைந்து போய் விட்டதாகத் தெரிவித்தார்கள். அப்படி ரேஷன் கார்டு தொலைந்து போயிருந்தாலும் கவலைப்பட வேண்டாம். புதிய ரேஷன் கார்டு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். உங்களுக்கு வளமான ஒரு நல்ல எதிர்காலத்தை ஒரு புனர்வாழ்வை அமைத்துக் கொடுப்பது தமிழக அரசின் கடமை. அந்தக் கடமையை விரைவிலேயே முழுமையாக நிறைவேற்றுவோம் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தைரியமாக இருங்கள். நம்பிக்கையோடு இருங்கள். ஒரு நல்ல எதிர்காலம் உங்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையோடு இருங்கள். தமிழக அரசு மிக விரைந்து இந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டை இந்த ராட்சத அலைகள் தாக்கிய அதே நேரத்தில்தான் ஸ்ரீலங்கா, இந்தோனேசியா, தாய்லாந்து, அந்தமான் நிக்கோபார் தீவுகள் போன்ற இடங்களுக்கும் இதே விதமான தாக்குதல் நடைபெற்றது. கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்த இடங்களில் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்கும் முதற்கட்டப் பணி கூட இன்னும் சரிவர முடிவடையவில்லை. நிறைவேற்றப் படவில்லை. ஆனால் தமிழக அரசு மின்னல் வேகத்தில் முதற்கட்டப் பணிகளை முடித்து விட்டு உடனடி நிவாரண உதவிகள் வழங்குகின்ற 2ஆம் கட்டப் பணிகளை இன்றைக்கு போர்க்கால அடிப்படையில் தொடங்கி யுள்ளது. விரைவிலேயே நான் ஏற்கெனவே தெரிவித்தது போல் உங்களுக்கு ஒரு நல்ல மறுவாழ்வை அமைத்துக் கொடுக்கும் பணியையும் தமிழக அரசு செய்யும்.

ஆகவே, எதைப் பற்றியும் நீங்கள் கவலைப்படாமல் நம்பிக்கையோடு உங்கள் வாழ்க்கையைத் தொடருங்கள் என்று கூறி உங்களுக்கெல்லாம் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

இந்த மேடையில் அடையாளமாக 10 பேருக்கு இந்த நிவாரண உதவிகளை என் கரங்களாலே வழங்கி யிருக்கிறேன். மீதமுள்ள அனைவருக்கும் இங்குள்ள



அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இப்போதே உரிய உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்று தெரிவித்தார்கள்.

**நிவாரண உதவிகள்**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மின்சாரம் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் கண்காணிப்பின் கீழ் திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை செயலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், 3 கூடுதல் ஆட்சியர்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகள் 6 மண்டலங்களாகவும், 15 துணை கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு வீடுகளை இழந்த 26,740 நபர்களுக்கு ரூ.4,912 க்கான நிவாரண உதவிகளாக ரூ.13 கோடியே 13 இலட்சத்து 46 ஆயிரத்து 880–ம், தொழில் பாதிக்கப்பட்ட 13,564 நபர்களுக்கு ரூ.2,912/–க்கான நிவாரண உதவிகளாக ரூ.3 கோடியே 94 இலட்சத்து 98 ஆயிரத்து 368ம் வழங்கப்பட்டன. மரணமடைந்த 824 நபர்களில் வாரிசுதாரர்கள் கண்டறியப்பட்ட 747 நபர்கள் குடும்பங்களுக்கு ரூ. 7 கோடியே 47 இலட்சம் கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. காயமடைந்த அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக 7 நாட்களுக்கு மேல் சிகிச்சை பெற்றவர்கள் மற்றும் உடல் உறுப்புகளை இழந்தோர் எண்ணிக்கை 67 என கண்டறியப்பட்டு, இதுவரை 387 நபர்களுக்கு ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.19 இலட்சத்து 5 ஆயிரமும், 2 நபர்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதமும் சிகிச்சைக்காக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**மீட்புப்பணிகள்**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோரின் தீவிர கண்காணிப்பின்கீழ் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மீட்பு பணியில் 52 ஜே.சி.பி., 60 பொக்லைன் இயந்திரங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனை ஆம்புலன்ஸ்கள் ஈடுபடுத்தப்பட்டன. மீட்புப் பணியில் மாவட்ட அலுவலர்களுடன் கூடுதலாக 25 துணை ஆட்சியர்கள், 700 காவல்துறையினர், 400 தீயணைப்பு வீரர்கள், 150 மருத்துவர்கள், 250 சுகாதாரப் பணியாளர்கள், 230 வருவாய்த்துறை அலுவலர்கள், 40 வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். தொற்று நோய்கள் வராமல் தடுக்கவும், மருத்துவப் பணியாற்றவும் அனைத்து முகாம்களிலும் மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன.

கடலோர மக்கள் தங்களின் வாழ்க்கையைப் புத்துணர்வுடன் மீண்டும் தொடங்கும் வகையில் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களுக்கு இழப்பீடு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, மீன்பிடிச் சாதனங்கள் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு நிவாரண உதவிகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டன.

**மீன்பிடிச் சாதனங்கள் சீரமைப்பு**

சுனாமி பேரலையால் சேதமடைந்த 33 கிராமங்களைச் சர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடிச் சாதனங்களைச் சீரமைப்பதற்காக ரூ. 3 கோடியே 48 இலட்சத்து 31 ஆயிரம் பெறப்பட்டு இதுவரை 24 கிராமங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு ரூ. 2 கோடியே 71 இலட்சத்து 24 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.



**தற்காலிகக் குடியிருப்புகள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கும் அரசின் உத்தரவிற்கிணங்க குமரி மாவட்டத்தில் 34 பகுதிகளில் ரூ.6 கோடியே 95 இலட்சத்து 60 ஆயிரத்தில் 3,397 வீடுகள் கட்ட தீர்மானிக்கப்பட்டு 3,212 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். தற்போது 2 தற்காலிக நிவாரண முகாம்களில் 173 நபர்கள் மட்டுமே உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,596 குடும்ப அட்டைகள் தொலைந்து விட்டதாக மனுக்கள் பெறப்பட்டுத் தற்காலிக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

சான்றிதழ்களை இழந்து 10ஆவது வகுப்பு மதிப்பெண் கோரிய 220 மாணவர்களுக்கும், 12ஆவது வகுப்பு மதிப்பெண் கோரிய 113 மாணவர்களுக்கும் இரண்டாம்படி சான்றிதழ் வழங்க நடவடிக்கை

மேற்கொண்டு முதற்கட்டமாக 10ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் 113 மாணவர்களுக்கும், 12ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் 95 மாணவர்களுக்கும் வழங்கப் பட்டது.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொங்கலையொட்டி, புதுவாழ்வைத் தொடங்கும் வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 1 டிரங்க் பெட்டி, 1 குடம், 1 மண்ணெண்ணெய் ஸ்டவ் வழங்க உத்தரவிட்டார்கள். இத்திட்டத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம் அவர்கள் புத்தளம் அரசு பள்ளி நிவாரண முகாமில் தொடங்கி வைத்தார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளும் 17.1.2005 முதல் திறக்கப்பட்டுள்ளன.



பாதிக்கப்பட்ட அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மேல்நிலைப்பள்ளி மாணவ – மாணவிகளுக்கு இலவச மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேரலையால் பாதிக்கப்பட்டு ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தனியாக அரசு இல்லம் நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் பகுதியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்களால் 3.1.2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வில்லத்தில் 26 ஆதரவற்ற குழந்தைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 வயது முதல் 18 வயதிலான வளர் இளம் ஆதரவற்ற பெண்கள், 35 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற விதவைகள் மற்றும் பெண்களுக்கென தனியாக சேவை இல்லம் தக்கலை அருகே புலியூர் குறிச்சியில் தொடங்கப்பட்டு 18.1.2005 முதல் 11 ஆதரவற்ற பெண்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கயிறு தொழில் செய்வோர், பிறதொழில் செய்வோரது சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்காலிகக் குடியிருப்புகள் தரைத்தளத்தில் சலவைக்கல் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 34 குடியிருப்புகளிலும் 64 இடங்களில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன. நிரந்தரக் குடியிருப்புகள் அமைக்க அரசின் அறிவுரைக்கிணங்க இடம் தேர்வு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

### மின்இணைப்புகள் சீரமைப்பு

ஆழிப் பேரலை அழிவால் ரூ.1.61 கோடிக்கான மின் இணைப்பு இழப்பீடென மதிப்பிடப்பட்டு மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட 193 மின் விநியோக மின் மாற்றிகளும், 1,316 தெரு மின் விளக்குகளும், பள்ளிகளின் மின் இணைப்புகளும் சீரமைக்கப் பட்டுள்ளன. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்ட 27,294 மின் இணைப்புகளில் 25,277 இணைப்பு களும், 2,601 மின் கம்பங்களில் 2,581 மின் கம்பங்களும், 58 கி.மீ, மின் பாதையில் 57 கி.மீ. மின்பாதையும் சரி செய்யப்பட்டுள்ளன. அனைத்து தற்காலிகக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி செய்யப் பட்டுள்ளது.

பன்னாட்டு சுற்றுலாத்தலமான கன்னியா குமரியில் மீண்டும் பழைய நிலையைக் கொண்டு வரவும், பூம்புகார் படகு போக்குவரத்தை மீண்டும் தொடங்கவும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் புத்துணர்வுடன், தொழிலில் ஈடுபடத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

– கு. தாணப்பா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி.

# பெற்றோரை இழந்த பெண்களின் பெயரில் வைப்பு நிதி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (4.1.2005)

**26**.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் தாக்கப்பட்டு பாதிப்படைந்த கடலோரப் பகுதிகளில் தங்கள் பெற்றோரை இழந்து நிராதரவாக நிற்கும் குழந்தைகளை அரசே தத்தெடுத்து அவர்களைப் பாதுகாக்கும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். மேலும், அவர்களது பாதுகாப்பான எதிர்கால வாழ்வைக் கருதி, அவர்களின் பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் அவர்களின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டு, 18 வயது நிரம்பும் போது அதன் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் நான் 3.1.2005 அன்று அறிவித்திருந்தேன்.

இவ்வாறு நிராதரவாக்கப்பட்டு அனாதையாக நிற்கின்ற குழந்தைகள் ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பதாக என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, அத்தகைய அனைத்துக் குழந்தைகளின் எதிர்காலத்தையும் உறுதி செய்யும் வகையில் ஒரு குடும்பத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் ஒன்றுக்கு மேல் இருப்பார்களேயானால், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

மேலும், சுனாமி பேரலைகளால் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்ற 14 வயது முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்கள் சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும், அவர்கள் பெயரிலும், பெற்றோர் இறந்தமைக்காக வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை 2 இலட்சம் ரூபாய், பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் சார்பில் மேலும் 2 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு 18 வயது நிரம்பும் போது சொந்தத் தொழில் தொடங்கவோ அல்லது உயர் கல்வி கற்கவோ பயன் அளிக்கும் வகையில் இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை வழங்கப்படும் என்றும் 3.1.2005 அன்று நான் அறிவித்திருந்தேன். இத்தகையோரும் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருப்பார்களேயானால் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

சுனாமி பேரலைகளின் பாதிப்பால் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களும் தங்கள் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்றனர். இவர்களுக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்கால வாழ்க்கையை அளிக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். எனவே, இத்தகைய 18 வயதிற்கு மேற்பட்ட நிராதரவான பெண்கள் சேவை இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். இவர்களும் தங்களது சொந்த காலில் நிற்க வழிவகை செய்யும் வகையில் இவர்களுக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், இவ்வாறு சேவை இல்லங்களில் சேர்க்கப்படுபவர்கள் உயர்கல்வி கற்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதன்மூலம் அவர்கள் தங்களுக்கு ஏற்ற சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு உதவிடும் வகையில் அவர்கள் பெற்றோரை இழந்தமைக்காக வழங்கப்படுகின்ற 3 இலட்சம் ரூபாயை வைப்பு நிதியாக முதலீடு செய்திட நான் உத்தரவிட்டுள்ளேன். அதே குடும்பத்தில் இத்தகைய பெண்கள் ஒருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்யும் வகையில் நிதி உதவி அளிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். உயர்கல்வி அல்லது தொழில்நுட்பப் பயிற்சியை முடித்த பின்னர் புதிய தொழில் தொடங்கி தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதுவாக இந்த முதலீட்டின் முதிர்வுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும். ✶

# சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில்

# தமிழக அரசின் மின்னல்வேக நிவாரணப் பணிகள்



தமிழகத்தில் 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால், கடலூர் மாவட்டத்தில் 57 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையில் உள்ள 51 கடலோரக் கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

கடலோரக் கிராமங்களில் உள்ள மீனவர்களின் வீடுகள், உடைமைகள், படகுகள், விசைப் படகுகள், மீன்பிடிச் சாதனங்கள், வலைகள் பெரும் சேதமடைந்தன. 26 ஆம் தேதியன்று இறந்தவர்களின் சடலங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இச் சடலங்கள் உறவினர்களின் ஒப்புதலோடு ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இதே போன்று சடலங்கள், பரங்கிப்பேட்டை பகுதியில் ஒரே இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. காயமடைந் தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வருகை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 27.12.2004 அன்று கடலூர் வருகை தந்தார்கள். சுனாமியால் உயிரிழந்த குடும்பத்தின் வாரிசுதாரர் களுக்குத் தலா ரூ1 இலட்சம் வீதம் நிவாரண உதவித் தொகை வழங்கினார்கள். தாழங்குடா, தேவனாம் பட்டினம், சிங்காரத்தோப்பு, சோனங்குப்பம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிவாரண உதவி வழங்கினார்கள்.

கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் பலர் பலியாகி உள்ளனர். மீனவர்களின் வலைகள், படகுகள், கட்டுமரங்களும் சேதமடைந்தன. இவர்கள் வாழும் வழியை இழந்து பரிதாபத்திற்கு உள்ளாகியுள்ளனர்.



இவர்கள், தங்களுடைய வாழ்க்கையை மீண்டும் வளமாக்கிக் கொள்ள தமிழக அரசு அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இதன் அடிப்படையில், மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.12.2004 அன்று இரண்டாவது முறையாக கடலூருக்கு வருகை தந்தார்கள். கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு புடவை, ஒரு வேஷ்டி, 2 போர்வை , தற்காலிகக் குடியிருப்பு அமைத்துக் கொள்ள ரூ.2,000, சமையல் பொருட்கள் வாங்கிட ரூ.1,000, ஸ்டவ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட ரூ.1,000 என மொத்தத்தில் ரூ.5,000–க்கு தொகுப்பு நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிலையில் கடல் கொந்தளிப்பின் கோர நிலையை அறிந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், கடலூர் மாவட்டத்திற்கு, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி ஆகியோர் விரைந்து வந்து, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். சடலங்களை நல்லடக்கம் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோர் கடலூர் பகுதியிலும், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பரங்கிப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பாதிக்கப்பட்ட பகுதிகளான சின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம், சாமியார்பேட்டை ஆகிய இடங்களில் முகாமிட்டனர்.

**நிவாரணப் பணியில் இராணுவம்.**

மாவட்ட நிருவாகத்தினால் வெலிங்டன் ரெஜிமெண்ட்டிலிருந்து இராணுவ வீரர்கள் வரவழைக்கப் பட்டனர். இவர்கள், தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரைகோரி,



சின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம் ஆகிய இடங்களில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தனர். கட்டட இடிபாடுகளை அகற்றினர். சாலைகளைச் சீரமைத்தனர். சுற்றுப்புறப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தினர். குப்பைக் கூளங்களை அகற்றி சுகாதாரத்தை மேம்படுத்தினர். சிதறுண்டு கிடந்த பொதுமக்களுடைய பொருட்களை மீட்டுக் கொடுத்தனர். பாதுகாப்புப் பணியினை மேற் கொண்டதோடு, மீட்புப் பணியினையும் சிறப்பாகச் செய்தனர்.

தாழங்குடா, தேவனாம்பட்டினம் பகுதிகளில், பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய படகு என்ஜின்களைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். ஏறத்தாழ 120 என்ஜின்களுக்கும் மேலாக பழுதுநீக்கம் செய்து மீனவர்களிடம் வழங்கினர். இதனால், மீனவர்கள் என்ஜின்களைத் தம் பொறுப்பில் பழுது பார்க்கும் செலவு மிச்சமானது. இந்தப் பணியில், இவர்களுக்குத் துணையாக அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களும், அரசு போக்குவரத்துக் கழக தொழில் நுட்ப வல்லுநர்களும் செயல்பட்டனர்.

### நிவாரண பாதுகாப்பு மையங்கள்

பாதிக்கப்பட்ட மக்கள் கடலூர், முதுநகர் மற்றும் பரங்கிப்பேட்டை, கிள்ளை, புதுப்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட 38 நிவாரண பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். இம்மையங்களில் சுமார் 25,000 நபர்கள் தங்கியிருந்தனர். இவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வேளைதோறும் வழங்கப்பட்டன. முதியோர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆவின் மூலம் பால் மற்றும் பால் பவுடர் வழங்கப்பட்டது. பின்னர், காய்ச்சிய பால் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் ஆவின் மூலம் விநியோகம் செய்யப்பட்டது. யுனிசெப் நிறுவனம் மூலம் குடிநீர் வழங்கிட 200 சின்டெக்ஸ் டேங்குகள் பாதுகாப்பு மையம் மற்றும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டன.

### மருத்துவ முகாம்கள்

ஒவ்வொரு நிவாரணப் பாதுகாப்பு மையத்திலும், மருத்துவர்கள் குழு முகாமிட்டது. இம்முகாம்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியோர்களை அவ்வப்போது பரிசோதனை செய்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. தொற்று நோய் பரவா வண்ணம் தடுப்பு ஊசிகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பு ஊசியும், போலியோ சொட்டு மருந்தும், வைட்டமின் ஏ திரவமும் வழங்கப்பட்டது. இதுவரை 66 ஆயிரம் நபர்களுக்கு இம்மருத்துவக் குழு மூலம் சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் முகாம்களில் 28,750 கிலோ பிளிச்சிங் பவுடர், 22,350 கிலோ சுண்ணாம்பு மற்றும் 2,625 லிட்டர் பினாயிலும் தெளிக்கப்பட்டன.

## நிவாரணப் பணி மேற்கொள்ள குழு அமைப்பு

நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் 22 குழுக்களை அமைத்தார்.

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்வதற்கும், பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின் விநியோகம், சுகாதார வசதி, தங்கும் இடவசதி ஆகியவற்றை மேற்கொள்ள இக்குழு அமைக்கப்பட்டது.

சேத மதிப்பீடு, நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றை மேற்கொண்டிட, மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் வழங்குதல், சிகிச்சை அளித்தல், மருத்துவக் குழுக்களைக் கண்காணித்தல் ஆகியவற்றிற்குத் துணை இயக்குநர் (சுகாதாரம்) தலைமையிலான குழுவும்,

பாதுகாப்பு நிவாரண மையம் மற்றும் கிராமங்களில் பிளிச்சிங் பவுடர், குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றை மேற்கொண்டுள்ள நகராட்சி ஆணையர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களைக் கொண்ட குழுவும்,

உயிரிழந்த கால்நடைகளைப் பற்றிய விவரங்கள் சேகரித்தல் மற்றும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல் ஆகியப் பணிகளை மேற்கொள்ள கால்நடைத்துறை இணை இயக்குநர் தலைமையிலான குழுவும்,

பாதிக்கப்பட்ட மீனவக் கிராமங்கள், காணாமல் போன மற்றும் இறந்துபோன மீனவர்கள் விவரம், மீன்பிடிச் சாதனங்கள், படகுகள், கட்டுமரங்கள், விவரங்கள் சேகரிக்க மீனவளத்துறை உதவி இயக்குநர் தலைமையிலான குழுவும்,

வீடுகள் சேதம், உயிர்கள் சேதம் குறித்த விவரங்களைச் சேகரித்து நிவாரணங்கள் வழங்க வட்டாட்சியர்கள் தலைமையிலான குழுவும்,

நிவாரணப் பணிகள் விரைவாக நடைபெற்றிட அலுவலர்கள், களப்பணியாளர்களுக்கு வாகன வசதி செய்து கொடுத்திட அந்தந்த அதிகாரிகள் தலைமையிலான குழுவும்,

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மின் விநியோகம், தெரு விளக்குகள் எரிய வைத்தல் ஆகிய பணிகள் மேற்கொண்டிட மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் தலைமையிலான குழுவும்,

பாதுகாப்பான இடத்தில், குடியிருப்பு அமைத்திட தொடர்புடைய பெரியவர்களிடம் ஆலோசனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள கோட்டாட்சியர் தலைமை யிலான குழுவும்,





பாதுகாப்பு மையங்களின் பணிகள் மேற்கொள்ளுதல், காணாமல் போனவர்களைத் தேடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டிட காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவும்,

சேதமடைந்த குடிசைகளைக் கணக்கிட்டு நிவாரண உதவிகள் வழங்கிட மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழுவும்,

நோய் பரவும் அபாயம் உள்ள இடங்களில் வசிப்பவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், காலரா தடுப்பு மருந்துகள் வழங்கிட துணை இயக்குநர் தலைமையிலான குழுவும்,

அந்தந்தப் பகுதியில் சேதமடைந்த குடிசைகள் மற்றும் அமைத்து தர வேண்டியக் குடியிருப்பு விவரங்கள் சேகரித்து நிவாரணப் பணிகள் மேற்கொண்டிட கோட்டாட்சியர், வட்டாட்சியர் தலைமையிலான குழுவும்,

38 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளவர்களுக்கு உணவு மற்றும் குடி தண்ணீர் விநியோகம் செய்திட மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையிலான குழுவும்,

நிவாரணப் பணிகளை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ள தனிவட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தலைமையிலான குழுவும் என தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் போர்க்கால வேகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

**படகு மீட்புப் பணிகள்**

கடலோரம் இருந்த படகுகள், ஆற்றில் இருந்த விசைப் படகுகள், கடல் அலைகளினால் 400–500 மீட்டர் வரை அடித்துச் செல்லப்பட்டன. இவைகள் 20 டன் மற்றும் 80 டன் திறன் கொண்ட பளு தூக்கும் இயந்திரங்கள் மூலமாக லாரிகளில் ஏற்றப்பட்டு கரையோரங்களில் சேர்க்கப்பட்டன. இதற்காக, சென்னை துறைமுகக் கழகத்திலிருந்தும், என்.எல். சியிலிருந்தும் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டன.

கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 617 நபர்கள் இறந்துள்ளனர். இதில், இதுவரை 566 இறந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.5.66 கோடி நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 11,578 நபர்களுக்கு தலா ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 6,871 நபர்களுக்குத் தலா ரூ.2,000 தொகுப்பு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 517.17 எக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 15,200 வீடுகள் சேதமடைந் துள்ளன. கால் நடைகள் 1,068 உயிரிழந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட 38 பாதுகாப்பு மையங்களில், தற்போது 2 மையங்கள் மட்டும் செயல்பட்டு வருகிறது. இதில் 900 நபர்கள் இருந்து வருகின்றனர்.

## கட்டுமரங்கள், வலைகள் சேதம்

5,250 கட்டுமரங்கள் முழுமையாகவும், 1,048 கட்டுமரங்கள் பகுதியாகவும், இரண்டு மரப்படகுகள் முழுமையாகவும், 175 விசைப்படகுகள் முழுமையாகவும், 74 விசைப்படகுகள் பகுதியாகவும், ஐ.பி. மற்றும் எஸ்.டி.பி. விசைப் படகுகள் முழுமையாகவும், 361 பகுதியாகவும் சேதமுற்றுள்ளன. அதே போன்று 14,285 அனைத்து வகையான வலைகளும் சேதமடைந்துள்ளன.

சேதமுற்ற கட்டுமரங்களுக்குத் தலா ரூ.5,000மும், வலைகளுக்குத் தலா ரூ.10,000மும் அரசு நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 4,970 மீனவர்களுக்கு ரூ.5.35 கோடி தொகை நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படி பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய நிவாரணப் பொருட்களை வைத்துக் கொள்ள, நஞ்சலிங்கம்பேட்டை நாயக்கர் பேட்டையில் பொங்கல் அன்று ரூ.600 மதிப்பில் ஒரு டிரங்க்பெட்டி மற்றும் ஒரு சில்வர் குடம், ஒரு ஸ்டவ் ஆகியவற்றை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கித் தொடங்கி வைத்தார்.



## அமைச்சர்கள் அளித்த நிவாரண உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை தொடர்ந்து மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.எஸ்.இராமச்சந்திரன் ஆகியோர் தாழங்குடா, தேவனாம்பட்டினம், சோனாங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரை கோரி, சாமியார்பேட்டை, புதுக்குப்பம், புதுப்பேட்டை, சின்னூர், கிள்ளை உட்பட பல்வேறு கிராமங்களுக்கும் சென்று அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

## அனாதை இல்லம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கடலூர், புதுப்பாளையத்தில் அரசு சார்பில் அனாதை இல்லத்தை, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

சுனாமி கடல் கொந்தளிப்பால், சின்ன வாய்க்கால், பில்லுமேடு, எம்.ஜி.ஆர்.திட்டு மற்றும் தேவனாம்பட்டினம் ஆகிய கிராமங்கள் பாதிக்கப்பட்டு, தாய் தந்தையரை இழந்த 21 குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாய் அல்லது தந்தையை இழந்த 8 குழந்தைகள் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை அனாதை குழந்தைகள் 139 பேர் உள்ளனர். இவர்களுக்கு நாள்தோறும், மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. காலை, மதியம், இரவு மூன்று வேளையும் முறையே சிற்றுண்டி, சாப்பாடு, சிற்றுண்டி, பால், பிஸ்கட் வழங்கப்படுகிறது. விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தனியார் மூலம்



மொத்தம் 100 கைப்பம்புகள் ரூ.7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**சமுதாய சமையல் கூடம்**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தாழங்குடா, தேவனாம்பட்டினம், புதுப்பேட்டை, சாமியார்பேட்டை, குமாரப்பேட்டை, புதுக்குப்பம் போன்ற கிராமங்களில் 24 இடங்களில் சமுதாய சமையல் கூடம் அமைக்கப்பட்டு அரசின் சார்பில் உணவுகள், சமையல் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் குளிர்சாதனப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

**தற்காலிக வீடுகள்**

பாதிக்கப்பட்ட வீடிழந்த மீனவர்களுக்கு அரசு சார்பில் சின்னூர், கன்னியக்கோயில், புதுப்பேட்டை, புதுக்குப்பம், முழுக்குத்துறை, சிங்காரத்தோப்பு, தாழங்குடா, தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் 4,400 தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிவுற்று அவர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்பட உள்ளது.

**குடிநீர் வசதிகள்**

சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கடலோரக் கிராமங்களில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. இவர்களுக்குக் குடிநீர் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தாழங்குடாவில் 10 கைப்பம்புகளும், ராசாப்பேட்டையில் 5, சொத்தக்குப்பத்தில் 5, சித்திரைப்பேட்டையில் 3, தம்னாம்பேட்டையில் 4, நாயக்கர்பேட்டையில் 3, நஞ்சலிங்கம்பேட்டையில் 3, பெரியக்குப்பத்தில் 4, பேட்டோடையில் 3, அய்யம்பேட்டையில் 3, ரெட்டியார் பேட்டையில் 3, அண்ணப்பன் பேட்டையில் 3, மடவாப்பள்ளத்தில் 4, குமாரப்பேட்டையில் 5, சாமியார்பேட்டையில் 10, வேளங்கியரான்பேட்டையில் 2, புதுக்குப்பத்தில் 7, புதுப்பேட்டையில் 7, சின்னூர் வடக்கில் 5, சின்னூர் தெற்கில் 6, முடசலோடை வடக்கில் 5 ஆக

**கொசு வலை**

தற்காலிகக் குடியிருப்புகளில் தங்கியுள்ள மக்களுக்குக் கொசுக்கள் மூலம் மலேரியா போன்ற நோய்கள் பரவா வண்ணம் தடுக்க கொசு வலைகளை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், அரசு சார்பில் வழங்கினார். இந்த வகையில் 2,500 தற்காலிகக் குடியிருப்புகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் நைலான் கொசு வலைகள் வழங்கப்பட்டன.

**தொண்டு நிறுவனங்கள்**

பாதிக்கப்பட்டவர்களின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரின் பங்கும் அளப்பரியதாக இருந்தது. டான்பாக், வேர்ல்டு விஷன், சுமனஹள்ளி மருத்துவ நிறுவனம், பாரத் சேவா சங்கம், ஆக்ஸ்பாம் பிராஜக்ட் ஹோப், டாக்ரோஸ், ஆர்க்காட் லூத்திரன் சர்ச், சாது வாஸ்வாணி மிஷன் (பூனா) மெட்ரோ, சென்னை போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரணப் பணிகளை மேற்கொண்டு கடும்பணி ஆற்றினார்கள்.

**– என். பாலையா,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர் மாவட்டம்.

## குஜராத் மாநிலம் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 28.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், குஜராத் மாநிலத்தின் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. அசோக்பாய் சந்துலால் பட் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, குஜராத் மாநில அரசின் சார்பாக ஐந்து கோடி ரூபாய் நன்கொடைக்கான காசோலையை வழங்கினார்.

மேலும், கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு வழங்குவதற்காக 3.2 டன் எடையுள்ள ரொட்டி, பிஸ்கட், பால் பவுடர் போன்ற உணவுப் பொருட்கள் குஜராத் மாநில அரசால் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், குஜராத் மாநிலத்தின் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. அசோக்பாய் சந்துலால் பட் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

தமிழகம் சந்தித்துள்ள வரலாறு காணாத பேரிழப்புக்குக் குஜராத் மாநில அரசு சார்பில் தக்க



சமயத்தில் செய்யப்பட்டுள்ள இந்த உதவிக்குத் தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு குஜராத் சட்ட அமைச்சரிடம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொலைபேசி மூலமாக மாண்புமிகு குஜராத் மாநில முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்களுடன் தொடர்பு கொண்டு, கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் துயரில் பங்கு கொண்டு, அவர்களுக்கு உதவிட 5 கோடி ரூபாய் நிதி உதவி, 3.2 டன் ரொட்டி, பிஸ்கட் மற்றும் பால் பவுடர் முதலான உணவுப் பொருட்களும் வழங்கியமைக்காகத் தமது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

## ஹரியானா மாநிலம் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஹரியானா மாநிலத்தின் நிதியமைச்சர் திரு. சம்பத் சிங் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் பாதிக்கப் பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஹரியான மாநிலத்தின் சார்பாக மூன்று கோடி ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஹரியானா மாநில நிதியமைச்சர் திரு. சம்பத் சிங் அவர்கள் நேரில் வழங்கினார்.

சுனாமி பேரலைகளால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தகவல் அறிந்த மாண்புமிகு ஹரியான மாநில முதலமைச்சர் திரு. ஓம் பிரகாஷ் சௌதாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் 29.12.2004 அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக, ஹரியானா மாநில அரசின் சார்பாக 3 கோடி ரூபாய் நன்கொடையாக வழங்கப்படும் என்று தெரிவித்தார். இந்த நன்கொடைக்கான காசோலையை,

தமிழகம் சந்தித்துள்ள பேரிழப்புக்கு ஹரியானா மாநில அரசின் சார்பில் தக்க சமயத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த நன்கொடைக்காக ஹரியானா மாநில அரசுக்கும், மாநில முதலமைச்சர் மாண்புமிகு ஓம் பிரகாஷ் சௌதாலா அவர்களுக்கும், தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது ஹரியானா மாநில நிதி ஆணையாளரும், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளருமான திரு. ஆர்.என். பிராஷர் மற்றும் ஹரியானா ரோட்வேஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. தரம் பால் ஆகியோர் உடனிருந்தனர்.

◆ ◆ ◆



# போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 25–12–2004

"உழைக்கும் கைகளே உலகை உருவாக்கும் கைகள்" என்பதால் உழைக்கும் மக்களின் நலன்களைப் பேணுவதற்கு எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறது எனது அரசு. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாகப் பணியாற்ற ஊக்கமளிக்கவும் நான் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன்.

எனது கடந்த ஆட்சிக் காலத்தில், அதாவது 1991–லிருந்து 1996 வரை தொழிலாளர் நலன் பேணும் பல்வேறுத் திட்டங்களை நான் கொண்டு வந்தேன். ஆனால், 2001–ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை மேம்படுத்த எந்தவொரு புதிய நடவடிக்கையையும் எடுக்க முடியாத அளவிற்குத் தமிழக அரசு மற்றும் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலைமையை அதல பாதாளத்தில் முந்தைய தி.மு.க. அரசு விட்டுச் சென்றிருந்தது. அதனால், பல்வேறு அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களது மாதாந்திர சம்பளத்தை அளிப்பதே ஒரு பெரும் சவாலாக அமைந்துவிட்டது. பல்வேறு நிதி மற்றும் நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட காரணத்தால் அரசின் நிதி நிலைமை மட்டும் அல்லாமல் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலைமையும் ஓரளவிற்குச் சீர் அடைந்தது. இவ்வாறு நிதி நிலைமை சீரடைந்த உடனேயே, அவ்வாறு சீரடைய உதவி புரிந்த ஊழியர்களைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குப் பல்வேறுச் சலுகைகளை நான் அளித்தேன்.

அண்மையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 250 வீதம் 1.9.2003 முதல் முன் தேதியிட்டு வழங்க நான் ஆணையிட்டேன். அதே போன்று, இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின் போது வழக்கமாக வழங்கப்படும் 8.33 சதவிகிதம் போனஸுடன் 1.67 சதவிகித கருணைத் தொகையையும் சேர்த்து, மொத்தம் 10 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையை வழங்கினேன் என்பதையும் இங்கு நினைவு கூர விரும்புகிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்த முடியாது என்று தெரிந்திருந்த போதிலும், வெற்று அறிவிப்பில் பாராட்டுப் பெறும் எண்ணத்துடன் முந்தைய தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தை அறிவித்தது. இத்தகைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது எனது தலைமையிலான அரசுக்கு மாபெரும் சவாலாகவும், சங்கடமாகவும் அமைந்தது. தொழிலாளர்களின் நலனைக் கருதி, எவ்வகையிலேனும் ஓய்வூதியத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் ஓய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் (Pension Fund Trust) நிதிப் பரிமாற்றங்களுக்கு வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி விலக்கு வழங்க வேண்டும் என்று மத்தியஅரசை 25.9.2001 அன்று தமிழக அரசு கேட்டுக் கொண்டது. ஆனால்,அப்போது மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசில் அங்கம் வகித்த தி.மு.க. பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் இது பற்றி ஒரு சிறிதும் கவனம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக, எனது அரசின் கோரிக்கையை ஏற்காமல் வருமான வரி விலக்கு அளிக்கப்பட மாட்டாது என்று திட்டவட்டமாக

மத்திய அரசின் நிதி அமைச்சகம் 13.8.2003 அன்று பதில் அளித்தது. இதன் வாயிலாக, அறிவிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் எந்த வகையிலும் செயல்படுத்த முடியாத அபாயகரமான கட்டத்திற்குத் தள்ளப்பட்டது. இதே காலகட்டத்தில், மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி வகுத்த பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் ஓய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் வைப்பு நிதிக்குப் பெறக்கூடிய வட்டி விகிதம் கணிசமாகக் குறைக்கப் பட்டது. ஆகவே, ஆழ்ந்த சிந்தனையும் தொலைநோக்குப் பார்வையும் இன்றி, போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் நீண்டகால நலனை ஒரு சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், ஆரவாரமான அறிவிப்புக் காகவே உருவாக்கப்பட்ட அந்தஅரைகுறைத் திட்டம் செயல்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர் களின் ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை எடுத்துக் கூறி, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் நலன் காப்பது தொடர்பாக ஒரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் 24.12.2004 அன்று கடிதம் ஒன்று எழுதி உள்ளேன்.

அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் நலன் எக்காலத்திலும் காக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். எனவே, முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட, தொடர்ந்து நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை, செயல்படுத்தும் வகையில் அதன் அடிப்படையை உறுதிப்படுத்தி, போக்குவரத்துக் கழக தொழிலாளர் களின் நலனைக் காக்கும்வகையில் தேவையான நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். இதற்காகத் தான், ஓய்வூதியப் பொறுப்பாட்சி நிதியத்தின் நிதிப் பரிமாற்றங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளேன். இந்த வரி விலக்கைக் கட்டாயமாக மத்திய அரசு வழங்க வேண்டும். இந்த அடிப்படையில் ஒய்வு பெற்ற அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய ஓய்வூதியப் பலன்களைத் தொடர்ந்து வழங்க நான் ஆணையிட்டு உள்ளேன்.

பணி ஓய்வுக்குப் பிறகும் தொழிலாளர்களின் வளமான வாழ்க்கைக்கு உறுதுணை புரிவதில் எனது தலைமையிலான அரசு முன் நிற்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு மேலும் சிறப்பான சேவையை அளிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ★



திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு 15.1.2005 அன்று சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.




# கடலோரத்தில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ.5,000 கோடி வழங்க வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
**உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிக் குழுவிடம் வலியுறுத்தல்**

தமிழ்நாட்டில் 26.12.2004 அன்று சுனாமி அலைகள் ஏற்படுத்திய பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆலோசிக்க உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் மைக்கேல் எப் கார்ட்டரும், ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் லூயிஸ் டி ஜாங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 18.1.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், சந்தித்துப் பேசினார்கள்.

சுனாமி அலைகள் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடற்கரையையும் கடுமையாகத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்திவிட்டது. அதனால் மிகப்பெரிய அளவில் மறுவாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி அதிகாரிகளிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இந்தப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர் மீனவர்கள்தான். இவர்கள் வாழ்க்கை ஆதாரங்களான படகுகள், மீன்பிடி வலைகளை இழந்ததுடன் வீடுகளையும் இந்தப் பேரழிவில் இழந்துவிட்டுத் தவிக்கின்றனர்.

போதிய அளவு தாராளமான திட்டத்தின் மூலம்தான் இவர்களுக்கு முழுமையான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வினை உறுதிப்படுத்த முடியும். பாதிக்கப்பட்ட மீனவ மக்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பான இடங்களில் அவர்களுக்கு நிரந்தரமான மறுவாழ்விற்கான வீடுகளைக் கட்டிக்கொடுக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காகக் கடற்கரையில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் இடங்கள் அடையாளம் காணப்பட்டு வருகிறது. விரைவில் நிரந்தரமான வீடுகளைக் கட்டும் பணி தொடங்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்கள்.

தமிழக அரசின் இந்தத் திட்டத்தை வரவேற்ற வங்கி அதிகாரிகள் மிக மோசமாகப் பேரழிவு ஏற்பட்டுள்ளதால் இவ்வளவு பெரியத் திட்டத்தை நிறைவேற்ற தனிச் சலுகைகள் கொண்ட கடனுதவி தேவைப்படுகிறது என்பதையும் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், தமிழக கடற்கரை முழுவதையும் பாதுகாக்கத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தத் திட்டம் கடற்கரையில் மாங்குரோவ் காடுகளையும், மற்ற மரங்களையும் வளர்க்கும் திட்டம் மற்றும் குறிப்பிட்ட இடங்களில் கிரையான்ஸ் போடுவது, தடுப்புச் சுவர் அமைப்பது உள்ளிட்ட திட்டங்களைக் கொண்டதாக பெரிய செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட திட்டத்திற்கு ரூ.5,000 கோடி செலவாகும். இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தத் துவங்கினால் மட்டுமே பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் நம்பிக்கை ஏற்படுத்த முடியும். தமிழக அரசின் இந்த கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு உலக வங்கியும், ஆசிய வங்கியும் உதவ முன் வர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

சுனாமி அலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் நாகை மாவட்டம். இந்த மாவட்டம் காவேரி ஆற்றின் கழிமுகப் பகுதியாகும். சராசரி கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள இந்த மாவட்டம் புயல் காற்றுக்கு உள்ளாகும் பகுதி. இந்த மாவட்டத்தின் கழிவுநீர் அகற்றும் பணி பெரும் சவாலான பணியாக உள்ளது என்று எடுத்துக் கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியும், ஆசிய வங்கியும் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க பன்னாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் மிகப்பெரிய கழிவுநீர் அகற்றும் திட்டத்தை அமைக்க வேண்டியுள்ளது பற்றி வலியுறுத்தினார்கள். இந்தத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

கடலோர மீனவர்களின் மறுவாழ்வுத் திட்டம் அவர்கள் இழந்தவற்றை மீட்டுக்கொடுத்து மீண்டும் அவர்கள் பழைய இயல்பு நிலைக்குத் திரும்ப உதவ வேண்டும் என்பதற்கும் மேலாக அவர்களின் மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்த உதவுவதுடன் அதிக மீன் பிடிக்க உதவுவதற்கும் அதற்கானச் சந்தையை விரிவுபடுத்த உதவுவதாகவும் அமைய வேண்டும். அதன் மூலம் கடற்கரை பொருளாதாரத்தையே மேம்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள். கடற்கரை பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவதாக வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

உலக வங்கியின் இந்திய இயக்குநரும், ஆசிய வங்கியின் இந்திய இயக்குநரும் கடந்த ஜனவரி 17, 18 தேதிகளில் சுனாமி பாதித்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு வந்ததாகக் கூறினார்கள். அப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதல் கட்டமாகச் சடலங்களை மீட்பது, பாதிக்கப்பட்டவர்களைத் தங்க வைப்பது, அவர்களுக்கு உடனடி உதவிகள் செய்வது, காணாமல் போனவர்களைத் தேடுவது, உடனடி மருத்துவ சிகிச்சைகள் அளித்தது, இரண்டாம் கட்டமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளித்தது ஆகிய பணிகள் திட்டமிட்டு மிகச் சரியாக பாராட்டத்தக்க வகையில் நடந்துள்ளது. குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மீண்டும் வாழ்க்கையைத் தொடங்க அவர்களுக்கு தற்காலிகக் குடியிருப்புகள் போர்க்கால அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த நடவடிக்கைகள் மிகவும் பாராட்டத்தக்க வகையில் உள்ளது. ஏற்பட்டுள்ள பேரழிவை நாங்கள் நேரில் சென்று கண்டோம். இந்தப் பேரழிவில் இருந்து மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தி கொடுக்கவும், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உலக வங்கியும், ஆசிய வங்கியும் தேவையான எல்லா உதவிகளையும் செய்யும் என்றும் இயக்குநர்கள் உறுதியளித்தனர்.

மேலும் இப்போது பார்வையிட்டது முதல் கட்ட ஆய்வுப் பணிதான். அடுத்தகட்டமாக ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் புனரமைப்பு தேவைக் குறித்து தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வை உலக வங்கி, ஆசிய வங்கி, ஐக்கிய நாடுகள் அமைப்பும் இணைந்து மேற்கொள்ளும்.

அதன்பின் இந்திய அரசு மற்றும் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்படும். இந்த வகையில் தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்திற்கு உலக வங்கி முழு ஆதரவு அளிக்கும். குறிப்பாக வாழ்க்கை ஆதாரங்களை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது, துறைமுகம், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை மீண்டும் மேம்படுத்தி உருவாக்குவது, கடற்கரை பாதுகாப்புத் திட்டமான மாங்குரோவ் காடுகள், மரங்கள் வளர்ப்பது, கடற்கரையில் தடுப்புச் சுவர் அமைத்தல், கிரையான்கள் அமைத்தல் மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை உருவாக்குவது ஆகிய திட்டங்களுக்கு உதவ முடியும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதி அளித்தனர்.

தமிழ்நாடு வறுமை ஒழிப்புத் திட்டம், நகர்ப்புற நீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டம், கிராமப்புற மேம்பாடு திட்டம், தமிழக நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்பு திட்டம் III, மூன்றாவது சென்னை குடிநீர் விநியோகத் திட்டம் போன்ற நிலுவையில் உள்ள திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக வங்கி இந்திய இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மேற்கண்ட திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்படும் என்று உலக வங்கி இயக்குநர் உறுதி அளித்தார். தமிழகத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மேம்படுத்தும் வகையில் புதிய திட்டங்களை ஆசிய வளர்ச்சி வங்கி மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று உடனடியாகப் பரிசீலிப்பதாக வங்கி அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

இந்தச் சந்திப்பில் உலக வங்கியின் பொருளாதார நிபுணர் மோகன் நாகராஜன், ஷாமல் சர்கார், ஆசிய வளர்ச்சி வங்கி அலெக்ஸ் ஜார்கென்சன் ஆகியோரும் பங்கேற்றனர். மாண்புமிகு தமிழக பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மை செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை ஆணையர் திரு. சந்தானம், இ.ஆ.ப., மற்றும் அதிகாரிகளும் உடன் இருந்தனர். ◆

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட

# சென்னை மாவட்டப் பகுதிகளில் விரைந்த நிவாரணப் பணிகள்



இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா தீவின் மையப்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் எதிரொலியாக தமிழ்நாட்டில் 26.12.2004 அன்று கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கடலோரப்பகுதிகளில் ஏற்பட்ட பேரலைகளின் அதிபயங்கரத்தாலும் எதிர்பார்க்காத சூழ்நிலையில் திடீரென்று பாய்ந்த இயற்கைச் சீற்றத்தைக் கண்டு ஒட்டு மொத்தத் தமிழகமும் அதிர்ச்சியில் உறைந்து போயின.

ஆசியாவிலேயே மிக நீண்ட கடற்கரை, உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை என பெயரும் புகழும் பெற்ற சென்னை மெரினா, இந்தக் கொந்தளிப்பால் சின்னாபின்னமானது. தென்சென்னையில் மெரினா, அயோத்திக்குப்பம், பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம், திருவான்மியூர் பகுதிகளிலும், வடசென்னையில் காசிமேடு, ராயபுரம், திருவொற்றியூர் மீன்பிடித் துறைமுகம், எண்ணூர் பகுதிகளிலும் 39 அடிக்கும் அதிக உயரத்திற்கு அலை எழும்பியது. இதில் தென் சென்னை சீனிவாசபுரத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான குடிசைகளும் கடற்கரையை ஒட்டியுள்ள குடிசை மாற்று வாரியம் மற்றும் குடிசைகளில் வசித்தவர்கள் இந்த அலையில் சிக்கிப் பலியானார்கள். இச்சம்பவம் நடந்து முடிந்த அரைமணி நேரத்தில் கடற்கரையெங்கும் சடலங்களாகக் காணப்பட்டது. சம்பவ இடத்துக்கு தீயணைப்புத் துறையினரும் காவல்துறையினரும் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டில் கடல்கொந்தளிப்பால் கடல் நீர் புகுந்து சேதம் ஏற்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரில் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாதிப்பு ஏற்பட்ட சிலமணி நேரத்திலேயே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை பட்டினப் பாக்கத்தில் உள்ள கடற்கரைப் பகுதிக்குச் சென்று நேரில் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினார். அவருடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன், நிதித்துறை செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் நட்ராஜ், ஆயுதப்படை போலீஸ் ஐ.ஜி. பாலச்சந்திரன், துணை ஆணையர் சண்முகராஜேஸ்வரன், சென்னை மாவட்டாட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் அதிகாரிகள் உடன் வந்திருந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உடனடியாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, உதவிகளை விரைந்து வழங்குமாறு உத்தரவிட்டார்.

பின்னர், அங்கிருந்து கடல் கொந்தளிப்பால் சீரழிந்து கிடந்த மெரினா கடற்கரையில் தண்ணீரில் மூழ்கி அழிந்துவிட்ட கடற்கரை ஓரமிருந்த கடைகள், மீனவர் குடிசைகள் ஆகிய பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பின்பு நொச்சிக்குப்பம் பகுதிகளையும் பார்வையிட்டார்.

அதன்பின், அங்கிருந்து சென்னை விமான நிலையம் சென்று ஹெலிகாப்டரில் பறந்தபடியே சேதங்களைப் பார்வையிட்டார்.

சென்னை மெரினா கடற்கரை, எண்ணூர், பழவேற்காடு, கோவளம், மாமல்லபுரம் போன்ற இடங்களிலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டார்.

மேலும், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளையும், இறந்தோரின் உடல்களையும் நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கும். இறந்தோரின் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினார். இறந்தவர்களின் உடல்களைப் பிரேத பரிசோதனை யில்லாமல் உடனடியாக ஒப்படைக்கும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையில் மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்



திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி.பொன்னையன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன், குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. நா.பாலகங்கா, துணை மேயர் திரு. கராத்தே தியாகராஜன், சுற்றுலா வாரியத்தலைவர் திரு. ஆதிராஜாராம், சென்னை மாவட்டாட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி அரசு மருத்துவ மனைகளுக்குச் சென்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி முதலமைச்சர் அவர்களின் சார்பில் ஆறுதலையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் வைக்கப்பட்ட உடல்களைப் பார்வையிட்டு இறந்தவர்களின் உறவினர்களுக்கும் அமைச்சர்கள் ஆறுதல் கூறினர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், “மக்கள் யாரும் பீதி அடைய வேண்டாம். தமிழகம் முழுதும் முழுவீச்சில் நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன. கடலோர மாவட்டாட்சியர்களுக்கு உரிய உத்தரவும் அறிவுரைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன’ என்று தெரிவித்தார். மேலும், இதுவரை ஏற்பட்ட சேதத்திற்கு, மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணிகளுக்காக அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி, மாவட்டாட்சி யர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இராணுவம், கடற்படை, கடலோர காவற்படை ஆகிய மத்திய அமைப்புகள் முழுவீச்சில் நமக்கு நிவாரணப் பணிகளில் உதவிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு மத்திய அரசிலிருந்து என்ன உதவி கோரினாலும், அதைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். மேலும், மாநில நிருவாகமும் மாவட்ட நிருவாகமும் முழுவீச்சில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளன. பாதிக்கப்பட்ட இடங்களுக் கெல்லாம் அமைச்சர்களையும் அனுப்பி வைத்துள்ளேன். ஆகவே, மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக அளிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் பீதியடையாமல் தைரியமாக இருக்கலாம்” என்று கூறி மக்களுக்குத் தைரியமும் ஆறுதலும் கூறினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, சென்னை மாநகராட்சி நிர்வாகத்தினர் மூலம் பாதிக்கப்பட்ட பொதுமக்களை உடனடியாக மாநகராட்சிப் பள்ளிகள், திருமண மண்டபங்களில் தங்க வைக்கஏற்பாடு செய்து, அங்கு உணவு, மருத்துவ வசதி,குடிநீர் மற்றும் மின்வசதி ஆகியவை செய்து தரப்பட்டது.

சுனாமியால் சென்னை மாவட்டத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 204. இதில் அடையாளம் காணப்பட்ட 198 நபர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக் கிணங்க அடையாளம் காண்பிக்கப்பட்ட 198 நபர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.1.98 கோடி வழங்கப்பட்டது. மேலும், கடலோரப் பகுதியில் கடல் கொந்தளிப்பால் வீடுகள் பாதிக்கப்பட்ட 17,744 குடும்பங்களுக்குத் தலா ரூ.4,000/–, 60 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேட்டி, 2 போர்வை மற்றும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க 14.1.2005 அன்று மயிலை–திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கண்ட குடும்பங்களுக்கு மேலும் ஒரு டிரங்க் பெட்டி, ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ், ஒரு குடம் ஆகியவை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில்

வழங்கப்பட்டது. அதே போல் வீடுகள் இழப்பு இல்லையென்றாலும், கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல இயலாது தவிக்கும், சுங்கச்சாவடி முதல் திருவான்மியூர் வரை உள்ள 18,144 மீனவக் குடும்பங்களுக்குத் தமிழக அரசு துயர்த் துடைப்பு நிதியாக குடும்பத்திற்குத் தலா ரூ.2,000/– 60 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 புடவை, 2 போர்வைகள், 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆக மொத்தம் ரூ.3 கோடியே 62 இலட்சத்து 88 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிவாரணம் கோட்டை தண்டையார் பேட்டை வட்டத்தில் 5 மையங்களிலும், மயிலை திருவல்லிக்கேணி வட்டத்தில் 6 மையங்களிலும் போர்க்கால அடிப்படையில் வழங்கப்பட்டது. சென்னை மாவட்டத்தின் நிவாரண ஒருங்கிணைப்பாளரும் குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநரும் ஆகிய திரு. அம்புஜ்சர்மா, இ.ஆ.ப., அவர்கள் மேற்பார்வையின் கீழ் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், சென்னையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 35,888. குடும்பங்களுக்குக் கூடுதல் எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க ஆணையிட்டதின் பேரில் ஏற்கெனவே டோக்கன் பெற்று நிவாரணப் பொருட்களைப் பெற்றவர்கள் தங்களின் எல்லைக்குட்பட்ட தாலுகா அலுவலகத்தில் இதற்கான டோக்கனைப் பெற்றுக் குடும்ப அட்டை மூலமாக வழக்கமாக வாங்கும் பொது விநியோகக் கடைகள் மூலம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என சென்னை மாவட்டாட்சியர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழக அரசு சென்னை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.5.82 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் பகுதி இழப்பாகக் கட்டுமரம் மற்றும் வலை ஆகியவைகளை இழந்த 2806 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.2.32 கோடி காசோலையாக இதுவரை வழங்கப்பட்டுள்ளது என மாவட்டாட்சியர் அறிவித்துள்ளார். 40க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அவரவர் தகுதிக்கு ஏற்ப நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தொண்டு நிறுவனங்களின் பங்கு பாராட்டுதலுக்குரியது. பாதிக்கப்பட்ட குடும்பத்திலுள்ள இளம் பெண்களுக்கு இரவில் தங்க வைக்க தனி இடம் ஏற்பாடு செய்து, தாய் தந்தை யற்ற குழந்தைகளைத் தாய் அல்லது தந்தையுடன் தத்து எடுத்து அவர்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்த மாவட்டாட்சியரின் அறிவுரைப்படி அனைத்து உதவிகளும் செய்யப் பட்டது.

தமிழ்நாட்டில் சுனாமியால் உயிரிழந்தோருக்குத் தமிழ்நாடு மக்கள் அனைவரின் சார்பாக இரங்கலையும், அனுதாபத் தையும் தெரிவித்து அஞ்சலி செலுத்தும் வகையில் 12.1.2005 அன்று , மாநில அரசின் சார்பில் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் காலை 10.30 மணிக்கு இரண்டு நிமிட நேரம் மவுனம் கடை பிடிக்கப்பட்டது. தலைமைச் செயலகத்திலும், மாவட்டாட்சியர் அலுவலகத்திலும் மற்றும் வழக்கமாகத் தேசியக் கொடி ஏற்றப்படுகின்ற ஏனைய இடங்களிலும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

– டி.ஆர்.ஜெயஸ்ரீ
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை.



# சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுத் தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் 12.1.2005 அன்று காலை 10.10 மணிக்கு தமிழக அமைச்சரவைக் கூடி, 26.12.2004 அன்று சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டு தங்கள் இன்னுயிரை இழந்தவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தியது. பின்னர், கீழ்க்காணும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சற்றும் எதிர்பாராத வகையில், சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், பல ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்துள்ளனர்.

சுனாமி பேரலைகளின் தாக்குதலால் ஏறத்தாழ 8 ஆயிரம் பேர் விலை மதிப்பற்ற தங்களது இன்னுயிரை இழந்தது குறித்து, தமிழக அமைச்சரவை தனது ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அமைச்சரவை தனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இயற்கையின் சீற்றத்தால் முன் எப்போதும் இல்லாத வகையில், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் திறமுடன் சமாளித்திட, இந்த அமைச்சரவை உறுதி பூணுகிறது. பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அனைவருக்கும், ஒளி மிகுந்த ஒரு புதிய வாழ்வை நிர்மாணித்திட அனைத்துத் தரப்பினரும் தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று தமிழ்நாடு அமைச்சரவை இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறது".

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் அமைச்சர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் ஆகியோர் சுனாமி பேரலைகளால் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

❖

துணி வகைகளில் சிறந்தது...

அதுவே முதலிடமும் வகிப்பது!

உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

கோ-ஆப்டெக்ஸ்



- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!

# சட்டீஸ்கர் மாநிலம் உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சட்டீஸ்கர் மாநிலத்தின் முதலமைச்சர் டாக்டர் ராமன் சிங் அவர்கள் நேரில் சந்தித்து, 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் உயிரிழந்த தமிழக மக்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலையும், உடைமைகளை இழந்த மக்களுக்குத் தமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டார்.





அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக சட்டீஸ்கர் மாநில அரசின் சார்பில் 2,235 டன் அரிசி அனுப்பியமைக்காகத் தமது உளப்பூர்வமான நன்றியை டாக்டர் ராமன் சிங் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், சட்டீஸ்கர் மாநில அரசின் முதலமைச்சர் டாக்டர் ராமன் சிங் அவர்கள் சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் பல உதவிகளை வழங்க முன் வந்துள்ளார். தமிழகத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகள் குறித்து சட்டீஸ்கர் மாநில தலைமைச் செயலாளரும், தமிழக தலைமைச் செயலாளரும் விரிவான ஆலோசனை மேற்கொள்வார்கள். இதன் அடிப்படையில் சட்டீஸ்கர் மாநில அரசு இந்த உதவிகளை வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

# கர்நாடக மாநிலம் உதவி

தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குக் கர்நாடக மாநிலத்தின் சார்பில் அம்மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்கள் 2.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களிடம் 2 கோடி ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.



26.12.2004 அன்று தமிழகக் கடற்கரைப் பகுதியில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. தரம்சிங் அவர்கள், கர்நாடக மாநில அரசின் சார்பில் அம்மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்களைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். தமிழகம் வந்துள்ள கர்நாடக அரசின் வருவாய்த் துறை அமைச்சர் திரு. எம்.பி. பிரகாஷ் அவர்கள், தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களை 2.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, ஆழிப் பேரலையால் ஆற்றொணாத் துயருக்கு ஆளான தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில், கர்நாடக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள். அப்போது, தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காகக் கர்நாடக மாநிலத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள நிதியுதவிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் தமிழக நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ★

# பெருமழையால் பாதிக்கப்பட்டோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி



தமிழ்நாட்டில் 2004ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுதல், மின்சாரத்தால் தாக்கப்படுதல், ஆற்றில் மூழ்குதல், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுதல், இடி மின்னல் தாக்குதல் முதலான பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 102 நபர்களின் குடும்பங்களுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் மொத்தம் 51 இலட்சம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவியாக வழங்கியுள்ளேன்.

2004ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் போது, மேலும் 23 நபர்கள் மரணமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், வறுமையில் வாடுகின்ற இவர்களது குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் அந்தந்த மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், எஸ். சந்திராபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னசாமி என்பவரது மகள் செல்வி தேவி என்பவர் கடந்த 13.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், தூக்கணாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வாழ்முனி என்பவரது மகன் வி. ஏழுமலை என்பவர் கடந்த 10.11.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், செல்லன்சேரி கிராமம், மந்தைவெளி காலனியைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரது மகன் ஆர். முனுசாமி என்பவர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கீழ்மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகையன் என்பவரது மனைவி திருமதி. கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 20.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, பெரிய கோட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கப்ப உடையார் மகன் ராஜேந்திரன் என்பவர் 27.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும், ஒரத்தநாடு, வடக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரது மகன் பஞ்சாட்சரம் என்பவர் 20.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்துரை என்பவரது மகன் நவீன்குமார் மற்றும் மகள் பேபி பவித்ரா ஆகிய இருவரும் கடந்த 31.10.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், விழுப்புரம் வட்டம், கணம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரோமன் என்பவரது மகன் ஜோசப் என்பவர் கடந்த 7.11.2004 அன்று ஏரியில் மூழ்கியும், அய்யூர் அகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரது மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 9.11.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், கள்ளக்குறிச்சி வட்டம், அந்தியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பன் என்பவரது மகன் அய்யாகண்ணு என்பவர் கடந்த 11.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், திண்டிவனம் வட்டம், டி. பாஞ்சாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரது மகன் கண்ணு என்ப்வர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமம், பாடசாலை தெருவைச் சேர்ந்த திரு. பிரம்மபிள்ளை என்பவரது மனைவி திருமதி பாப்பா என்பவர் 24.10.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், நாங்குநேரி வட்டம், ஏர்வாடி பகுதி–1 கிராமத்தைச்

சேர்ந்த திரு. பெருமாள் என்பவரது மனைவி திருமதி. பன்னீர்செல்வம் என்பவர் கடந்த 13.11.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம், ஆறுமுகம்பட்டியைச் சேர்ந்த திரு. பாபநாச நாடார் என்பவரது மகன் அன்பழகன் என்கிற சேகர் என்பவர் 27.10.2004 அன்று சுவர் இடிந்து விழுந்தும்,

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை சாலை, ராணி அண்ணா காலனியைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரது மனைவி திருமதி. ராணி என்பவர் கடந்த 24.10.2004 அன்று ஆற்றில் மூழ்கியும், ராஜபாளையம், சொக்கலிங்கபுரம், சிவலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமர் நாயக்கன் என்பவரது மனைவி குருபாக்கியம் என்பவர் கடந்த 19.10.2004 அன்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும்,

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பழமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்ப பிள்ளை என்பவரது மகன் வெங்கடேசன் என்பவர் கடந்த 11.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஆமிதாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோதண்டன் என்பவரது மகன் சிவலிங்கம் என்பவர் கடந்த 31.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆனைக்கவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜு என்பவரது மகன் அர்ஜுனன் என்பவர் கடந்த 27.10.2004 அன்று மின்சாரம் தாக்கியும்,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பொன்னமராவதி (மேற்கு) கிராமத்தைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவரது மனைவி திருமதி. அகிலா என்பவர் கடந்த 18.10.2004 அன்று இடி மின்னல் தாக்கியும்,

தேனி மாவட்டம், பெரியகுளம், அழகர்சாமிபுரம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரது மனைவி திருமதி. புஷ்பம் என்பவர் கடந்த 10.10.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும்,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சித்தலகுண்டு கிராமத்தைச் சேர்ந்த திரு.கன்னியப்பக் கோனார் என்பவரது மகன் மாரிக் கோனார் என்பவர் கடந்த 14.11.2004 அன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங் களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமானவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/– ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 18–1–2005



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 109ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 22–1–2005 அன்று சென்னையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் இரண்டு மீன் இறங்கு தளம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டிலும், கடலூர் மாவட்டம் முடசலோடையிலும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் மொத்தம் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள இரண்டு மீன் இறங்கு தளங்களை (Fish Landing Centres) திறந்து வைத்தார்கள்.

கடலுக்குள் சென்று இயற்கையுடன் போராடி மீன் பிடித்து வருகின்ற மீனவர்கள், தாங்கள் பிடித்து வரும் மீன்களை எளிதாகக் கரையிறக்க வேண்டும். சுகாதாரமான முறையில் அவற்றைக் கையாள வேண்டும். கடலுக்குள் சென்று மீன் பிடித்து வரத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர்கள் ஒரே இடத்தில் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மீன் இறங்கு தளங்களை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இந்த ஆணையின்படி திருவள்ளூர் மாவட்டத் திலுள்ள பழவேற்காடு, கடலூர் மாவட்டத் திலுள்ள முடசலோடை ஆகிய இரண்டு இடங்களில் மொத்தம் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மீன் இறங்கு தளங்களில் நவீன முறையில் அமைக்கப்பட்ட மீன் இறங்கு சாய்தளம், உலர்கூடம், மீன் விற்பனைக்கான ஏலக் கூடம், குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த மீன் இறங்கு தளங்களில் மின் வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சாலை வசதிகள் முதலான உள்கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாகச் செய்யப் பட்டுள்ளன. பழவேற்காடு மீன் இறங்கு தளத்தில் மீன் பிடி விசைப் படகுகளுக்கு என்று தனியே ஒரு எரி எண்ணெய் நிரப்பும் நிலையம் (Diesel Fuel Station) அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் மொத்தம் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள, திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மற்றும் கடலூர் மாவட்டம் முடசலோடை மீன் இறங்கு தளங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தொடங்கி வைத்தார்கள்.

பழவேற்காடு மீன் இறங்கு தளத்தின் மூலம் அப்பகுதியில் உள்ள 14 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 3,000 மீனவர்களும், முடசலோடை பகுதியில் 7 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 2,000 மீனவர்களும் பயனடைவார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம், தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் ஆகிய இடங்களில் இத்தகைய மீன் இறங்கு தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுக் கடந்த ஆண்டு (2003) அவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டியன்பட்டினம், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் சோழியக்குடி, நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் ஆற்காட்டுத்துறை ஆகிய இடங்களில் மீன் இறங்கு தளங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. எம்.ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்ங்கர் இ.ஆ.ப., மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் திரு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★





# உடல் ஊனமுற்றோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 2003–ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உடல் ஊனமுற்றோருக்கான பிரிட்டிஷ் ஓப்பன் தடகள விளையாட்டில் பங்கேற்ற ஊனமுற்ற விளையாட்டு வீரர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 1 இலட்சம், பீகாரில் கள்வர்களால் சுடப்பட்டு 2 கண்களையும் இழந்த திருவண்ணாமலை மாவட்டம் தஸ்தகீர் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ரூ.1 இலட்சம், காவல் துறை ஆயுதப் படையில் பணியாற்றி மரணமடைந்த திரு. பன்னீர்செல்வம் அவர்களது குடும்பத்திற்கு நிதி உதவியாக ரூ.1 இலட்சம், காவல் துறையில் தலைமைக் காவலராகப் பணியாற்றி மரணமடைந்த திரு. ஜெயராமன் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம், கட்டுமானப் பணி, நிலச்சரிவு, சுவரிடிதல், மின் தாக்குதல், விஷ வாயுத் தாக்குதல், தீ விபத்து முதலியவற்றால் பாதிக்கப்பட்டு மரண மடைந்த 19 பேர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூபாய் 4 இலட்சத்து 29 ஆயிரம், கல்வி உதவியாக 3 பேர்களுக்கு ரூ.85,000, மருத்துவச் சிகிச்சைக்காக 6 பேர்களுக்கு ரூ.1,05,000, சுய தொழில் தொடங்கி வர்ழ்க்கை நடத்துவதற்கு 4 பேர்களுக்கு ரூ.70,000 ஆக மொத்தம் ரூபாய் 10 இலட்சத்து 89 ஆயிரம் நிதி உதவிக்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில், தாங்கள் படும் இன்னலை எடுத்துக் கூறி, தங்களது துயர் நீங்கும் வகையில் நிதியுதவி வேண்டி, நேரில் அளிக்கப்பட்ட மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்காணும் நிதி உதவியை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்கள்.

இந்த நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்ட அனைவரும், தங்க்ளது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்துக் கொண்டனர்.

❖ ❖ ❖

# பாதிக்கப்பட்டோர் புது வாழ்க்கைத் தொடங்க நிவாரணப் பொருட்கள் வழங்கல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (11.1.2005)



26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சற்றும் எதிர்பாராத வகையில் சுனாமி பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில், கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் வாழுகின்ற மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இந்தப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் தங்களது உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டன.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மீண்டும் புதிதாக வாழ்க்கைத் தொடங்குவதற்கு ஏதுவாக இதுவரை 302 கோடியே 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து பல்வேறு நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளை எனது அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு, வீடு மற்றும் உடைமைகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5,000 ரூபாய் மதிப்பிலும், வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும் தங்களது பிழைப்பு ஆதாரங்களை இழந்து விட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 8,000 ரூபாய் மதிப்பிலும் உடனடி நிவாரண உதவிகள் எனது ஆணையின் பேரில் வழங்கப்பட்டுள்ளது.

வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்கள் புது வாழ்வு தொடங்கிட அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித்தரப்படும் வரையில் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 8,000 ரூபாய் மதிப்பில் தற்காலிகக் குடியிருப்பு ஒன்றை ஒரு வார காலத்திற்குள் கட்டித்தர நான் ஆணையிட்டுள்ளேன்.

அரசு வழங்குகின்ற பல்வேறு நிவாரண உதவிப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் டிரங்குப் பெட்டி ஒன்றை வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமையல் செய்வதற்காக ஒரு மண்ணெண்ணெய் அடுப்பும் (ஸ்டவ்) குடிதண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வதற்காக ஒரு எவர்சில்வர் குடமும் வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன். சுனாமி பேரலைகளின் பாதிப்பால் வீடு மற்றும் அனைத்து உடைமைகளையும் இழந்துள்ள 1.5 இலட்சம் குடும்பங்களுக்கும் டிரங்குப் பெட்டி, மண்ணெண்ணெய் ஸ்டவ், எவர்சில்வர் குடம் ஆகிய இந்த உதவிப் பொருட்களை வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தப் பொருட்களை வழங்கும் பணி, இம்மாதம் (ஜனவரி)14–ஆம் தேதி, அதாவது பொங்கல் திருநாள் அன்று தொடங்கப்பட்டு, வரையறுக்கப்படுகின்ற கால மற்றும் இட அட்டவணைப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு மற்றும் உடைமைகளை இழந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டு வீடு மற்றும் உடைமைகளை இழந்துள்ள 1.5 இலட்சம் குடும்பங்கள் பயன் அடையும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 600 ரூபாய் மதிப்பிலான இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு 9 கோடி ரூபாய் ஆகும். □




AMBULANCE












தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518